# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 20 செவ்வாய்க்கிழமை (04.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 039


# குடாநாட்டை அச்சுறுத்தும் கொலைகள் குறித்து

# நாடாளுமன்றில் நாளை கவனயீர்ப்புப் பிரேரணை

## கூட்டமைப்பு அவசர நடவடிக்கை

கொழும்பு,ஜனவரி04

யாழ். குடாநாட்டில் தொடர்ந்து இடம்பெற்று வரும் கொலை, கொள்ளைகள், ஆள்கடத்தல் ஆகியவை தொடர்பாக நாளை நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவனயீர்ப்புப் பிரேரணை ஒன்றை கொண்டுவரவுள்ளது. இதற்கு பிரதமர் டி.எம்.ஜயரத்ன உடனடியாகப் பதிலளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டில் கடந்த சில வாரங்களாகக் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் ஆகியவை உள்ளிட்ட மக்களை அச்சுறுத்தும் பல்வேறு அடுத்தடுத்து சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

வடக்கில் இராணுவ சோதனைச் சாவடிகள் இன்னும் முழுமையாக அகற்றப்படாத நிலையில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றமையால் மக்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரசின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகவும், குடாநாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவசர அவசரமாக நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதன் முதற்கட்டமாக நாடாளுமன்றத்தில் கவனயீர்ப்புப் பிரேரணை ஒன்றுக்கான முன்னறிவித்தல் கொடுக்கப்

(27 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் பொலிஸின் இரவு ரோந்து உடனடியாக நடைமுறைப்படுத்த அறிவுறுத்து

## அரச அதிபர் அவசர நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ்ப்பாணத்தில் இரவு நேரத்தில் பொலிஸ் ரோந்து இடம்பெறுவதாக பொலிஸ் நிலையங்களினால் தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அவ்வாறு எதுவும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை என்று யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு நாள்களாக திடீர் பரிசோதனை நடவடிக் கையாக தாம் இரவு வேளைகளில் நகரைச் சுற்றிப்பார்த்த வேளை களில் பொலிஸாரின் ரோந்துப் பணி எதுவுமே இடம்பெற வில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள், மது பாவனையாளர்கள் ஆகியோர் வாசிகசாலைகள் மற் றும் பொது இடங்களில் தவறான நடத்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இரவு வேளை களில் பெண்கள் வீதியில் செல்ல முடியாதவாறு தவறான வார்த்தைப் பிரயோகங்களிலும், தவ றான நடத்தைகளிலும் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைக ளில் ஈடுபடுபவர்களினால் கலா சாரப் பாதிப்புகளும் ஏற்படுகின்றன. இவர்கள்

(27 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு மாநகர சபைக்கு பொதுவேட்பாளர் அனோமா

கொழும்பு, ஜன. 04

கொழும்பு மாநகர மேயர் பதவிக்கு எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக அனோமா பொன்சேகாவை நிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று ஜனநாயக தேசிய முன்னணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக முன்னாள் இராணுவத் தளபதி

(27 ஆம் பக்கம் பார்க்க)

# தேங்காய் இறக்குமதி இல்லை

கொழும்பு, ஜன. 04

இந்தியாவின் கேரள மாநிலத்தில் இருந்து தேங்காயை இறக்குமதி செய்யும் திட்டத்தை அரசு ஒத்தி வைத்துள்ளது.

தெங்கு ஆராய்ச்சி சபை தெரிவித்த எதிர்ப்பை அடுத்து

(27 ஆம் பக்கம் பார்க்க)

# முன்னாள் போராளிகள் 703 பேருக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை

## பாதுகாப்பு அமைச்சு வட்டாரம் தகவல்

கொழும்பு, ஜன. 04

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்த மற்றும் கைதுசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்களில் 703 பேருக்கு எதிராக வெகு விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என பாதுகாப்பு அமைச்சு வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு படையினரிடம் சரணடைந்த - கைது செய்யப்பட்டவர்களில் சிரேஷ்ட விடுதலைப் புலி உறுப்பினர்களும் அடங்குவர். இவர்கள் ஓமந்தை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

அரச படையினருடனான யுத்தத்தின்போது புலிகளின் தாக்குதல்களுக்குத் தலைமை வகித்தமை, குண்டுத் தாக்குதல்களை நடத்தியமை, புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டமை ஆகியவை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க முடிவாகியுள்ளது.

இவர்கள் தொடர்பில் பொலிஸார் பல்வேறு கோண ங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும், விரைவில் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அமைச்சின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# உள்ளூராட்சித் திருத்தச் சட்டமூலத்தை பிற்போடக் கோருகின்றது ஐ.தே.க.

கொழும்பு, ஜன.4

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்ட மூலத்தை இன்றைய தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காது அதை வேறொரு தினத்தில் சமர்ப்பிக்குமாறு ஐ.தே.க. எம்.பி. ஜோன் அமரதுங்க நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்தை செவ்வாய்க்கிழமை (இன்று) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக நாம் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்தாலோசித்தோம்.

இத்திருத்தச் சட்டமூலத்திற்கு அமைவாக எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடைபெறாது. அப்படியிருக்கும் போது அவசர அவசரமாக இச்சட்டமூலத்தை நாடாளுமன்றத்திற்கு கொண்டுவரவேண்

(27 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கவின் நிர்வாகிகள் தெரிவு தேர்தலுக்கு முன்னரா, பின்னரா?

## இம்மாத செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, ஜன.04

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய ஐந்து நிர்வாகிகளைத் தெரிவுசெய்வது உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னரா அல்லது பின்னரா என்று இந்த மாதம் கூடும் கட்சியின் செயற்குழு தீர்மானிக்கும் என்று அக்கட்சி நேற்றுக் கூறியது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும், எம்.பியுமான கயந்த கருணாதிலக இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2005ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டுவரை இந்த அரசு இந்த நாட்டு மக்களுக்கு எதுவித நல்ல காரியங்களையும் செய்யவில்லை. நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. பொருள்களின் விலைகள் குறைக்கப்படவில்லை.

2011ஆம் ஆண்டு கூட பொருள்களின் விலைகள் குறைக்கப்படாத - மக்கள் மீது சுமை ஏற்றப்பட்ட ஆண்டாகவே அமையும்.

மக்களால் தொடர்ந்தும் வாழ்க்கைச் சுமையைச் சுமக்க முடியாது. அவர்களுக்கு உடன் நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பு மறுசீரமைக்கப்பட்டதும்

(27 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள்

## அரச ஊழியர்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்து

கொழும்பு, ஜன. 04

''இந்த நாட்டை விடுவிக்க நாம் செய்த அர்ப்பணிப்பை விட, இந்த நாட்டைக் கட்டியெழுப்ப பல மடங்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியுள்ளது'' - இப்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். ஜனாதிபதி செயலக ஊழியர்கள் புதிய வருடத்தில் கடமைகளை ஆரம்பிக்கும் வைபவத்தில் நேற்றுக் காலை உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

''இந்த நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளில் அரசு ஊழியர்களுக்குப் பெரும் பொறுப்புகளுண்டு.

எனவே, நாட்டை விடுவித்ததைப் போலவே நாட்டைக் கட்டியெழுப்பவும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அரச ஊழியர்களின் கடமையாகும். அதேபோல் இன்று ஆரம்பமாகும் தசாப்தத்தில் நாட்டு மக்களுக்காக அளப்பரிய பங்களிப்பை நல்க அரச ஊழியர்கள் அணி திரள வேண்டும்.''

-இவ்வாறு அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

# வடக்கு, கிழக்கு அரச ஊழியர்களுக்கும் நிவாரணம் வழங்குமாறு கோரிக்கை

அம்பாறை, ஜன.4

வடக்கு - கிழக்கில் பெய்து வரும் அடைமழை, வெள்ளப் பெருக்குகாரணமாகப் பாதிக்கப் பட்டுள்ள அரச சேவை மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களுக் கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங் கம் கோரிக்கைவிடுத்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்தராஜ பக்ஷவுக்கு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங் கம் அனுப்பிவைத்துள்ள அவசர மகஜர் ஒன்றில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் சார்பின் தலைவர் எஸ்.யோகநாதன் இந்த மக ஜரை அனுப்பிவைத்துள்ளார்.

மழை, வெள்ளத்தால் வடக்கு- கிழக்கின் பாதிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கு வெள்ள நிவாரணம் உட்பட இதற்கென சம்பள முற்பணம் கடன் ஒன்றை வழங்க வேண்டுமென வும் மகஜரில் வலியுறுத்தப்பட் டுள்ளது அத்துடன் அதற்கென பொது நிருவாக உள்நாட்டலு வல்கள் அமைச்சினூடாக பாதிக்கப்பட் டுள்ள பிரதேசங்க ளைக் குறிப்பிட்டு தெளிவான சுற்றறிக்கை யொன்றை வெளி யிட ஆவன செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது.

மகஜரில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

மழைவெள்ளத்தால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு அரசும், தொண்டு நிறுவனங்களும் நிவாரண உதவிகளை நல்கி வரும் நிலையில், பாதிக்கப் பட்ட அரச ஊழியர்கள் பெரி தும் கவனத்தின் கொள்ளப்பட வில்லை.

அரசு இந்த விடயத்தில் ஆக்க பூர்வமான நடவடிக்கை மேற் கொள்ளவேண்டும் - இவ்வாறு மக ஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிருவாக உள்நாட்ட லுவல்கள் அமைச்சர் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர்கள், தலைவர், பொதுச்சேவை தொழிற் சங்கம் சம்மேளனம், அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ஆகியோருக்கும் மகஜரின் பிரதி கள் அனுப்பிவைக்கப்பட்டுள் ளன. (ஒ -30)

## நல்லவை நடக்க வேண்டி...



புதிய பயணம்: புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதி அலு வலகத்தின் நடவடிக்கைகள் நேற்றுத் திங்கட்கிழமை சமய அனுஷ்டானங்களுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலை மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பௌத்த குருமாரிடம் ஆசி பெறுகின்றார்.

# 13 ஆவது திருத்தச் சட்டத்துக்குள் அரசியல் தீர்வு மாகாணசபைகளுக்கு மட்டுப்படுத்திய அதிகாரம்

## அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தகவல்

கொழும்பு,ஜன.4

மாகாணசபைகளுக்கு மட் டுப்படுத்தப்பட்ட காவல்துறை அதிகாரங்களை வழங்குவதற் கும் இலங்கை அரசாங்கம் தயா ராக இருப்பதாக அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம் புக்வெல இலங்கையின் அரச ஊடகம் ஒன்றுக்கு தகவல் வெளியிடுகையில்-

மாகாணசபைகளுக்கு மட் டுப்படுத்தப்பட்ட காவல்துறை அதிகாரங்களை வழங்குவதற் கும், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அரசியல்தீர்வின் ஆரம்பக் கட்டமாக நடை முறைப்படுத்தவும் அரசாங்கம் தயாராக உள்ளது.

இது குறித்து தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புக்கு ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ வெளிப் படையாகக் கூறியுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டக் கட்டமைப்புக்குள் ஓர் அரசி யல் தீர்வுத்திட்டத்தை முன் வைக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் தடைகள் ஏதும் இருப்பின் அவற்றைக் களைவ தற்கான சட்டங்கள் வகுக்கப் படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

மாகாணசபைகளுக்கு ஒரு போதும் காவல்துறை, காணி அதிகாரங்களை வழங்கப் போவ தில்லை என்று அரசாங்கம் இது வரை கூறிவந்தது. தற்போது மட்டுப்படுத்தப்பட்ட காவல் துறை அதிகாரங்களை வழங்கத் தயார் என்று அது அறிவித்துள் ளது குறிப்பிடத்தக்கது. (த)

# வெளிநாட்டு சிகரெட்டுக்களை வைத்திருந்த இருவருக்கு 3 லட்சம் ரூபா அபராதம்

## யாழ். நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ்ப்பாணத்தில் பெரும் எண்ணிக்கையான வெளிநாட் டுச்சிகரெட்டுக்களுடன்கைதான இருவருக்கு மூன்று லட்சத்து 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது.

சவூதி அரேபியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிக ரெட்டுக்களை யாழ்ப்பாணத் துக்கு எடுத்துவந்த முஸ்லிம் வர்த்தகர்கள் குறைந்த விலை யில் யாழ்.வர்த்தகர்கள் இருவ ருக்கு விற்பனை செய்துள்ளனர்.

இந்த வகையில் 6,240 சிக ரெட்டுகள் வைத்திருந்த ஒரு வரையும் 720 சிகரெட்டுகள் வைத்திருந்த ஒருவரையும் யாழ். பொலிஸார் கைதுசெய்து யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ ஆனந் தராஜா முன் நேற்று ஆஜர் செய் தனர்.

தடைசெய்யப்பட்ட இந்த சிகரெட்டுகளை வைத்திருந் ஒருவருக்கு புகையிலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆகக் குறைந்த அபராதமாக 10 இலட் சம் ரூபா விதிக்கமுடியும். எனி னும் இந்த சிகரெட்டுகள் குறித்த விவரம் அறியாமல் இவர்கள் சிகரெட்டை கொள்வனவு செய் துள்ளனர். அவர்களுக்கு அபரா தத்தைக் குறைக்க வேண்டும் என்று அவர்கள் சார்பில் ஆஜ ரான சட்டத்தரணி சர்மினி ஸ்ரீவிருந்திரன் விண்ணப்பம் செய்தார்.

இதை ஏற்று, நீதிவான் ஒரு வருக்கு ஒருலட்சத்து 95 ஆயி ரம் ரூபாவையும் மற்றவருக்கு ஒருலட்சத்து பத்தாயிரம் ரூபா வையும் அபராதம் விதித்தார்.

யாழ்ப்பாணத்தில் இத் கைய வழக்கு நேற்றே முதல் முதலாக தாக்கலானது குறிப் பிடத்தக்கது. (ஒ-ஐ)

# வீடு திரும்பிய சிறுமியை மறித்து தோட்டைத் திருடுவதற்கு முயற்சி

நவாலி, ஜன.4

ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் வீதியில் பாலர்பாடசாலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சிறுமியின் தோட்டை அபகரிக்க எடுத்த முயற்சி கைகூடவில்லை. என்று தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற் றுள்ளது. மேற்படி சிறுமி பாடசாலை முடிந்து வீடு சென்றுகொண் டிருந்த வேளை சைக்கிளில் வந்த நபர் ஒருவர் சிறுமியை ஏற்றிச் செல்வதாக்க கூறி அவரது காதில் இருந்த தோட்டை அபகரிக்க முயன்றுள்ளார்.

இதன் போது குறித்த சிறுமியின் பேர்த்தியார் வீதியால் வந்த போது சிறுமியை தள்ளி வீழ்த்திவிட்டு திருடன் தப்பிச் சென்றுள் ளான். (ஒ-10-100)

## முன்பள்ளி ஆசிரியர் விபரம் திரட்டல்

தென்மராட்சி, ஜன.4

தென்மராட்சி பிரதேச முன் பள்ளி ஆசிரியர்களின் சுயவிவரப் படிவம் வலயக் கல்வி அலுவல கத்தினால் திரட்டப்படவுள்ளன.

# தமிழ்க் கட்சிகள் ஒரே அணியில் போட்டியிடுவது குறித்துப் பேச்சு

## உள்ளூராட்சித் தேர்தல்களில்

கொழும்பு, ஜன. 04

உள்ளூராட்சிச் சபைத் தேர் தல்களில் தமிழக் கட்சிகள் இணைந்து ஒரு முன்னணியா கப் போட்டியிடுவது குறித்து பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்படும் என்று தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்ட மைப்பின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரி வித்தார்.

புளொட் அமைப்பின் தலை வர் சித்தார்த்தன், தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராஜா வுக்கு இந்த வாரத்துக்குள் மேற்படி விடயம் தொடர்பாக அழைப்பு விடுப்பார் என்றும், அந்த அழைப்பை கூட்ட மைப்பு ஏற்றுக்கொண்டால் பேச்சுகளை இந்த வாரத்தி லேயே நடத்தத் தீர்மானித்துள் ளோம் என்றும் அவர் கூறினார். இது தொடர்பாக அவர் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சிச் சபைத் தேர் தல் மற்றும் எதிர்காலத் தேர்தல் களில் தமிழ்க் கட்சிகள் இணைந்து ஒரு முன்னணியாக போட்டியி டுவது குறித்த யோசனை தொடர்பாக புளொட், ஈ.பி. ஆர்.எல்.எவ். உள்ளிட்ட கட்சிக ளுடன் பேச்சு நடத்தினேன். இந்த விடயம் குறித்து கூட்டமைப் பினர் ஆர்வமும், அக்கறையும் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

அத்துடன், ஈ.பி.டி.பி. மற் றும் சி.எம்.வி.பி. ஆகிய கட்சிக ளுடனும் பேச்சு நடத்தப்படும். எதிர்வரும் தேர்தல்களில் எம் முடன் இணைந்து செயற்பட விரும்புவோர் இணையலாம். அரசுடன் இணைந்து செயற் படுவோர் அரசுடன் இணைய லாம். ஆனால் எம்முடனும், அர சுடனும் இணைந்து செயற்பட விரும்புவோர் இரண்டு படகுக ளில் இரண்டு கால்களை வைத் துக்கொண்டு பயணிக்கும் செயலாகும் - என்றார்.

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச் சாளர் சட்டத்தரணி சுரேஷ் பிரே மச்சந்திரன், "தமிழ்த் தேசிய விடுதலை கூட்டமைப்புடன் சேர்ந்து அவ்வாறான ஒரு அழைப்பு இதுவரை எமக்கு விடுக்கப்படவில்லை. அவ் வாறு அழைப்பு விடுக்கப்பட் டால் அவர்களுடன் இணைந்து செயற்படத் தயார். அதே வேளை, தமிழ்த் தேசியக் கூட் டமைப்பினருடன் இணைந்து செயற்பட விரும்புவோர் தாமத மின்றி இணைந்து செயற்பட லாம். எவருக்கும், எவ்விதத் தடைகளும் இல்லை. அத்துடன் எம்.கே.சிவாஜிலிங் கம் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடன் இணைந்து செயற் பட விரும்பினால், அது குறித்து அவருடன் பேச்சு நடத்த நாம் தயார்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

## ஆளும் கட்சிக்கு அடிக்கு மேல் அடி

# அநுராதபுரம் மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டமும் தோல்வி

கொழும்பு, ஜன. 04

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அதிகாரத்தின் கீழுள்ள அநுராதபுரம் மாநகர சபையின் வரவு - செலவுத் திட் டம் இரண்டாவது தடவையாக வும் தோற்கடிக்கப்பட்டுள்ளது. ஒரு வாக்கினால் இந்த வரவு- செலவுத் திட்டம் தோற்கடிக்கப் பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்டம் தொடர்பாக நேற்று இடம் பெற்ற வாக்கெடுப்பின்போது ஆதரவாக 6 வாக்குகளும், எதி ராக 7வாக்குகளும் பதிவு செய் யப்பட்டிருந்தன. இதில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மூவரும், மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் மூவ ரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒரு வரும் வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்க ளித்துள்ளனர்.

அநுராதபுரம் மாநகர சபையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்பின் உறுப் பினர் அனுருத்திகா திஸாநாயக் காவே இந்தத் தடவையும் எதி ராக வாக்களித்தார்.

கடந்த டிசெம்பர் 28ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அநுராதபுரம் வரவு-செலவுத் திட்டமும் தோற் கடிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.இந்நிலையில் நேற்று சமர்ப் பிக்கப்பட்ட வரவு- செல வுத் திட்டமும், இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக் கப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதப்பட்டியலில் புலிகள் அமைப்பை நீக்கக் கோரி பிரான்ஸில் கையெழுத்துப் போர்

### அந்நாட்டு தமிழர் நடுவத்தினரால் ஏற்பாடு

கொழும்பு, ஜன.4

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகள் அமைப்பை நீக்கக் கோரும் கையெழுத்துப் போராட்டம் ஒன்று பிரான்ஸில் ஆரம்பமாகியுள்ளது.

இவ் வெகுசனப் போராட்டம் ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸிலுள்ள தமிழர் நடுவத்தினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய தமிழ்ச் சமூகத்தின் ஜனநாயகச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் ஐரோப்பிய ஒன்றியம், தனது பயங்கரவாதப் பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தை நீக்கவேண்டும் எனக் கோருவதே இப்போராட்டத்தின் நோக்கமாகும்.

இப்போராட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகள், பொது அமைப்புப் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில், ஆறுமாதங்களுக்கு ஒரு தடவை ஐரோப்பிய ஒன்றியத்தினால் புதுப்பிக்கப்பட்டு வரும் பயங்கரவாதப் பட்டியல் தொடர்பிலான முடிவினைக் கருத்தில் கொண்டு, எதிர் வரும் மே மாதத்திற்கு முன்னர் புலிகள் அமைப்பை பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீக்கக் கோரும் மக்கள் கையொப்பங்களை ஐரோப்பிய ஒன்றியத்திடம் ஒப்படைப்பதென்றும் தொடர்ச்சியாக பல்வேறு வழிகளிலும் இதற்கான முயற்சிகளை மேற்கொள்வது என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

# புதிய சிஹல உறுமய கட்சியின் தலைவர் பிணையில் விடுதலை

கொழும்பு,ஜன.4

புதிய சிஹல உறுமய கட்சியின் தலைவர் சரத் மனமேந்திரா விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

முச்சக்கர வண்டி சாரதியொருவர் வெலிக்கடைப் பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கமைய இவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயுத முனையில் அச்சுறுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸார் கூறினார்.

இந்தச் சம்பவம் குறித்து இரண்டு தரப்பினரையும் நேற்று காலை வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய இரண்டு தரப்பினரும் சமாதானமடைந்ததாக பொலிஸார் குறிப்பட்டனர். (த)

## உலகின் சாதனை...



கௌரவிப்பு: தொடர்ந்து 14 ஆண்டுகளாக தொலைக்காட்சியில் மருத்துவம் தொடர்பான ஆலோசனைகளை வழங்கிய ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன கின்னஸ் சாதனை படைத்துள்ளார். இவருக்கு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் வாழ்த்து தெரிவிக்கின்றனர்.

# வெளிநாடுகளுக்கு ஆள்களைக் கடத்திய மலேசிய வாசி கட்டுநாயக்காவில் கைது

கொழும்பு,ஜன 04

ஆள்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் மலேசியாவைச் சேர்ந்த சந்தேக நபரொருவரை கடந்த சனிக்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சட்ட விரோதமான முறையில் ஆள்களை கடத்தியுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, சந்தேகநபரை நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (த)

# மற்றொரு பற்சிகிச்சை நிபுணர் சாவகச்சேரிக்கு

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு மேலும் ஒரு பற்சிகிச்சை நிபுணர் நியமிகப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி ஆதார வைத்திய சாலையில் கடமையாற்றிய பற்சிகிச்சை நிபுணர் என்.கந்தசுகுமாரி இடமாற்றம் பெற்று கடந்த முதலாம் திகதி முதல் இங்கு கடமைகளைப் பெறுப்பேற்றுள்ளார்.

ஏற்கனவே இந்த வைத்திய சாலையில் பல் வைத்திய நிபுணர் ஒருவர் கடமையாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-207)

# யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலை; ஆராய உயர்மட்ட மாநாடு விரைவில்

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ்ப்பாணத்தின் தற்போதையநிலை தொடர்பாக ஆராய்வதற்கான உயர்மட்ட மாநாடு ஒன்று விரைவில் இடம்பெற இருப்பதாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் தற்போது இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்கள் தொடர்பாக அரச அதிபரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

யாழ். குடா நாட்டில் இடம் பெற்றுவரும் கொலைகள், கொள்ளைகள், கடத்தல்கள் என்பனவற்றை உடனடியாகத் தடுத்துநிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

அத்துடன் இராணுவத் தளபதி மற்றும் சிரேஷ்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் விடுமுறையில் சென்றிருப்பதால் அவர்களுடன் உடனடியாக இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாட முடியவில்லை. மிக விரைவில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும்.

அத்துடன் குற்றச் செயல்களில் ஈடுபடுவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். மேலும் இடம் பெறும் மாநாட்டில் காத்திரமான முடிவு எடுக்கப்படும் - என்றார். (த-15)

# வயாவிளான் கிழக்குப் பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன. 4

உயர் பாதுகாப்பு வலயமான வயாவிளான் கிழக்கில் கண்ணிவெடி அகற்றப்பட்டதற்கான சான்றிதழ் கிடைத்துள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

வலி.வடக்கில் இருபது வருடங்களின் பின்னர் தற்போது மீள் குடியமர்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. கடந்த வருடம் நவம்பர் மாதம் 27ஆம் திகதி இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய இடங்களில் 957 குடும்பங்கள் வரையில் மீள்குடியமரச் செய்யப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக வயாவிளான் கிழக்கில் மிதிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் கிடைத்துள்ளமையினால் அங்கும் மக்கள் மிக விரைவில் குடியமர்த்தப்பட உள்ளனர்.

வலி.வடக்கில் கண்ணிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் கிடைக்காமையினால் இது வரை காலமும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தாமதமாகி வந்தன. தற்போது ஒவ்வொரு பிரதேசமாகக் கண்ணிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் கிடைக்கப்பெற்றதும் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன- என்றார்.

இதேவேளை,

கண்ணிவெடி அகற்றும் பிரிவின் செயற்பாடுகள் வேகமாக இடம்பெற்று வருவதாகவும், இருப்பினும் அவர்கள் மிக விரைவில் கண்ணிவெடிகளை அகற்றிப் பிரதேசங்களை ஒப்படைப்பதற்கு ஆள்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-15)

# அனுராதபுரம் மாநகர சபையின் வரவு-செலவுத் திட்டம் தோல்வி

கொழும்பு,ஜன.4

மாநகரசபையின் வரவு-செலவுத் திட்டங்களில் தோல்வி அடையும் அரசாங்கத்தின் பயணம் தொடர்கின்றது

அனுராதபுரம் மாநகர சபையின் வரவு-செலவு திட்டம் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆளும் கட்சியின் உறுப்பிணர் ஒருவர் வரவு-செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களித்ததன் மூலம் வரவு-செலவுதிட்டம் தோற்கடிக்கப்பட்டதாக பிரதி மேயர் எச்.பீ.சோமதாஸ குறிப்பிட்டார்.

கடந்த 28 ஆம் திகதி வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அப்போது ஆளும் கட்சி 7 ஆசனங்களையும், எதிர் கட்சி 6 ஆசனங்களையும் பெற்றதாக அவர் கூறினார்.

கடந்த பொதுதேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் பின்னர் ஆளுங்கட்சியில் இணைந்து கொண்டதாக பிரதி மேயர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் கட்சியில் இருந்து நீக்கப்படாத அந்த உறுப்பினர் 2011 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (த)

# வன்னி மக்களை முழுமையாகக் குடியமர்த்த இன்னும் இரண்டு மாதங்கள் தேவைப்படும்

### வடமாகாண ஆளுநர் கூறுகிறார்

கொழும்பு,ஜன.4

வன்னியில் போரினால் இடம் பெயர்ந்த மக்களை முழுமையாக மீள்குடியேற்றம் செய்வதற்கு இன்னமும் இரண்டு மாதங்கள் தேவைப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் கடந்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் மீள்குடியேற்றம் செய்து விடுவோம் என்று சிறிலங்கா அரசாங்கம் அனைத்துலக சமூகத்துக்கு வாக்குறுதி அளித்திருந்தது.

ஆனால் அந்த வாக்குறுதியை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றத் தவறியுள்ளது.

தற்போது சுமார் 20 ஆயிரம் பேர் செட்டிக்குளத்தில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைதீவு, புதுக்குடியிருப்பு பகுதிகளில் இன்னமும் பொது மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

இந்தநிலையில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் இன்னமும் 20 ஆயிரம் பேர் இருப்பதாகவும் அவர்கள் இரண்டு மாதங்களுக்குள் மீள்குடியமர்த்தப்படுவர் என்றும் கூறியுள்ளார் மேஜர் ஜெனரல் சந்திரசிறி.

அதேவேளை 95வீதமான கண்ணிவெடி அகற்றும் பணிகள் முடிந்துள்ளதாகவும் அதிகளவு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளில் அது தொடர்வதாகவும் அவர் குறிப்பட்டுள்ளார்.

அதேவேளை ஏ-32 வீதி முழுமையாக புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் புதிதாக கட்டப்பட்டுள்ள கேரதீவு- சங்குப்பிட்டி பாலம் விரைவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைக்கவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# வெளிவாரி வகுப்புகளை நடத்துவதற்கு பல்கலை அங்கீகாரச் சான்றிதழ் அவசியம்

### பல்கலை மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

வெளிவாரிப் பட்டதாரி மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளை நடத்தும் நிறுவனம் அல்லது தனிநபர், குறித்த பாடநெறியை வழங்கும் பல்கலைக்கழகங்களின் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களைப் பெற்றிருக்க வேண்டியது அத்தியாவசியமாக்கப்பட்டுள்ளது - என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு- வெளிவாரிப் பட்டதாரி பாடநெறியின் தரத்தை அதிகரிக்கும் வேலைத்திட்டத்திற்கு அமைய இந்த நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலதிக வகுப்புகளை நடத்தும் விரிவுரையாளர்களின் தகுதி மற்றும் நிறுவனங்களில் மாணவர்களுக்கு உள்ள சலுகைகள் என்பன குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர் பல்கலைக்கழகங்களின் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தற்போது இலங்கையில் உள்ள 11 பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப் பட்டதாரி பாடநெறிகள் இடம்பெறுகின்றன.

அந்தப் பாடநெறிகளின் தன்மையை மேம்படுத்துவது தொடர்பாக பல்கலைக்கழகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் உள்ளகப் பட்டதாரிப் பாடநெறிகளை பயிலும் மாணவர்களுக்கான சட்டதிட்டங்களை வெளிவாரி பட்டதாரி மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

- இப்படி அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எம்.ஜி.ஆரின் 23 ஆவது நினைவு தினத்தில் 100 மாணவர்களுக்கு இலவச புத்தகங்கள்

கொழும்பு, ஜன.4

அகில இலங்கை எம்.ஜி.ஆர்.மன்றம், அ.இ.ஜெயலலிதா பேரவை மற்றும் அ.இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் தமிழக முதல்வர் அமரர் எம்.ஜி.ஆரின் 23 ஆம் ஆண்டு நினைவுதினமும்- மூத்த பத்திரிகையாளர் டேவிட் ராஜுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டமும்- கடந்த ஞாயிற்றுக்கிழமை புறக்கோட்டை பழைய நகரசபை மண்டபத் தில் நடைபெற்றது.

தொழிலதிபர் முத்தப்பன் செட்டியார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேல்மாகாணசபை உறுப்பினர் சி.வை.பி. ராம், புரவலர் ஹாஸிம் உமர், அஸீஸ் மன்றத் தலைவர் அஸ்ரப் அஸீஸ், எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் எஸ்.எச். எம்.இதிரிஸ், தொழிலதிபர் எம்.எஸ். தஜ்மகான் உட்படப் பலர் அதிதிகளா கக் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது 'தஜ்மகான் செக்கரட்டரியல் சேர்விஸஸ்' நிறுவன அதிபரால் நூறு பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக அப்பியாசப் புத்தகங்கள் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் அகில இலங்கை எம்.ஜி. ஆர். மன்றத்தலைவர் இதிரிஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். மூத்த பத்திரிகையாளர் டேவிட் ராஜின் உருவப்படத்திற்கு அவரது மகள் மலர்மாலை அணிவித்தார்.

இங்கு உரையாற்றிய தாஜ்மகான் கூறி யவை வருமாறு:-

நிலையான தர்மம் செய்து கொள்ளுங்கள் என்று நபிகள் நாயகம் சொன்னார்கள். நிலையான தர்மம் என்றால் அது மக்களுக் குப் பயன் தரக்கூடியதாக இருக்கவேண்டும்.

குறிப்பாக கல்விகற்கும் மாணவர்களுக்கு உதவி செய்வது ஒரு நிலையான தர்மமே. தான் வாழும் போதே இவ்வாறான தர்மத்தைச் செய்தவர் அமரர் எம்.ஜி.ஆர்.

அகில இலங்கை அ.தி.மு.கா. பொதுச் செயலாளர் இதிரிஸ் ஆண்டுதோறும் இது போன்ற நிகழ்வுகளை நடத்தி வருவதையிட்டு அவரைப் பாராட்ட வேண் டும் - இப்படி தாஜ்மகான் தெரிவித்தார்.

மேல்மாகாண சபை உறுப்பினர் ராம் உட்படப் பலரும் இங்கு உரையாற்றினர்.

(சி)

## இன்றைய 11ஆம் பக்க பட விளக்கத்தில் திருத்தம்

நினைவுகூரல் என்ற தலைப்பிலான பட விளக்கக் குறிப்பில் உரையாற்றுபவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன். அவரது பெயருக்குப் பதிலாக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பெயர் பிரசுரமாகிவிட்டது.


இதோ!

சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகத்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(குறிப்பு:- சத்திரச் சந்திக்கு அருகில்).
(C/573408)





டயிடஸ் ஸ்டோஸ்
புறக்கோட்டை லிபட்டி பிளாசா
2439422


## அக மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



அண்மையில் கௌரவ கலாபூஷணம் விருதுபெற்ற எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய ஆருயிர் நண்பன்

**நாதஸ்வர மேதை**

**வி.கே.பஞ்சமூர்த்தி**

அவர்களுக்கு தெய்வீக கலைப்பணி மேலும் வளர்ந்தோங்கவும் நீண்ட ஆயுள் வழங்கவும் எல்லாம் வல்ல நவாலி வடக்கு தேற்றாமரத்தடி ஸ்ரீஞான வைரவப் பெருமானை மிகவும் தாழ்மையுடன் இறைஞ்சுகின்றோம்.

சிவக்கொழுந்து இராஜேஸ்வரன் குடும்பத்தினர்,
பரம்பரை அறங்காவலர்,
நவாலி வடக்கு தேற்றாமரத்தடி ஸ்ரீஞான வைரவர் கோயில்.

## தேவை

கணினியில் பூரண தேர்ச்சியுடைய பெண்களும் ஸ்கிறீன் பிறின்ற் வேலைகள் தெரிந்த பெண்களும் தேவை. 06.01.2011 இற்கிடையில் தொடர்புகொள்ளவும். (தொழிற்பயிற்சி பெற விரும்புபவர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புக்கு: மகுடம் அசோசியேற்ஸ்,
இணுவில் சந்தி, இணுவில்.
0773996641


## TVகள் மலிவு விற்பனை

50இற்கும் மேற்பட்ட Sony wega Flat 14''-9000/=, 21''-14,000, 25''-20,000/=, 29''-25,000/= பொக்ஸ் வகைகள் (JBL), அம்பிளிவயர்கள் DTS, குளிர்சாதனப் பெட்டிகள், Cassete, Deck, Radioகள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
VCR, DVD என்பனவும்.
தொடர்பு: 0771393670
இ.மகேஸ்வரன் (அப்பாக்கோர்பவி),
ரிவிப்புலியடி (ஆரம்ப பாடசாலை அருகில்), கே.கே.எஸ்.வீதி, இணுவில்.



## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உப தலைவரும், இரசாயனவியல் துறையின் தலைவருமான கலாநிதி ஜெ.பி.ஜெயதேவன் அவர்களின் சகோதரராகிய **ஜெபரட்ணம் ஜெபமோகன்** அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-574318) **பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.**



## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 191 சீட்டிழுப்புத் திகதி 02.01.2011

வெற்றி இலக்கங்கள்: 13 14 15 20 சுப்பர் இலக்கம்: 12

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 11,518,550/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 98995 | ரூ. 20/= | ரூ. 1,979,900/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 8997 | ரூ. 40/= | ரூ. 3,59,880/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 7678 | ரூ. 100/= | ரூ. 767,800/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 705 | ரூ. 200/= | ரூ. 141,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 172 | ரூ. 1,500/= | ரூ. 258,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 17 | ரூ. 3,000/= | ரூ. 51,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 11,518,550/= | |
| மொத்த எண்ணிக்கை | 116565 | | ரூ. 4,557,580/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,819,390/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

அபிவிருத்தி லொத்தர் சபை
356 கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk



## தேவை

* Semi-skilled Technicians for Repairs of Bottle Coolers/ Deepfreezes /AC
* விற்பனையாளர் தேவை. குறைந்தது 2 வருட அனுபவமுள்ளவராக இருத்தல் சிறப்பு (FMCG)
* AD சாரதிப் பத்திரம் உள்ள அனுபவம் வாய்ந்த சாரதிதேவை (ELF) வாகனம் ஓட்டக்கூடியவராக இருத்தல் மிக அவசியம்).

தொடர்பு:
Elephant House Distributors,
No.04, Kirishnapillai Veethy,
Echchamottai.
(வார நாள்கள் மட்டும் அழைப்புகள் ஏற்படுத்தவும்)
தொ.பே: 0215671024


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 14 * 02 * 1944



மறைவு 05 * 12 * 2010

### பொன்னையா பாலசிங்கம்

(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர்,
அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.)

திதி: அமாவாசை

கடந்த (05.12.2010) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் இன்று (04.01.2011) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பூவியன் வளவு,
பத்தமேனி, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

(108448)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரன் இராஜமணி



வீமன்காமம் வடக்கு, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் பழைய வீதி கோப்பாய் தெற்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரன் இராஜமணி நேற்று (2011.01.03) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா-நாகமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும் பரமேஸ்வரனின் (பரிசாரகர்) மனைவியும் காலஞ்சென்றவர்களான அருணாசலம், நல்லதம்பி, தெய்வானைப்பிள்ளை, இராசையா மற்றும் சின்னம்மா, இலட் சுமிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் செல்லம்மா, சின்னத்துரை, கந்தையா, பரமேஸ்வரி, இராஜதுரை ஆகியோரின் மைத்துனியும் நடேசபிள்ளையின் சிறிய தாயும் ஸ்ரீரஞ் சினியின் பாசமிகு மாமியாரும் ராகுலன், கோகுலன், ஜெய குலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2011.01.04) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

தகவல்:
பரமேஸ்வரன்
(கணவர்).

(108447)


O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கணினிக் கற்கைநெறிகள் மானிப்பாயில் ஆரம்பம் !!!

✓ Beginners Diploma in ICT (GIT - Syllabus )
✓ Diploma in Ms Office
✓ Diploma in Hardware Engineering
✓ Diploma in Desktop Publishing

11/01/2011 அன்று வகுப்புக்கள் ஆரம்பம்!!

அனுமதி விண்ணப்பபடிவங்களை எமது நிறுவனத்தில் பெற்று எதிர்வரும் 09/01/2011ற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற் கொள்ளவும்.

மேலதிக விபரங்களுக்கு :- UNI TECHNOLOGY (PVT) LTD
ICT Education Trainers
Jaffna Road, Manipay.
Tel : 021 - 7429325
(மானிப்பாய் பிரதேச சபை முன்பாக)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அபிவிருத்திக்கு அடித்தளம் இனப்பிரச்சினைக்குத் தீர்வே

இன்னும் சில நாள்களில் தமிழ் தேசியக் கூட்டமைப் பினருடன் அரசு இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்கள் நடத்துவதற்கு ஆயத்தமாகி வருவதாகத் தகவல்கள் தெரி விக்கின்றன.

தமிழர்கள், அதாவது இந்த நாட்டில் தமிழ் பேசுகின்ற - தமிழ் பாரம்பரியங்களை பேணிவருகின்ற மக்கள் - அவர்கள் சமய ரீதியில் பல்வேறு வகையில் மாறுபட்டிருந் தாலும் இந்த நாட்டில் தாங்களும் பெரும் பான்மைச் சிங்கள மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் பெற்று சுதந்திரமாக வாழவும் தமது உடமைகளை, உறவுகளைப் பேணிக்கொள்ளவும் விரும்புகிறார்கள்.

இது புதியதொரு விடயமும் அல்ல, அவர்கள் முன் வைக் கும் கோரிக்கைகள் நாட்டில் எவரும் அறியாத ஒன்றுமல்ல.

தமிழர்களின் கோரிக்கைகள் இந்த நாட்டுக்குச் சுதந் திரம் கிடைத்த ஒருசில ஆண்டுகளிலிருந்தே முன்வைக் கப்பட்டு வருபவை. அதனால் பதவியிலுள்ள அரசுக்கு - அதன் தலைவர்களுக்கு திடீரென தோன்றிய பிரச்சினை யாக இது இருக்க முடியாது.

இந்த நாட்டின் முதல் பிரதம மந்திரியாக டி.எஸ். சேன நாயக்க காலத்திலிருந்து, ஏன் அதற்கு முந்தியிருந்தே தமிழ் மக்கள் தமது நியாயமான கோரிக்கைகளுக்காக குரல் எழுப்பி வந்திருக்கிறார்கள்.

டி.எஸ்.சேனநாயக்கா காலத்துக்கு பிறகு, தமிழ் மக்க ளின் இனப்பிரச்சினை, ஆட்சியாளர்களாலேயே அவர் களின் அலட்சியப்போக்கினாலேயே பூதாகரமாக்கப் பட்டது.

அன்றைய பிரதமர் டி.எஸ்.சேனநாயக்காவின் அப் போதைய ஐ.தே.கட்சி என்றைக்கு மலையக மக்களின் குடியுரிமையிலும், வாக்குரிமையிலும் கை வைத்து அவர் களை நாட்டற்றவர்களாக, நாதியற்ற வர்களாக மாற்றி விட்டதோ, அன்றிலிருந்தே இனப் பிரச்சினை வளரத் தொடங்கியது.

அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் இரு பத்துநான்கு மணிநேரத்தில் சிங்களம் மட்டும் திட்டம் அமுலாக்கல், அவரை அடியொற்றி வந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் விகிதாசாரக் கல்வித் திட்டம், தமிழர் ஆதரவு கிஞ்சித்தும் இல்லா மல் தயாரிக்கப்பட்ட புதிய அரசமைப்பு, சோல்பரித் திட்டத்தில் வழங்கப்பட்டி ருந்த 29ஆவது ஷரத்தின் அனுகூலங்கள் ஒழிப்பு போன் றவை தொடர்ந்தன.

இவ்வாறான இனக்குரோத நடவடிக்கைகள் தமிழர் தரப் பில் விரக்தியையும், கசப்புணர்வுகளையும் வளர்த்தன.

இடையில் இரு தரப்பினருக்குமிடையில் உருவான சம ரச உடன்பாடுகள், ஒரு தலைப்பட்சமாக கிழித்தெறியப் பட்டமையும் இந்த நாட்டு அரசியலின் அபசகுனங்களில் ஒன்று.

இந்தப் பின்னணியில், தமிழ் மக்கள் சார்பில் தமக்குரிய உரிமைகளைக் கோரி சாத்வீக போராட்டங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டமையும் அவைகளுக்கு ஈழத்துக் காந்தி மூதறிஞர் தந்தை செல்வா தலைமை வகித்து சிங்களத் தலைவர்களைத் சிந்திக்க வைக்க முயன்றமையும் அழிக்க முடியாத பதிவுகள்.

ஆனால் இந்தப் போராட்டங்கள் அதிகார வர்க்கத்தின ரால் இராணுவ, பொலிஸ் தாக்குதல்களினால் மட்டு மன்றி, அரசியல் காடைத்தனங்களாலும் முறியடிக்கப்பட் டன. பல சந்தர்ப்பங்களிலும் இவ் வன் செயல்கள் தூண்டி விடப்பட்டு தமிழ் மக்கள் நாடு முழுவதிலும் இனவாதிக ளால் கோரமாக கொலை செய்யப்பட்டனர்; கொள்ளை யிடப்பட்டனர். பிற மாவட்டங்களிலிருந்து தமிழ் மக்கள் குடும்பம் குடும்பமாக வடக்கு கிழக்குக்கு இடம்பெயர நேர்ந்தது.

இந்த நிலையில் உருவானதே தமிழ் இளைஞர் மேற் கொண்ட ஆயுதப் போராட்டம். அது தற்காப்புக்காக ஆரம் பித்த வேளையிலேயே அன்றைய அரசு அதனை புத்தி சாதுரியமாகக் கையாண்டு நாட்டில் மேலும் இரத்த ஆறு ஓடாமல் தடுத்திருக்கமுடியும். ஆனால் அவர்களின் சிந் தனைகள் வேறு விதமாகப்போயிற்று. அதன் விளைவு என் றும் இல்லாதபடி உள்நாட்டிலேயே பெரும் போர் வெடித்து வெளிநாடுகளின் உதவியோடு தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற போராளி இயக்கம் அழிக்கப்பட்டது.

இவைகள் எல்லாம் நடந்து முடிந்து இப்போது ஒரு வருடத்துக்கு மேலாகிவிட்டது.

இப்பொழுது மீண்டும் இனப்பிரச்சினை பற்றி அரசு தரப்பில் ஆராய்வதற்கு என்ன இருக்கிறது?

சர்வகட்சி மாநாட்டில் ஆராய்ந்தார்கள், இந்திய ஆட்சி யாளர்களுடன் ஆலோசித்தார்கள். இப்பொழுது தமிழர் தரப்போடு பேசுவதற்கு தயாராகிறார்கள் என்று செய்தி வருகிறது.

எப்பொழுது இந்தப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என்பது தெரிவிக்கப்படவில்லை. ஆனால் நிச்சயமாக இந்தப் புதிய ஆண்டிலாவது தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கான அவர்களின் அபிலாசைகள் நிறைவு செய்யும் விதத்திலான ஓட்டை ஒடிசல் இல்லாத, அரைவேக்காட்டுப் பதம் இல் லாத ஏற்புடைய தீர்வு ஒன்று முன்வைக்கப்படு மானால் அது நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதாகும். அதுவே அரச தலைவர்கள் வானளாவக் கூறிவரும் அபிவிருத்திக்கான சரியான முன்னோடி நடவடிக்கையாகவும் இருக்கும்.

தமிழர் பிரச்சினை நாட்டின் அபிவிருத்திக்குத் தடை யாக இருக்கிறது என்பதனைப் பெருமனத்தோடு உணர்ந்து, அதுவே யதார்த்தம் என்பதனைப் புரிந்துகொண்டு, இன வாதத்தை ஒதுக்கித் தள்ளி, தமிழர்களையும் இந்த நாட்டில் சிங்கள மக்களைப் போன்று சமமாக மதித்து அவர்களின் உரிமைகளை வழங்கினால் இந்த நாடு இன்னும் சில வரு டங்களிலேயே எல்லாத் துறைகளிலும் உயர்ந்து நிற்கும்.

# சிரேஷ்ட அமைச்சர்கள் குறித்து சபையில் வெள்ளியன்று விவாதம்

கொழும்பு, ஜன.4

சிரேஷ்ட அமைச்சர்களுக்கு ஒதுக் கப்பட்ட விடயதானங்கள் மற்றும் ஆட்சியில் அவர்களின் பங்கு குறித்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடாளு மன்றத்தில் விவாதமொன்று நடை பெறும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றம் இந்த வருடத் தில் முதல்தடவையாக இன்று செவ்வாய்க்கிழமை கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், சிரேஷ்ட அமைச் சர்கள் விவகாரம் குறித்து விவாத மொன்றை நடத்துமாறு ஐ.தே.க. கோரியுள்ளதாக எதிர்க்கட்சி பிரதம கொறடாவான ஜோன் அமரதுங்க கூறினார்.

அதேவேளை, உள்ளூராட்சி தேர் தல் திருத்தச் சட்டத்தை ஒத்தி வைக்குமாறு ஐ.தே.க. கோரவுள்ள தாகவும் அவர் கூறினார்.

'உள்ளூராட்சித் திருத்தச் சட்ட மூலம் தொடர்பான விவாதம்இன்று நடைபெறவுள்ளது. எவ்வாறெனினும் அரசு புதிய சட்டத்தின்கீழ் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத் தப்போவதில்லை. எனவே, நாம் இச் சட்டத்தில் திருத்தம் செய்யு மாறு கோரவுள்ளோம்'' என ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

# அரசுக்கு விரோதமானவர்களைக் கண்டுபிடிக்கவே கமராக்கள்

கொழும்பு, ஜன.04

கொழும்பில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் பகுதி களில், அதிக அளவிலான கண் காணிப்புக் கமராக்கள் பொருத்தப் பட்டுள்ளன.

அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங் களை மேற்கொள்பவர்கள் மற்றும், அரசுக்கு எதிராகச் சுவரொட்டிகளை ஒட்டுபவர்களை அடையாளம் காண்பதற்காக இந்த கமராக்கள் பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக விசேடமாக 6 கண்காணிப்பு கமராக் கள் பொருத்தப்பட்டுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் ஒடெல் சுற்றுவட்டத் திலும் அதிக கமராக்கள் பொருத்தப் பட்டுள்ளன.

இதேவேளை, அதிநவீன தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்ட வாகனங் கள் பல, கொழும்பு நகர் முழுவதிலும் சேவையில்ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக வும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இந்த வாகனங்களில், கொழும்பு நகர் முழுவதிலும் பொருத்தப்பட் டுள்ள கமராக்களுக்கான செய்மதி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

உடனுக்குடன் அவற்றின் காட்சி களை அவதானித்து, குறித்தஇடத்துக்கு விரைந்து, சம்பவத்தில் அடையாளம் காண்பவர்களை கைது செய்வதற்காக இந்த வாகனங்கள் இறக்குமதி செய்யப் பட்டுள்ளன.

இதற்கிடையில் இந்த வாகனங் கள், இந்தியாவின் பிரபல செல்வந்தர் களான அம்பானி சகோதரர்களின் மெட்ரோ பொலிடன் நிறுவனத்திடம் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள தாகக் கூறப்படுகிறது. (ம)

# போர் அனுபவங்கள் குறித்த புத்தகங்களை எழுதுமாறு கோத்தபாய அறிவுரை கூறுகிறார்

கொழும்பு, ஜன.04

இருபது வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய அனுபவமுள்ள படை உயரதிகாரிகளும் பொலிஸ் உயரதிகாரிகளும் தமது அனுபவங் கள் குறித்து புத்தகம் எழுத வேண் டும்.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இவ்வாறு ஆலோசனை வழங்கியுள் ளார்.

இதன் மூலம் பயங்கரவாதத்தி லிருந்து நாட்டை விடுதலை செய்வ தில் எதிர்கொண்ட கஷ்டங்களை யும் செய்யப்பட்ட தியாகங்களை யும் மக்கள் தெரிந்துகொள்வர் என்று அவர் கூறியுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரிய எழுதிய 'எல்.ரி.ரி.ஈ. யின் எழுச்சியும் வீழ்ச்சியும்' என்ற தலைப்பிலான நூலின் வெளி யீட்டு விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம அதிதி யாக கலந்துகொண்டு உரையாற் றும் போது பாதுகாப்புச் செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

நீண்ட விசாரணைகளின் பின் அனுபவங்கள் குறித்து நூல் எழுத வேண்டும்.

மக்கள் தெரிந்துகொள்ள விரும்பும் பல சம்பவங்கள் யுத்த காலத்தில் இடம்பெற்றுள்ளன.

கடந்த வருட காலத்தில் கொழும் பில் நடைபெற்ற ஏறத்தாழ அனைத் துச் சம்பவங்கள் குறித்தும் நாம் விசாரணைநடத்திவிட்டோம். கொழும் பில் மாத்திரமல்லாமல், ஏனைய பகுதிகளில் இடம்பெற்ற அனைத்து சம்பவங்கள் தொடர்பாகவும் விசா ரணைகள் நடைபெற்றன.

இந்தச் சம்பவங்களுக்குப் பொறுப் பானவர்கள் அனைவரையும் கைது செய்ய எம்மால் முடிந்தது.

உதாரணமாக, மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தற்கொலை தாக்கு தல் மூலம் கொலை செய்யப்பட்ட போது அரசின் மீது குற்றம் சுமத்தப் பட்டது.

இந்தக் குண்டுவெடிப்பு தொடர் பாக விசாரணை நடத்துமாறு நான் குற்றப் புலனாய்வுத் திணைக்களம், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு, அரச புலனாய்வுச் சேவை ஆகிய வற்றைப் பணித்தேன்.

இறுதியில், இத்தாக்குதலின் பின் னால் இருந்தவர்களை நாம் கைது செய்தோம்'' என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் கூறினார். (ம)

# 31ஆம் திகதிக்கு முன்னர் சோலைவரி செலுத்தினால் 10 வீதம் வரிக் கழிவு

யாழ்ப்பாணம், ஜன.4

நல்லூர் பிரதேச சபைக்குட் பட்ட பகுதிகளைச் சேர்ந்த குடியி ருப்பாளர்கள் சோலைவரியை எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு சோலை வரி யில் 10 வீதக் கழிவு வழங்கப்படும் என மேற்படி பிரதேச சபைச் செயலர் மே.சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் சோலை வரியைச் செலுத் தும் குடியிருப்பாளருக்கு 5 வீதக் கழிவே வழங்கப்படும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## நாளை

| | | |
|---|---|---|
| மார்கழி 21 | 05.01.2011 | |
| | புதன்கிழமை | |
| திதி: | : | பிரதமை |
| | | பி.ப 3.41 |
| நட்சத்திரம் | : | உத்தராடம் |
| | | பி.இ.05.47 வரை |
| [illegible] | : | 05.01 - 06.31 வரை |
| ராகுகாலம் | : | 12.30 - 02.01 வரை |

# பால்மா விலை உயரும் சாத்தியம் நுகர்வோர் பாதிப்படைய வாய்ப்பு

கொழும்பு, ஜன. 4

பால்மாவை இறக்குமதி செய் யும் நிறுவனங்கள் அதன் விலையை உயர்ந்த முஸ்தீபுகளை மேற்கொண் டுள்ளன. அதன் மூலம் நுகர்வோர் மேலும் பாதிக்கப்படப் போவதாக வும் தெரியவருகிறது.

பால் மாவை பாரிய அளவு இறக்கு மதி செய்யும் நிறுவனங்கள் அதன் விலையை அதிகரிக்க அனு மதி யளிக்குமாறு அரசை நிர்ப்பந்தித்து வருகின்றன.

நுவர்வோர் அதிகார சபையிடம் இந்த விலை உயர்வுக்கு அண்மை யில் நிறுவனங்கள் அனுமதி கோரிய போது அதிகார சபை அதனை நிரா கரித்தது.

உலக சந்தையில் பால்மாவின் விலை மெட்ரிக் தொன்னொன் றுக்கு 2,800 அமெரிக்க டொலர்க ளில் இருந்து 3,750 டொலர்களாக உயர்ந்துள்ளது. இதனால் விற்பனை விலையை அதிகரித்தேயாகவேண்டு மென இறக்குமதி நிறுவனங்கள் நிர்ப்பந்தம் செய்கின்றன.

தொடர்ந்தும் நட்டங்களுக்கு முகம் கொடுக்கமுடியாதென அந்த நிறுவனங்கள் கூறுகின்றன.

தற்போது 400 கிராம் பால்மா பக்கற் ஒன்றை 15 ரூபா நட்டத்துக்கே விற்பதாகவும் முட்டை, கோழியி றைச்சி ஆகியவற்றைப் போல் பால் மாவை அரசு இறக்குமதி செய்ய முடியாது எனவும் அந்த நிறு வனங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (ம-5)

# பாடசாலை மாணவர்களுக்கு பன்றிக்காய்ச்சல் தடுப்பூசி வழங்கக் கல்வியமைச்சு நடவடிக்கை

கொழும்பு ,ஜன .4

பாடசாலை மாணவர்களுக்கு பன்றிக்காய்ச்சல் நோய்க்கான தடுப் பூசியை ஏற்ற கல்வியமைச்சு தீர் மானித்துள்ளது. பாடசாலைகள் ஆரம்பமானதைத் தொடர்ந்து சுகா தார அமைச்சுடன் இணைந்து இந்த தடுப்பூசியை அனைத்துப் பாட சாலை மாணவர்களுக்கும் ஏற்று வதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளது.

இந்த நோய் பரவுவதைத் தடுப் பதற்கும் நோய்த் தொற்றுக்கு வாய்ப் புள்ளவர்களுக்கு முன்னெச்சரிக் கையாகவும் இந்தத் திட்டம்மேற் கொள்ளப்படவுள்ளதாக கல்வி யமைச்சு வட்டாரங்கள் தெரிவித் தன. (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான கலைத்திட்ட அமுலாக்கல் கலந்துரையாடல் நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளன. உடுவில் தெல்லிப்பழை கோட்ட ஆசிரியர்களுக்கு நாளை பிற்பகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும், சண்டிலிப்பாய், சங்கானை கோட்ட ஆசிரியர்களுக்கு நாளை மறுதினம் பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் இக்கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன. (204-38)


## தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள ''பிரகாந்த்'' போட்டோ கொப்பி கடைக்கு பெண் பிள்ளைகள் (2) தேவை. அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 56B பலாலி வீதி, திருநெல்வேலி. தொ.பே:021 222 3184

**தேசிய கல்வியற் கல்லூரிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரிய மாணவர்களே!**

உங்களுக்குத் தேவையான தரமான
Bottom, T.Shirt, Cap, Fit Shorts, Shoes, Socks மற்றும் பலவற்றை
விசேட கழிவில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
விளையாட்டு உபகரணங்கள், உடற்பயிற்சி சாதனங்களின் விற்பனையின் முன்னணி நிறுவனம்.




**ஒலிம்பியா ஸ்போர்ட்ஸ்**

06, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 2223490, 0778010219, 0778060267.


## மரண அறிவித்தல்

### தம்பிஐயா தியாகராஜா



யாழ்ப்பாணம், ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடா, மிசிசாகாவை வதிவிடமாகவும், வெலிங்டன்,லிடோ தியேட்டர்களின் ஓய்வுபெற்ற Chief Operator உம், கலட்டிப்புலம் ஸ்ரீஞானவைரவர் கோயில் முன்னைநாள் நிர்வாகசபைத் தலைவருமான தம்பிஐயா தியாகராஜா (01.01.2011) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா- செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் கந்தையா- கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகனும் ரோஹிணி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, நடராசா (சின்னமணி) மற்றும் சோமசுநந்தரம் (மாணிக்கவாசகர்), இராசேந்திரம் (கனடா), ரஞ்சிதவதனா (லண்டன்), விக்னேஸ்வரி (கனடா), கலாஜோதி (கனடா), மாலதி (லண்டன்), ரேவதி (லண்டன்), உதயராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நகுலேஸ்வரி, ஜீவராசா, தர்மலிங்கம், கோணேஸ் வரநாதன், ஜெகதீஸ்வரானந்தன், ஆனந்த், யாழினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுதா, ரமணன், நரேன், சர்மிலன், பிரியா, விஜிதா, சொப்ணா, மயூரன், சுவர்ணா, அதிஸ்டா, ரஜி, அஞ்சனா, அருண், பிரவிந்த், சுரம்யா, அர்த்தனா, லக்ஷன், அபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் எலைஜா, எவின், டானியலா, சந்தோஷ், லக்ஷ்மன், சபரீஷ், சாருஜன், ஷியானா, அஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் (05.01.2011) புதன் கிழமை பிற்பகல் 4 மணிமுதல் 9 மணிவரை 420, Dundas Street East, Mississauga வில் அமைந்துள்ள SCOTT FUNERAL HOME இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் வியாழக்கிழமை இறுதிக்கிரியைகள் மு.ப.11 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

தொடர்பு:- 905-278 1570, 416-990 4740, 647- 892 4093

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## புறநிலைப் படிப்புக்கள் அலகு
## படநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புக்கள் அலகு பின்வரும் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்களை தகுதியானவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது. ஒவ்வொரு பாடநெறியும் 48 மணித்தியால விரிவுரைகளைக் கொண்டது. விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை நடைபெறும். 18 வயதிற்கு மேற்பட்டவராக இருக்கும் எவரும் இப்பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

பதிவுக்கட்டணம் : ரூபா 500.00

தமது முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் தங்கள் சுயவிபரக் கோவையை இணைத்து இணைப்பாளர், புறநிலைப்படிப்புக்கள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிப் பதிவு செய்து கொள்ளலாம்.

மேற்படி பாடநெறிகளைப் பயில விரும்புவோர் எத்தனை பாடநெறிகளுக்கும் விண்ணப்பிக்கலாம். ஆயினும் ஒரே நேரத்தில் ஒரு பாடநெறிக்கே அனுமதிக்கப்படுவர்.

பாடநெறிகள்:

- EMS 01 தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (English for Communication)
- EMS 02 அலுவலர்களுக்கான ஆங்கிலம் (English for Office Staff)
- EMS 03 முன்பள்ளிக்கல்வி (Pre School Education)
- EMS 04 ஊடக அறிவு (Media Literacy)
- EMS 05 மொழிபெயர்ப்புக்கலை (Art of Translation)
- EMS 06 பெண்களும் அபிவிருத்தியும் (Women & Development)
- EMS 07 அலுவலக முகாமைத்துவம் (Office Management)
- EMS 08 சூழல் முகாமைத்துவம் (Environmental Management)
- EMS 09 மனித உரிமைகள் (Human Rights)
- EMS 10 நூலகமும் தகவல் விஞ்ஞானமும் (Library and Information Science)
- EMS 11 தகவல் தொழில்நுட்பம் (Information Technology)

பொதுவிரிவுரைகள்

புறநிலைப்படிப்புக்கள் அலகினால் நடத்தப்படும்

- EMP I சுகவாழ்வு
- EMP II நாட்டாரியல்

ஆகிய பொது விரிவுரைகளுக்கு விரும்பிய யாவரும் பங்குபற்ற முடியும். இவற்றுக்கான அறிவித்தல்கள் அவ்வப்போது பொதுசன ஊடகங்களில் மேற்கொள்ளப்படும்.

வளவாளர்

மேற்படி பாடநெறிகளில் வளவாளர்களாகப் பணியாற்றத் தகுதியுடைய வளவாளர்கள் தங்கள் துறைசார் தகமைகளை உறுதிப்படுத்தக்கூடியவாறு தங்கள் சுயவிபரக் கோவையை இணைப்பாளர், புறநிலைப்படிப்புக்கள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய இறுதிநாள் - 20.01.2011.

பதிவாளர்
03.01.2011

## மரண அறிவித்தல்

### கந்தையா தனபாலசிங்கம்
### (பாலா)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தனபாலசிங்கம் 28.12.2010 செவ்வாய்க்கிழமை டென்மார்க்கில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பசுபதி தம்பதியரின் அன்பு மகனும் லீலாவின் அன்புக் கணவரும், துஷ்யந்தி, சகானா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.01.2011) புதன்கிழமை டென்மார்க் ஒபன்ரோவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
பா.ரமணன் (டென்மார்க்)
+4522926121
ப.இந்திரன் (டென்மார்க்)
+4520782159
+4574632141 (வீடு)
க.சின்னராசா (லண்டன்)
+447405974644

க.குணபாலசிங்கம்
(கல்வியங்காடு)
0778737167
கி.செல்வம்
(கொழும்பு)
[illegible]6256



தகவல்:
கிருஷ்ணர் சிவராசா
(செல்வம்) கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களில் திருமுறை ஓதுவதற்கு முதலிடம் வழங்கப்படவேண்டும்

## யாழ்.இந்து சமயப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.4

ஆலயங்களில் திருமுறை ஓதுவதற்கு முதலிடம் வழங்கப்பட வேண்டும் என இந்து சமயப் பேரவை கோரிக்கைவிடுத்துள்ளது.

உடுவில் கற்பக விநாயகர் ஆலயத்தில் அண்மையில் திருவாசக விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன் கலந்துகொண்டு உரையாற்றும்போது இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

தாய் மொழியான தமிழில் உள்ள திருமுறைகளை ஓதுவதற்கு நாம் பின்நிற்பது கவலைக்குரியதாகும். திருமுறையைப் பாடிப் பரப்புவதன் மூலம் நாயன்மார் காலத்தில் ஏற்பட்ட அற்புதங்களை எமது வாழவிலும் கண்டு மகிழமுடியும்.

ஆலயங்களில் தமிழில் பூசைகள் நடைபெற வேண்டும் என்று கூறுவோர் ஆலயங்களில் தமிழ்த் திருமுறைகளை ஓதுவதற்கு முன்வராதிருப்பது கவலைக்குரியதாகும். தெய்வீக சான்னித்தியத்தைப் பெருக்கும் நோக்கில் ஆலயங்களில் வேதசிவாகம, கிரியைகள் இடம்பெறுகின்றன. அக்கிரியைகள் இடம்பெறும் பல்வேறு சந்தர்ப்பங்களிலெல்லாம் இன்று சிவாச்சாரியர்கள் திருமுறைக்கு முதலிடம் கொடுத்து வருவது பாராட்டுக்குரியதாகும்.

வேதாசாரமான திருமுறை பொருத்தமான சந்தர்ப்பங்களிலெல்லாம் ஆலயங்களில் கிரியைகள் இடம்பெறும் போது பக்திப் பரவசத்தோடு ஓதுவது தெய்வ சான்னித்தியத்தை மிளிரச்செய்ய உதவுகின்றது. வடமொழியைக் கற்பது மிகக் கடினமானது. அதைவிட விளங்கிக் கிரியைகளைச் செய்வது கஷ்டமான ஒன்றாகும்.

கோடிக்கணக்கான பணத்தில் எத்தனையோ செலவுகளைச் செய்யும் நாம் ஆலயங்களில் திருமுறைக் கல்லூரிகளை நிறுவுவதற்கு முன்வருவதுமில்லை. திருமுறைகளை ஓதுவோரை தகுந்த முறையில் கௌரவிப்பதுமில்லை.

இந்த நிலை மாறவேண்டும். தமிழுக்குள்ள உரிமையைக் கொடுப்பதற்கு நாமே தயாராக இல்லை. மற்றவர்களைப் பழிசொல்வதில் காலம் கழிக்கின்றோம்.

எந்த மொழியிலும் இறைவனைத் துதிக்கலாம், எனினும் சொந்த மொழியிலே இறைவனைப் பாடுகின்றபோது உள்ளுணர்வு ஊற்றெடுத்துப் பெருகும். தமிழ் திருமுறைகளில் அரிய கருத்துக்களை கண்டறிவதற்கு நாம் கருத்தாய்வு அரங்குகளை நடத்த வேண்டும் என்றார்.(204)

புது வருடத்தில் வரவு....



காட்சிப்படுத்தல் : நேற்று திங்கட்கிழமை குடாக்கடலில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவரின் வலையில் பெரிய சுறாமீன் ஒன்று சிக்கிக் கொண்டது. பாசையூர் மீனவரான பாலசிங்கம் என்பவரின் வலையிலே 10 அடி நீளமான இந்த சுறா சிக்கியது. இதனை மக்கள் பார்வையிட்டனர். கடந்த வருடம் நவம்பர் மாதம் பாசையூர் பகுதி கடற்றொழிலாளரான ஸ்ரீபன் என்பவரின் வலையில் இது போன்று 10 அடி நீளமான சுறா மீன் சிக்கியது குறிப்பிடத்தக்கது.

# ஆனந்த சமரக்கோன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், ஜன.4

கலை மற்றும் கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை ''ஆனந்த சமரக்கோன் நூற்றாண்டு விழா'' கொழும்பு அலரி மாளிகையில் இடம்பெறவுள்ளது.

கலை மற்றும் கலாசார அமைச்சர் சி.பி.ஏக்கநாயக்க தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை கலைக் கழகத் தலைவர் பேராசிரியர் கார்லோ பொன்சேகா, கலை, கலாசார அமைச்சின் செயலாளர் விமல் ரூபசிங்க ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்கு இலங்கை கலாசாரத் திணைக்களம், ஆனந்த சமரக்கோன் நிதியம், இலங்கைக் கலைக்கழகம், அரச இசைச் சபை ஆகியன இணைந்து அனுசரணை வழங்குகின்றன. (204-313-314)

# வடமாகாண அரச நிர்வாகங்கள் ஜனவரி 17 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.4

வடமாகாணத்திலுள்ள அரச நிர்வாகங்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளதாக கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் வே.பொ.பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிழக்கு மாகாண சபையின் சகல அரச நிர்வாக செயலகங்கள் பெப்ரவரி முதலாம் திகதி திருகோணமலை கன்னியா வீதி, வரோதய நகரில் உள்ள ஏபிசி (ABC) கட்டடத்தில் இயங்கவுள்ளன.

வடக்கு மாகாண சபை அலுவலகங்கள் இதுவரை காலமும் கிழக்கு மாகாணத்திற்கு உரிய கட்டடத்திலேயே இயங்கிவருகின்றன.

இதேவேளை தற்போது வடக்கு மாகாணசபை அலுவலகங்கள் யாழ்ப்பாணம் நோக்கி நகர்த்தப்படுகின்றன.

எதிர்வரும் 30 ஆம் திகதி முன்னர் தங்களது சகல அலுவலகங்களையும் நகர்த்திய பின்னர்-

உத்தியோக பூர்வமாக பெப்ரவரி முதலாம் திகதி முதல் வரோதய நகரில் உள்ள ஏபிசி (ABC) கட்டடத்தில் கிழக்கு மாகாண அரச நிர்வாகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றார் அவர். ( 201-302)

# புத்தூர்-புன்னாலைக்கட்டுவன் வீதி பாதிப்பு மாற்றுப் பாதையூடாக பஸ் சேவை

வடமராட்சி, ஜன.4

புத்தூர் புன்னாலைக்கட்டுவன் வீதியில் பாரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளதால் மேற்படி வீதி ஊடாகப் பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவினால் நடத்தப்படும் பஸ் சேவைகள் நேற்று முன்தினம் முதல் மாற்றுப் பாதையூடாக நடைபெற்று வருகின்றன.

வழித்தடம் இலக்கம் 753 பருத்தித்துறை வட்டுக்கோட்டை, வழித்தடம் இலக்கம் 767 பருத்தித்துறை, நெல்லியடி, மானிப்பாய், நவாலி, வழித்தடம் இலக்கம் 766 பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மானிப்பாய், நவாலி ஆகிய மூன்று சேவைகளுக்கான பாதையே இவ்வாறு மாற்றப்பட்டுள்ளதாகப் பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ முகாமையாளர் கே.குலபாலசெல்வம் தெரிவித் துள்ளார்.

குறிப்பிட்ட வீதியில் புத்தூர் சந்திக்கு அண்மையில் ஏற்பட்டுள்ள பாரிய குழியினால் அந்த வீதியில் சேவைகளில் ஈடுபட்ட பஸ் வண்டிகள் மோசமா கப் பழுதடைந்தமையாலும் பஸ் வண்டிகளில் பயணம் செய்யும் பயணிகள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கியமையாலும் பஸ் சேவைக்கான பாதையை மாற்ற வேண்டியிருந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

புத்தூர் புன்னாலைக்கட்டுவன்வீதி ஊடாக நடைபெற்று வந்த இச்சேவைகள் நேற்று முன்தினம் முதல் அச்சுவேலி இராச வீதி நவக்கிரிச் சந்தி ஊடாக நடத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி வீதி புனரமைக்கும் வரை இந்த மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.




# ஆசிரிய உதவியாளர்களுக்கும் இனிமேல் கலாசாலைகளில் பயிற்சி வழங்க ஏற்பாடு

அச்சுவேலி,ஜன.4

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரிய உதவியாளர்களுக்கு தொலைக்கல்வி முறையிலான ஆசிரியர் பயிற்சி ஏற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. 2012ஆம், 2013ஆம் ஆண்டுகளில் ஆசிரியர் கலாசாலைகளில் அனுமதி வழங்கி இவர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை யாழ். மாவட்ட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய 430 பேருக்கு கடந்த வருடம் ஆசிரியர் உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டது. அவர்களுக்கு தொலைக் கல்வி முறையில் ஆசிரியர் பயிற்சி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்த வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் பயிற்சிக்கான நேர்முகப் பரீட்சைகள் - பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு பயிற்சிகளை ஜனவரியில் இருந்து தொடங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

3ஆயிரம் ரூபா சம்பளம் பெறும் நிலையில் பாடசாலைகளில் கடமை புரிந்துகொண்டு அதேவேளை பகுதி நேரமாக விடுமுறை நாள்களில் ஆசிரியர் பயிற்சியை மேற்கொள்வது சமகால களநிலைக்கும் பொருளாதார வளநிலைக்கும் ஏற்புடையது அல்ல என ஆசிரியர் உதவியாளர் ஒன்றியம் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்ததோடு தமது கோரிக்கையை வலியுறுத்தி மகஜர்களையும் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சமர்ப்பித்திருந்தது.

யாழ்.மாவட்ட ஆசிரியர் உதவியாளர்களின் கோரிக்கையை ஏற்று 2012ஆம் 2013 ஆம் ஆண்டுகளில் நியமனம் பெற்ற பாடரீதியாக ஆசிரியர் கலாசாலைகளில் ஆசிரியர் பயிற்சி வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. (201-11)

# தமிழ் கலைஞர்களைக் கௌரவிப்பதற்கே அரசு கலாபூசணம் விருதை வழங்குகிறது

## கவிஞர் சோ.பத்மநாதன் உரை

யாழ்ப்பாணம், ஜன.4

தமிழ்க் கலைஞர்களைக் கௌரவிக்கும் பொருட்டு அரசு கலாபூசணம் விருதை இப்போது வழங்குகின்றது. தமிழ் பகுதியில் உள்ள மக்களும் தமது கலைஞர்களை உரிய முறையில் கௌரவிப்பதன் மூலம் எமது கலைகளைப் பேணிக்காக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் கவிஞர் சோ.பத்மநாதன்

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் கலாபூசணம் விருது பெற்ற கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நல்லூர் கலை கலாசாரப் பேரவையில் கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கவிஞர் சோ. பத்மநாதன் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பண்டைக் காலத்தில் கலைஞர்களை மன்னர்கள் பாராட்டிக் கௌரவித்தனர். இப்போது அரசு செய்கிறது. தமிழர்களுக்கு இது பெரிய அளவில் இல்லாவிட்டாலும் கலாபூசணம் விருது வழங்கும் நிகழ்வுகள் அரசால் நடத்தப்படுகின்றமை ஓரளவுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை பெரிய அளவில் இல்லாவிட்டாலும்கூட கலைஞர்களைப்பாராட்ட வேண்டும் என்ற நினைப்புடன் இது போன்ற நிகழ்வுகளை நடத்துவது மகிழ்ச்சிக்குரியது.

தென்பகுதியில் இது போன்ற நிகழ்வுகள் பெரிய அள[illegible] பெறுகின்றன. நாடளாவிய ரீதியில் கலைஞர்களைக் கௌரவிக்கும் விழா எவ்வாறு பிரமாதமாக நடைபெறுகின்றது என்பதை அனுபவரீதியாக என்னால் அறியக் கூடியதாக இருந்தது.

கலைஞர்களுக்கு ஓய்வு கிடையாது. எங்களது கலைஞர்களை உலகம் அறியத் தக்கதாக எமது செயற்பாடுகள் அமைய வேண்டும் என்றார்.

பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் உரையாற்றுகையில் -

தமிழர்களின் இராசதானியாக விளங்கிய இப் பிரதேசம் பல்வேறு துறைசார்ந்த கலைஞர்களை உள்ளடக்கியது. எமது கலைஞர்களைப் [illegible] வும், எதிர்கால சந்ததியிடம் எமது கலைகளை உரிய முறையில் கையளிக்கவும் கலை தொடர்பான அம்சங்களை நிலைநாட்டவும் எமது கலைஞர்கள்தம்மை அர்ப்பணிக்கிறார்கள். அந்த அர்ப்பணிப்புக்கு உந்து சக்தியாக இருந்து ஊக்குவிக்க வேண்டியது எமது மக்களின் பொறுப்பாகும்.

கலாசாரப் பேரவை மூலம் நாங்கள் அந்தப்பணியைச் செய்வது திருப்தி தருகின்றது. எமது கலைஞர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள தமிழ் மக்களுக்கு எமது கலாசாரம், பண்பாடுகளை எடுத்துக் கூறி வருகின்றார்கள்.

கடந்த முறை பல கலைஞர்கள் எமது பகுதியில் இருந்து கலாபூசணம் விருது பெற்றுள்ளனர். இம்முறை எட்டுப் பேருக்கே கிடைத்துள்ளது. நாங்கள் கலைஞர்களைக்கௌரவித்து எமது கலைகளைப் பாதுகாப்போம் என உறுதி கொள்ள வேண்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் கலாசாரப் பகுதி உத்தியோகத்தர்கள், திருமதி ரஜனி தமிழ்மாறன் ஆகியோரும் உரையாயாற்றினர்.

இந்த நிகழ்வில் கலைஞர்களைக் கௌரவித்து பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டது. ( 204 - 7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும்
தேவதாஸ்சன் அன்ரன் மொறிஸ் அவர்களின் தந்தை

**அ.ம.பெரிற்ரோ தேவதாஸன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடை ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக் கல்வி அலுவலகம்,
தீவகம், வேலணை.

வலயக் கல்விப் பணிப்பாளரும்
அனைத்து அலுவலர்களும்.

## தவறிவிட்டது

திருமணவைபவத்திற்கு தைப்பதற்காக எடுத்துச் செல்லப்பட்ட 3 சட்டைத் துணிகள் + 2 லைனிங் கொண்ட பார்சலொன்று யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கும் கோப்பாய் பருத்தித்துறை வீதியிலுள்ள மாதா கோயிலுக்குமிடையில் சைக்கிலிருந்து, சென்றவெள்ளிக்கிழமை தவறிவிட்டது. பார்சலைக் கண்டெடுத்தவர்கள் திருமணச் சடங்குக்கு என்பதால் மனிதாபிமானமாக கீழ்க்காணும் முகவரியில் கூடிய விரைவில் ஒப்படைக்குமாறு மிக தாழ்மையுடனும் அன்பாகவும் கேட்டுக் கொள்கின்றேன்.

சிவாநந்தன், நூலகம், மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## மரண அறிவித்தல்கள்

### தேவராசா கேதீஸ்வரன்



குடத்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா கேதீஸ்வரன் 31.12.2010 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற தேவராசா-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், ஹேமாவின் அன்புக் கணவரும், ச.நேசராசாவின் அன்பு மைத்துனரும், நே. பராசக்தியின் அன்புச் சகோதரனும், நே.கௌதமன், நே.கௌதமி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.01.2011 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

331/1, யாழ். வீதி,
மானிப்பாய்.

(108430)

தகவல்:
நே.பராசக்தி(சகோதரி).

### சவரிமுத்து விக்ரோறியா (தங்கப் பொன்)



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து விக்ரோறியா (தங்கப்பொன்) நேற்றுமுன்தினம் (02.01.2011) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கபிரியேல் சவரிமுத்துவின் அன்பு மனைவியும் யோசப் தேவதாசன், சூசைதாசன், காலஞ்சென்றவர்களான மரியதாசன் மற்றும் மேரிதிரேசா, அல்பேட், பிலோமினா, மரியகிறேஸ், பெனிற்றா, யூட் ஆகியோரின் அன்புத் தாயாரும், மேரி ஆன், கில்பா, றெஜினாயோகம், மிறன்டா, கிறேசியன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற அந்தோனிமுத்து (ஆசிரியர்) மற்றும் நீக்கிலஸ் (பப்பா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நொய்லீன், ஏஞ்சலீன், யுடாயின், சைமன், ஈவா, யஸ்மின், நான்சி, ஜெறமி, ஆசாந்தி, ஜொனாத்தன், ஜஸ்ரின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அருட்தந்தையர்கள் லோறன்ஸ், லெஸ்லி அன்ரனி, அருட்சகோதரி அமில் (திருச்சிலுவை) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2011) செவ்வாய்க்கிழமை பி.ப 3.30 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் அவரின் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

386, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

(108438)

தகவல்
பிள்ளைகள்.

# நினைவலைகள்

தோற்றம் 05 - 01 - 1946 மறைவு 07 - 04 - 1994




### வேலுப்பிள்ளை கருணாநிதி

(பிரபல CIMA விரிவுரையாளர், RRT)

ஊர் உலகம் போற்ற வாழ்ந்த
கணக்கியில் வித்தகரே...
குடும்பத்தின் ஆரோக்கியம் காத்த
எங்கள் தலைவனே...
எங்கு சென்றுவிட்டீர் எமை
எல்லாம் விட்டு வெகுதூரம்...
உங்கள் 65 ஆவது ஜனனதினம்
எமை எல்லாம் வாட்டுகின்றதே
உங்கள் நினைவில்...
வரமாட்டீரோ மீண்டும்,
மீண்டும் எமை எல்லாம்
மகிழ்ச்சியில் ஆழ்த்த...
காத்திருக்கின்றோம் ஐயா
உங்கள் 65 ஆவது ஜனனதினத்தில்
நாம்...

212, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தோற்றம் 27 - 07 - 1979 மறைவு 04 - 01 - 2005



### கருணாநிதி கஜன்

(புனித பரியோவான் கல்லூரி A/L 98 கணிதப் பிரிவு)

ஆண்டுகள் ஆறு ஆயினவே ஆயினும்
ஆறவில்லை எம் துயர்
இன் முகனாய் வாழ்ந்திருந்தாய்
இன்பத்தையே எமக்களித்தாய்
இட்ட வரம் வந்து சேர
இடையினிலே பிரிந்தாயே
இறைவனடி சேர்ந்ததினால்
இனி வர மாட்டாயோ!
பத்து மாதம் சுமந்தாள் அம்மா
பக்குவமாய் உனை வளர்த்தோமே
பாதியிலே மறைந்தாயே எம்மை
பதைபதைக்க வைத்தாயே
இறைவனடி சேர்ந்ததினால்
இனிவர மாட்டாயோ!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# ஓராண்டு நினைவலைகள்



தளிராக 04 . 10 . 2005



### செல்வி பேரினியாள் சிவகுமாரன்

பேரினியா ளெனப் பெருநாமம் சூட்டி
பார்போற்றப் பவனி வருவாயென நாமிருக்க
ஊர் உறைய உத்தமரும் கண்நிறைய
உலகை வெறுதனையோ!

ஓராண்டென்ன ஒருயுகம் சென்றிடினும்
தீராது உன் நினைவுகள் - என்றும்
நீ பதித்த சுவடுகள் உன்கதை கூறியெமை
நாளும் எழுப்பும் உனை வணங்க.

வாகான தளிராக, வாலாய மலராக,
வரமாக அவதரித்த வண்ண மகளே!
ஏகாந்தமாக நீ எப்படியம்மா இருக்கிறாய்?
என்று வருவாயென்று காத்திருக்கும்







மலராக 04 . 01 . 2010

சிறப்பத்தன்புலம்,
தெல்லிப்பழை.

திரு.திருமதி சிவகுமாரன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறி நடைபெறும் கட்டுமானத்தால் வட்டக்கச்சி ம.வி. சமூகத்தினர் கவலையில்

கிளிநொச்சி,ஜன.4

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு முன்னர் இயங்கி வந்த காணியில் சிலரால் கட்டடங்கள் அமைப்பதற்கான வேலைகள் நடைபெறுவதால் பாடசாலைச் சமூகத்தினர் கவலையடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தப் பாடசாலையின் ஆரம்பப்பிரிவு மேற்குறிப்பிட்ட காணியிலேயே இயங்கி வந்தது. போரின்போது பாதுகாப்புக் கருதி ஆரம்பப் பிரிவு மாணவர்கள் அருகிலுள்ள பிரதான பிரிவுடன் இணைக்கப்பட்டிருந்தனர். ஆனால் கட்டடங்கள் எதுவும் அகற்றப்படாமல் அப்படியே இருந்தன.

போர் ஓய்ந்து மக்கள் மெல்ல மெல்லக் குடியேறிவரும் நிலையில் சொற்ப மாணவர்களே பாடசாலையில் இணைந்து கொண்டனர்.

இதனால் ஆரம்பப்பிரிவு தனியாக இயங்காது பிரதான பிரிவுடனேயே இயங்கி வருகிறது. மக்கள் முழுமையாக மீள் குடியேறி மாணவர்களின் வருகையும் அதிகரிக்கும் போது ஆரம்பப் பிரிவு தனியாக இயங்க வேண்டிய நிலை தோன்றும்.

அத்துடன் நாடு பூராவும் 1000 பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. வட்டக்கச்சி மகா வித்தியாலயமும் இந்தத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனால் ஆரம்பப் பிரிவு கட்டாயமாகத் தனித்தியங்க வேண்டிய தேவை தோன்றியுள்ளது. ஆனால் இந்தப் பிரிவு இயங்கிய காணியில் வேறு தரப்பினரால் கட்டடங்கள் அமைக்கப்பட்டால் பாடசாலையின் அபிவிருத்தி கேள்விக்குறியாகி விடுமெனப் பாடசாலைச் சமூகத்தினர் அஞ்சுகின்றனர்.

பாடசாலைக்குரிய காணியில் அனுமதியின்றிக் கட்டடங்கள் அமைக்கப்படுவது தொடர்பாகப் பாடசாலை அதிபர், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதேச செயலர் ஆகியோருக்குக் கடிதம் மூலம் முறையிட்டுள்ளனர். இதுதவிர பழைய மாணவர் சங்கத்தினரும் இது தொடர்பாகத் தமது கவலையை வெளியிட்டதோடு இதனைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னணிப் பாடசாலையாக விளங்கும் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் யுத்தத்துக்கு முன்னர் சுமார் 1000 மாணவர்கள் கல்வி கற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் மக்கள் மீளக் குடியேறியபோது பற்றைக் காடாகக் காட்சியளித்த இந்தக் காணியைப் பெற்றோர்களே துப்புரவு செய்தமையும் கவனத்தில் கொள்ளக்கூடியது. (க-405)

## தொழில் வங்கியில் பதிவுகளை மேற்கொள்வதற்கு இடம் பெயர்ந்தவர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படுமா?

### இடம் பெயர்ந்த கிளிநொச்சி இளைஞர், யுவதிகள் கேள்வி

கிளிநொச்சி,ஜன.4

கிளிநொச்சிச் செயலகத்தில் இயங்கும் தொழில் வங்கியில் பதிவு செய்வதற்கு இந்த மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து ஏனைய மாவட்டங்களில் வசிக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் வாய்ப்புக் கிடைக்குமாவென அவர்கள் வினா எழுப்பியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளைத் தொழில் வங்கியில் பதிவு செய்யுமாறு மாவட்ட அரச அதிபர் தெரிவித்ததையடுத்து ஏனைய மாவட்டங்களில் இடம்பெயர்ந்து வாழும் இளைஞர், யுவதிகள் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளனர்.




கிளிநொச்சி மாவட்டத்தில் பல இடங்களிலும் மக்கள் இன்னமும் குடியேற அனுமதிக்காத நிலையிலுள்ளனர்.

இதனால் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாகப் பலர் வேறு மாவட்டங்களில் வசித்து வருகின்றனர்.

இவர்களுக்கான பதிவுகள் யாவும் அந்தந்த மாவட்டங்களிலேயே இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில் வேலை வாய்ப்பின்றி இருக்கும் மீளக் குடியமர அனுமதிக்காத கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் தமக்கு வாய்ப்பளிக்கப்படுமாவெனக் கேள்வி எழுப்பியுள்ளனர். (க-207)

## ஆழம் பார்க்கும் கண்கள்....



அரக்கனுக்கு விடுதலை: முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலய வளவிலுள்ள கிணற்றிலிருந்து வெடிக்காத நிலையிலிருந்த குண்டொன்றை சுவிஸ் தொண்டு நிறுவன கண்ணிவெடியகற்றும் பிரிவினர் அகற்றுகின்றனர். (555)

# வவுனியா வடக்குப் பாடசாலை மாணவர் வரவில் ஒழுங்கீனம்

வவுனியா,ஜன.4

வவுனியா வடக்கிலுள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வரவு ஒழுங்கீனமான முறையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கனகராயன்குளம், புளியங்குளம், நெடுங்கேணி, குளவிசுட்டான் ஆகிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலேயே மாணவர்களின் வரவு ஒழுங்கற்ற முறையில் காணப்படுகின்றது. இதனால் அவர்களது கல்விச் செயற்பாடுகளை உரியவகையில் முன்னெடுத்துச் செல்வதில் சவால்கள் தோன்றியுள்ளதாக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன். சோமராஜா தெரிவித்தார்.

வவுனியா வடக்கு கல்விப் பணிமனையும் SHADE எனப்படும் நிறுவனமும் இணைந்து தயாரித்த ஒளிக்கீற்று என்னும் குறும்பட வெளியீட்டு விழா கடந்த புதன்கிழமை இறம்பைக்குளம் அந்தோனியார் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்விப் பணிப்பாளர் இதனைத் தெரிவித்தார்.

மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்விச் சமூகத்தின் ஒத்துழைப்பின்றி மாணவர்களின் கல்வி வளர்ச்சியை அபிவிருத்தி செய்ய முடியாது. போர் மற்றும் இடப்பெயர்வு காரணமாகப் பல்வேறு வகையிலும் பாதிப்படைந்த மாணவர்களின் கல்வியை எதிர்காலத்தில் தடைகள் ஏதுமின்றித் தொடருவதற்கு அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம்.

மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் சமுகமளிக்காததால் ஆசிரியர்களும், அதிபர்களும் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர். இவர்களால் மாணவர்களின் அடைவுகளைச் சரிவர அறிக்கைப்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறான குறும்படங்கள் மூலமாக அனைவரையும் விழிப்படையச் செய்ய முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன், வவுனியா பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர்.சத்தியமூர்த்தி ஆகியோரும் உரைநிகழ்த்தினர். (க-501)

## கிளிநொச்சி நகரில் கடையுடைத்துத் திருட்டு

கிளிநொச்சி,ஜன.4

கிளிநொச்சி நகரில் பெட்டிக்கடையொன்று உடைக்கப்பட்டு அதனுள் இருந்த பொருள்கள், பணம் என்பன களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏ-9 வீதியில் புனித திரேசாள் தேவாலயத்துக்கு அருகில் இந்தப் பெட்டிக்கடை அமைந்திருந்தது. கடந்த 28 ஆம் திகதி இரவே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இரவு 8 மணியளவில் வழமை போல கடை உரிமையாளர் கடையைப் பூட்டி விட்டு வீட்டுக்குச் சென்றுள்ளார். மறுநாள் காலை வந்து பார்த்தபோது கடையின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தமையைக் கண்டு கொண்டார். கடையினுள்ளே சென்று பார்த்த போது பொருள்களும் ஒரு தொகைப்பணமும் களவாடப்பட்டுள்ளமை தெரியவந்தது.

இருகைத்தொலைபேசிகளின் சிம் அட்டைகள் கழற்றி வீசப்பட்ட பின்னர் எடுத்துச் செல்லப்படுள்ளன.

ஏறத்தாழ 35 ஆயிரம் ரூபா அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-405)

## கிளிநொச்சியில் இனங்காணப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் கையளித்தல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (நேற்றைய தொடர்ச்சி) | 301.ME-3357 | 337.HT-0556 | 373.150-6642 | 409. 143-5861 | 445. WPJX-5048 |
| 266. 500 - 6384 | 302.112-4025 | 338.MJ-0354 | 374.159-7928 | 410. 500-6491 | 446. NPGS-6487 |
| 267. JU - 0122 | 303.HR-3132 | 339.152-9935 | 375.147-2066 | 411. WPGF-7841 | 447. NPJT-5441 |
| 268. HB - 0891 | 304.116-0737 | 340.UB-0434 | 376.152-0810 | 412. JC-5267 | 448. NPHU-2187 |
| 269. HX - 3337 | 305.JY-8745 | 341.158-9031 | 377.GP-4344 | 413. NPMQ-7895 | 449. 147-2187 |
| 270. HY -7729 | 306.156-4256 | 342.GL-5668 | 378.HG-0782 | 414. NPJL-6577 | 450. EPJP-9139 |
| 271.MQ-6759 | 307.JX-0022 | 343.GE-1784 | 379.JT-8496 | 415. MK-4797 | 451. HA-6086 |
| 272.MT-8770 | 308.JY-8701 | 344.GK-8407 | 380.500-0751 | 416. 142-6817 | 452. NPMQ-6774 |
| 273.JQ-4751 | 309.JY-8075 | 345.147-2056 | 381.156-4649 | 417. MG-9589 | 453. 500-4035 |
| 274.HA-5936 | 310.JU-1761 | 346.148-4699 | 382.158-6405 | 418. HK-3072 | 454. 155-9763 |
| 275.ME-3264 | 311.JZ-4536 | 347.GJ-4686 | 383.144-4849 | 419. NPME-8207 | 455. 139-3413 |
| 276.ME-0112 | 312.HK-4853 | 348.HA-6150 | 384.HC-3619 | 420. WPGB-3027 | 456. NPHW-2666 |
| 277.MJ-8396 | 313.500-4620 | 349.GS-9064 | 385.144-3686 | 421. 140-2122 | 457. 157-8006 |
| 278.GL-9149 | 314.JU-4885 | 350.103-8401 | 386.142-2758 | 422. 85-8429 | 458. NPHC-7243 |
| 279. MG-9548 | 315.131-3334 | 351.132-9636 | 387.142-3132 | 423. 500-5180 | 459. GZ-4269 |
| 280. MA-5640 | 316.MG-4680 | 352.140-8796 | 388.HL-1586 | 424. JG-6983 | 460. MG-4930 |
| 281. MC-6991 | 317.HA-6357 | 353.GI-0665 | 389.HS-8128 | 425. NPHZ-3569 | 461. NPJJ-8048 |
| 282. MS-5047 | 318.MQ-2817 | 354.144-4327 | 390.502-0718 | 426. 144-6990 | 462. 153-4408 |
| 283. HG-2404 | 319.142-8408 | 355.GO-8475 | 391.158-8560 | 427. HI-6552 | 463. JU-4773 |
| 284. HX-4595 | 320.JP-3981 | 356.JG-1153 | 392.143-1502 | 428. MC-9707 | 464. NPJN-4350 |
| 285. JN-5635 | 321.HP-3606 | 357.126-9421 | 393.126 - 4717 | 429. GJ-7397 | 465. MB-9214 |
| 286. MG-8608 | 322.141-8488 | 358.153-8364 | 394.500-9002 | 430. 154-3705 | 466. GI-1796 |
| 287. ML-4984 | 323.MC-9417 | 359.156-9838 | 395.113-3963 | 431. JZ-8288 | 467. MW-1398 |
| 288. GZ-4807 | 324.MT-2366 | 360.HD-6885 | 396.132-6098 | 432. 159-7884 | 468. MN-7140 |
| 289.155-9111 | 325.HU.3084 | 361.HC-0954 | 397.HK-1612 | 433. GO-6101 | 469. JB-5123 |
| 290. UB-0485 | 326.MU-2118 | 362.132-8541 | 398.140-7258 | 434. 500-5806 | 470. TH-0468 |
| 291.JG-1744 | 327.GZ-8831 | 363.JY-8730 | 399.155-4363 | 435. EPGC-1404 | 471. GQ-1115 |
| 292. GR-8956 | 328.137-3070 | 364.144-3815 | 400.92-6011 | 436. HX-0574 | 472. NPMB-1656 |
| 293. HQ-2080 | 329.500-4977 | 365.114-0082 | 401.JU-9459 | 437. HD-3161 | 473. EPGG-0446 |
| 294. ML-9198 | 330. NPMG-5253 | 366.GW-5591 | 402.MQ-2719 | 438. NPHE-2136 | 474. UB-0179 |
| 295. HY-7251 | 331. NPHE-3691 | 367.156-2360 | 403.JY-5704 | 439. JC-7207 | 475. HO-6833 |
| 296. MC-0030 | 332.HV-0014 | 368.159-5715 | 404.HV-4676 | 440. 128-1788 | 476. 142-1524 |
| 297. MW- 8529 | 333.GC-7484 | 369.MU-3483 | 405.JP-2914 | 441. JJ-8918 | 477. NPHM-9634 |
| 298.139 - 3055 | 334.GN-1122 | 370.GU-9973 | 406. HK - 1350 | 442. 36-9278 | 478. 147-8486 |
| 299.TS - 7884 | 335.GQ-6823 | 371.133-8071 | 407. 152-5727 | 443. MT-2188 | 479. NPJY-9788 |
| 300.JZ - 4576 | 336.GQ-5504 | 372.160-7753 | 408. 113-0162 | 444. MR-2982 | (தொடரும்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. எடுக்கும் தீர்மானங்கள் நாட்டை அடகு வைக்கமாட்டா

## இப்படிக் கூறுகிறார் சஜித்

கொழும்பு,ஜன.4

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தீர்மானம் எடுக்கப்படும் போது இந்த நாட்டின் இறைமையைச் சர்வதேச சக்திகளிடம் அடகு வைக்காத விதத்தில் தீர்மானம் எடுக்கப்படும் என்று ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ கூறினார்.

நாரஹேன்பிட்டியில் உள்ள போதிரணசிங்க மன்ற அலுவலகத்தில் இடம் பெற்ற புதுவருட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

எமது கிராமிய விழுமியங்களைப் பாதுகாக்கக் கூடியவாறு புதியதுவம் ஒன்றை உருவாக்க வேண்டியது ஐக்கிய தேசியக் கட்சியின் கடமை. அதேபோல் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மிகவும் துன்பத்தை அனுபவித்து வரும் - அகதி முகாம்களில் அவதியுறும் மக்களைப் பாதுகாக்க வேண்டியது ஐக்கிய தேசியக் கட்சியின் கட்டாயக் கடமை. அதேநேரம் இந்நாட்டு மக்கள் அனைவரையும் நாம் பாதுகாக்க வேண்டும். இந்த நாட்டில் வீடுகள் இல்லாமல் வாழும் 12 லட்சம் மக்களுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்கவும் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழில் வாய்ப்பற்ற இளைஞர்களின் துயர் துடைக்க அடியெடுத்து வைக்க வேண்டும்.

மொத்தத்தில் இந்நாட்டு மக்கள் அனைவரினதும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய யுகமாக நாம் இந்த 2011ஆம் ஆண்டை மாற்றியமைக்க வேண்டும். எமது கட்சியின் சார்பில் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது சர்வதேச சக்திகளின் செல்வாக்குகளுக்கு எமது நாட்டின் இறைமையையும், நாட்டின் மக்களையும் அடகு வைக்காதவாறு தீர்மானங்கள் எடுக்கப்படும்.

எமது நாட்டின் இறைமையை எந்தச் சந்தர்ப்பத்திலும் சர்வதேச சக்திகளிடம் காட்டிக்கொடுக்கப்படமாட்டாது. எமது நாட்டின் இறைமையையும், மக்களையும் நாம் பாதுகாப்போம் - என்றார். (ஓ-சி)

## பட்ஜட்டுக்கு எதிராக வாக்களித்த

# உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு எதிராக அரச தரப்பு நடவடிக்கை

கொழும்பு,ஜன.4

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்த அரச தரப்பு உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார்.

''சில உள்ளூராட்சிச் சபைகளின் தவிசாளர்கள் மீதுள்ள அதிருப்தியை வெளிக்காட்டுவதற்காகவே அரச உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

தவிசாளர்கள் மீதுள்ள வெறுப்பைக் காட்டும் முறை இதுவல்ல. அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இந்த உறுப்பினர்களை அழைத்து எச்சரித்துள்ளார். இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நிலைமையை வைத்துக் கொண்டு எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் அரசு தோல்வியடையும் என்று கூற முடியாது. மக்கள் இன்னும் அரசுடன்தான் இருக்கின்றனர்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பாக நாம் இப்போதே நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். எமது வெற்றியை அசைக்க முடியாது.

ஐ.தே.கவின் யாப்பு மறுசீரமைக்கப்பட்டுள்ளது என்பதற்காக அக்கட்சி வென்றுவிடும், எமது கட்சி தோல்வி அடைந்துவிடும் என்று கூறுவது முட்டாள்தனம்'' - என்றும் அவர் கூறினார். (ஓ-சி)

# சிலாபம் தெற்கு ஆராய்ச்சி நிலையக் காணியில் நூறு தென்னை மரங்கள் வெட்டிச் சரிப்பு

## அரசால் விதிக்கப்பட்ட தடை மீறப்பட்டது

கொழும்பு, ஜன.4

எகிறிச் செல்லும் தேங்காயின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக தென்னை மரங் களை வெட்டுவதற்கு அரசு பூரண தடையை விதித்துள்ள இவ்வேளையில் சிலாபம் பிரதேசத்தில் தெங்கு ஆராய்ச்சி நிலையத்துக்குச் சொந்தமான காணியில் நூறு தென்னைகள் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வேலியே பயிரை மேய்ந்தது போன்ற இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமார உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தென்னைகளை வெட்டுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை அப்பட்டமாக மீறியுள்ள இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய அதிகாரிகளைக் கண்டுபிடித்து எவ்வித பக்கசார்பும் இன்றி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

தேங்காய்களின் அறுவடையை அதிகரிக்கும் வண்ணம் மேற்கொள்ள வேண்டிய துரித நடவடிக்கைகள் பற்றி லுணுவில தென்னை ஆராய்ச்சி நிலைய அதிகாரிகளுடன் நடந்த கலந்துரையாடலின் போதே அமைச்சர் மேற்கூறிய தகவலை வெளியிட்டார். (சி)

# இந்த மாதம் முதல் யாழ்தேவி ஓமந்தை வரை செல்லும்

கொழும்பு, ஜன.4

தாண்டிக்குளத்துக்கும் கொழும்புக்கும் இடையில் தற்போது சேவையில் ஈடுபட்டு வரும் யாழ்தேவி ரயில் இந்த மாதம் முதல் ஓமந்தைவரை பயணம் செய்யும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரயில்வே திணைக்களத்தை மேற்கோள்காட்டி பாதுகாப்பு அமைச்சு இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. இதற்கான பாதை நிர்மாணப் பணிகள் முடியும் தறுவாயில் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க வவுனியாவில் இருந்து காங்கேசன்துறை வரையிலான 159 கிலோமீற்றர் ரயில் பாதை மீள் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த பாதையின் ஊடாக 16 பிரதான ரயில் நிலையங்களும், 12 துணை நிலையங்களும், 85 பாலங்களும் உள்ளன. இந்தியாவின் ரயில்பாதை நிர்மாண நிறுவனம் இந்தப் பாதையைப் புனரமைத்து வருகிறது.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ், புதிய சமிஞ்கை முறைமை, மற்றும் தொலைத் தொடர்பாடல் வலையமைப்பு முறைமை என்பனவும் உள்ளடக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)


## திருத்தம் - பகிரங்க ஏலவிற்பனை

03.01.2011ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் பஜாஜ் 39-1272 இலக்க ஓட்டோ வாகனம் 10.01.2010 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு ஏலவிற்பனை செயயப்படும் என்பதை 10.01.2011 எனத் திருத்தி வாசிக்கவும்.


# உயர்தரப் பரீட்சையில் கொரிய மொழி

கொழும்பு, ஜன.4

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு கொரிய மொழி ஒரு பாடமாக அறிமுகம் செய்யப்படும் - எனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஏற்கனவே சீன, ஜேர்மன், பிரெஞ்சு, இந்தி, ஆங்கிலம் ஆகிய வெளிநாட்டு மொழிகளுடன் இப்போது கொரிய மொழியும் ஒரு பாடமாக்கப்படுகின்றது என் றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

கொரிய அரசின் உதவியுடன் கொழும்பு ஹோமாகம மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் கொரிய மொழி ஆய்வுகூடம் அமைக்கப்படும். கொரிய மொழி ஆற்றலுடன் கூடிய இலங்கையருக்கு கொரியாவில் ஏராளமான வேலை வாய்ப்புகள் உள்ளன.

தற்போது பல தனியார் நிறுவனங்கள் கொரிய மொழியைக் கற்பித்து வருகின்றன. இதனால் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் இம்மொழியை அறிமுகம் செய்வதற்கு அரசு தீர்மானித்தது. இந்தப் பாடத்தைக் கற்பிப்பதற்கு கொரிய அரசு அவர்களின் நிபுணர்களின் சேவையைப் பெற்றுத்தர சம்மதம் தெரிவித்துள்ளது.

சாதாரணதரப் பரீட்சையில் வாழ்கைத்திறன் எனும் பாடத்தையும், உயர் தரத்தில் தொழில்நுட் பம் எனும் பாடத்தையும் அறிமுகம் செய்யவுள்ளோம். சாதரண பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியடையாதவர்களை உயர்தரத்தில் கலைப்பிரிவில் படிக்க அனும திக்கும் எமது தீர்மானத்தைநாடாளு மன்றத்தில் உள்ள சகல கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளன - இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். (சி)


## உடன் தேவை

ஓவ்செற் மிசின்(Offset) (டேவிற்சன்) வேலைசெய்யக்கூடிய ஒருவர் உடன் தேவை.

தொடர்பு: 0773979388

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 05.01.2011 விநியோகிக்கப்படும்.

ராஜீவ்.

நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

T.P No : 0776090926, 0212222867



# 45ஆம் நாள் நினைவில்

## அமரர் வைத்திலிங்கம் வேலாயுதம்

(பழைய மாணவனும் இளைப்பாறிய ஆசிரியரும், யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்)

எமது பாடசாலையின் பழைய மாணவனும் நீண்டகாலமாக எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறியவருமான வைத்திலிங்கம் வேலாயுதம் அவர்கள் 21.11.2010 ஆம் திகதி காலமான செய்தி அறிந்து எமது கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த துயர் அடைகின்றது. அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

(108415)



# வேலைவாய்ப்பு

புதிதாக அமையவுள்ள விருந்தினர் விடுதிக்கு மேற்பார்வையாளரும் உதவிப் பணியாளரும் தேவைப்படுகின்றனர்.

தகைமைகள்:

1) மேற்பார்வையாளர் : க.பொ.த.(உயர்தரம்) மும்மொழி அறிவாற்றலுடன் உல்லாசப் பயணத் துறையில் அனுபவமுடையவர்கள் விண்ணப்பிக்கவும்.

2) உதவிப் பணியாளர் : க.பொ.த. (சாதாரணம்) கடின உழைப்பு, திறமை, பொறுப்புணர்ச்சி, நேர்மையுடையவர்கள் விண்ணப்பிக்கவும்.

தகுதிச் சான்றுகள், முகவரி, தொலைபேசி இலக்கம் சகிதம் விண்ணப்பிக்கவும்.

தொடர்புகளுக்கு:

த.பெ. இல. 169
யாழ்ப்பாணம்.

(108410)



# முதலாம் ஆண்டு, 12ஆம் ஆண்டு, 21ஆம் மாத நினைவலைகள்



அமரர் கிருஷ்ணபிள்ளை அன்னபூரணம்
தோற்றம் : 06.08.1937
மறைவு : 16.12.2009



அமரர் வைரமுத்து கிருஷ்ணபிள்ளை
30.03.1935
19.02.1999



அமரர் கிருஷ்ணபிள்ளை ரஞ்சித்குமார்
15.09.1976
16.04.2009

தாய், தந்தை, சகோதரன் ஆகியவர்களின் நினைவு தினம் இன்று (04.01.2011) செவ்வாய்க் கிழமை திரு. கிருஷ்ணபிள்ளை உதயகுமார் அவர்களின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உறவினர்களைக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மூத்தநயினார் கோயில் வடக்கு வீதி,
ஆனைக்கோட்டை.

தங்களின் நினைவுகளுடன் வாழும் குடும்பத்தினர்.

(108411)



## SHAMROCK

ஈச்சமோட்டை,யாழ்.

* A/L 2013 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளுடன் English & GIT ஆரம்பமாகியுள்ளது.
* Gr.1 முதல்O/Lவரை
* English Med. 6 to 11
* Eng.Lit. 10,11
* Spoken Eng. 10,11
* புலமைப்பரிசில் Gr.5
* I.C.T (செயன்முறையுடன்)
* சிங்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்களில் செல்பவர்கள் 'சீற் பெல்ட்டை' இனி கட்டாயம் அணியவேண்டியது அவசியம்

## இந்த வருடம் நடைமுறை வரும் என்கிறார் பொலிஸ்மா அதிபர்

கொழும்பு,ஜன.4

வாகனங்களில் செல்லும் பயணிகள் ஆசனப்பட்டிகளை (சீற் பெல்ட்) அணிந்து கொள்வது இவ்வருடம் முதல் கட்டாயமாக்கப்படும் என்று பொலிஸ் மா அதிபர் (ஐ.ஜ.பி) மகிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

ஆங்கில எழுத்துக்களை இலக்கத் தகடுகளில் கொண்ட வாகனங்களுக்கு மட்டுமே இந்த நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஆங்கில எழுத்துக்கள் இலக்கத் தகடுகளில் பாவனைக்கு வருவதற்கு முன்பிருந்த அனேகமான வாகனங்களில் ஆசனப் பட்டிகள் வசதி இல்லாதபடியால் அவற்றுக்கு விலக்களிக்கப்படும். இந்த நிபந்தனையை அமுல்படுத்தப் பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பயணிகளின் பாதுகாப்புக் கருதியே இந்த நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் விபத்துக்களுக்கு உள்ளானவர்கள் பெரும்பாலும் மரணமானது பாதுகாப்புப் பட்டிகள் அணியாத காரணமே என்று பொலிஸ் அறிக்கைகளில் தெளிவாக்கப்பட்டுள்ளதை அடுத்தே இந்த நடைமுறை அமுலுக்குக் கொண்டுவரப்படுகிறது என்றார். (ஒ-5)

# குற்றவாளிகள், வீதி விதிகளை மீறுவோர் கமெராக்களின் உதவியுடன் கண்டுபிடிப்பு

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.4

கொழும்பில் காணப்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும், ஒளிந்து மறைந்து வாழும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கக் கொழும்பில் பொருத்தப்பட்டுள்ள கமெராக்கள் மிக உதவியாக இருக்கின்றன என பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் வீதி விதிமுறைகளை மீறுவோரை வாகன இலக்கங்கள் மூலம் இனங்கண்டு, அவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த வீதிப் போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பர் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இவர்களிடத்திலிருந்து ஆகக்குறைந்தது 1000 ரூபா தண்டப்பணம் அறவிடப்படும் எனவும், தேவைப்படின் நீதிமன்ற உத்தரவின்படி தண்டப் பணத்தை அதிகரித்து அறவிடலாம் எனவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார் எனப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார். (சி)

## நினைவுகூரல்....




பிரார்த்தனை: அமரர் யோசெப் பரராஜசிங்கத்தின் ஐந்தாவது ஆண்டு நினைவு நிகழ்வு இல.43, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரை நிகழ்த்துகின்றார். (204)

# சுற்றுலாப் பயணிகள் வருகையால் ஹோட்டல்கள் நிரம்பி வழிகின்றன

கொழும்பு,ஜன.4

இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த வெள் ளிக் கிழமை முதல் உச்ச மட்டத்தை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலுள்ள சுற்றுலாப் பயணிகளின் ஹோட்டல்கள் யாவும் நிரம்பியுள்ளன.

இது 80 சதவீத உயர்ச்சியைக் காட்டுவதாகப் பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொழும்பிலிருந்து பெந்தோட்டை வரையிலும் உள்ள ஹோட்டல்களில் 80 சதவீதம் நிறைந்துள்ளன.

ஏனைய பிரதேசங்களில் 63 சதவீதம் நிரம்பியுள்ளன.

30 வருடங்களாக நடைபெற்று வந்த யுத்தம் முடிவடைந்து நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவுவதால் சுற்றுலாப் பயணிகளின் வருகை நாளாந்தம் அதிகரித்து வருகிறது. ஐரோப்பிய நாடுகள் சில சுற்றுலாப் பயணிகளுக்கு விதித்திருந்த தடைகள் நீக்கப்பட்டதும் அதற்கு ஒரு காரணமாகும் என்று அவர் கூறினார்.

இவ்வருடத்தில் முதன்முறையாக வரும் சுற்றுலாப் பயணியை வரவேற்க பிரதியமைச்சரின் தலைமையில் குழுவொன்று கட்டுநாய்க்க விமான நிலையத்திற்குச் சென்றிருந்தது.

குறிப்பிட்ட அந்தப் பயணி மிகவும் கோலாகலமாக வரவேற்கப்பட்டார். (ஒ-5)

# மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் போர்க் குற்றச்சாட்டுப் பிரேரணை வருகிறது

ஜெனிவா,ஜன.4

எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக மீண்டுமொரு தடவை போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பிரேரணை யொன் றைக் கொண்டு வருவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக உயர்மட்ட ராஜதந்தி ரிகள் தகவல் தெரிவிக்கின்றனர்.

ஐரோப்பாவில் செயற்பட்டு வரும் விடுதலைப் புலிகள் ஆதர வாளர்களான புலம்பெயர் தமிழர் தரப்பு இது தொடர்பான அடிப் படைத் திட்டத்தை வகுத்துள்ளதாகவும் இதுதொடர்பாக இத்தினங்களில் ஐரோப்பாவின் முன்னணி நாடுகள் சிலவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் ஒத்துழைப்பை பெறுவது தொடர்பாக மேற்படி தரப்பினர் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாகவும் மேலும் அத்தகவல் தெரிவித்துள்ளன.

மேலும் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் நியமித்துள்ள நிபுணர் குழுவின் ஊடாக இலங்கை அரசுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் அறிக்கையொன்றைப் பெறும் திட்டமொன்றும் கூடப் புலம்பெயர் தமிழர் தரப்பின் பிரதிநிதிகளால் வகுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் அத்தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது. (ஐ-22)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இணைந்தா தனித்தா? போட்டி

## ரிஷாத்தின் கட்சி சில தினங்களில் முடிவு

கொழும்பு,ஜன.4

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதா அல்லது அரசுடன் இணைந்து போட்டியிடுவதா என்பது குறித்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீடம் எதிர்வரும் சில தினங்களில் கூடி இறுதித் தீர்மானம் எடுக்கும் - என்று அக்கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் அனைத்துப் பிரதேசங்களிலும் தமது கட்சி போட்டியிடவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். இத்தேர்தலில் சில பகுதிகளில் தனித்துப் போட்டியிடவும் வேறு சில பகுதிகளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடும் அபிப் பிராயமும் உள்ளது. எனினும் இவ்விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் இதுவரை எடுக்கப்படவில்லை. விரைவில் கட்சியின் உயர்பீடத்தினால் கூடி இறுதி முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார். (சி)

# மூலையில் ஒதுக்கிய 450 பஸ்கள் செப்பனிடப்பட்டுச் சேவையில்

கொழும்பு,ஜன.4

கடந்த வருடத்தில் இ.போ.ச. டிப்போக்களில் பாவனைக்கு உதவாது என்ற ரீதியில் ஒதுக்கப்பட்டுக் கிடந்த 450 பஸ்கள் செப்பனிடப்பட்டுச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபை தெரிவிக்கின்றது.

ஏல விற்பனைக்கென ஒதுக்கப்பட்டிருந்த பஸ்களே தற்போது செப்பனிடப்பட்டுள்ளன. ஒரு பஸ்ஸின் திருத்தத்திற்காக 3 தொடக்கம் 4 லட்சம் ரூபா வரை செலவாகியுள்ளது. புதிய பஸ் ஒன்றைக் கொள்வனவு செய்ய 35 லட்சம் ரூபா வரை தேவைப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடெங்குமுள்ள இ.போ.ச. டிப்போக்கள் ஒருங்கிணைந்து மேற்கொண்ட இந்தத் திருத்த வேலைகளின் மூலம் பாவனைக்குத் தயாரான 105 பஸ்களின் வெள்ளோட்டம் கடந்த வெள்ளிக்கிழமை போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கமவின் தலைமையில் கதிர்காமத்தில் நடைபெற்றது. (ஒ-5)

# தேசிய கீதம் பாடப்படும் விவகாரம் தொடர்பில் இனங்களிடையில் முறுகலை ஏற்படுத்தாதீர்

## பிரதமரிடம் மல்வத்த தேரர் கோரிக்கை

கொழும்பு, ஜன.4

தேசிய கீதம் பாடப்படும் விவகாரம் தொடர்பில் இனங்களுக்கு இடையில் பிரச்சி னையை ஏற்படுத்த வேண்டாம்.

இவ்வாறு பிரதமர் டி.எம். ஜயரட்ணவிடம் மல்வத்து பீட அனுநாயக்க தேரரான நியங்கொட விஜிதசிறி நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமர் டி.எம்.ஜயரட்ண மல்வத்து பீட அனுநாயக்க தேரரை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சந்தித்து ஆசிபெற்றார். இதன்போதே பிரதமரிடம் மேற்படி தேரர் கோரிக்கை விடுத்தார்.

தேசிய கீதத்தை தமிழில் பாடுவதற்கு அரசமைப்பில் இடமளிக்கப்பட்டுள்ளது என்றும், தேசிய கீதத்தை தமிழில் பாடுவதில் பெரும் சிரமங்கள் இருப்பின், தேசிய கீதம் இசையால் மாத்திரம் இசைக்கப்பட வேண்டும் என்றும் தேரர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசை விமர்சிப்பதை விடுத்து தமது கட்சிகளை ஒருங்கமைத்து எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களுக்கு எதிர்க்கட்சிகள் தயாராக வேண்டும் என்று பிரதமர் டி. எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

எமக்கு இரண்டு உள்ளூராட்சி சபைகளின் வரவு - செலவுத் திட்டத்துக்கான அனுமதி பெற்றுக்கொள்ள முடியாமல் போனாலும் சிலவற்றிற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது.

தனிப்பட்ட வகையில் அல்லது தவறான தீர்மானத்தின் மூலமே சில உள்ளூராட்சிச் சபைகளின் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

அதேவேளை உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல்களுக்கு முன்னர் ஐ.தே.கட்சியும், ஜே.வி.பியும் தமது கட்சிகளைக் கட்டியெழுப்புவது குறித்து கவனம் செலுத்தி சிறந்த எதிர்க்கட்சிகளாகக் களமிறங்குவதற்குத் தயாராக வேண்டும்.

அதை விடுத்து அரசை விமர்சிப்பதில் எதுவித பிரயோசனமும் இல்லை என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். (சி)

## புதிய வருகை...



ஒன்றுகூடல்: நெதர்லாந்தில் சனிக்கிழமை மாலை பணுமாதா ஆசிய யாத்திரிகள் சபையின் ஏற்பாட்டில் உத்ரெக் சைஸ்ஸில் உள்ள த க் லொன்ம்பன் மண்டபத்தில் கிறிஸ்மஸ் தின நிகழ்வினை தமிழ் மக்கள் ஒன்று கூடிக் கொண்டாடினர். (படம்: எஸ்.பார்த்தீபன், நெதர்லாந்துச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?




உங்கள் ராசிக்கு நான்கில் சனி, ஆறில் ராகு, பத்தில் குரு, பன்னிரெண்டில் கேது என்ற நிலையில் பிரதான கிரகங்களின் அமர்வு உள்ளது. ராகு நற்பலன்களை வழங்கும் விதத்தில் உள் ளார். பத்தில் குரு, நான்காம் இட அர்த்தாஷ்டம் சனி சில குறுக்கீடுகளை உருவாக்கினாலும் சம யோசிதம், ஞானம் நிறைந்த சிந்தனை, செயல்களால் புடம்போட்ட தங்கமாய் ஜொலிப் பீர்கள். பொறுமையான போக்கு செயற்பாடு களில் வெற்றியைத் தரும். உங்கள் சொல்லுக்கு சமூ கத்தில் கூடுதல் மதிப்பு, மரியாதை கிடைக் கும். பணவரவுக்கு குறைவு இருக்காது. சகோத ரர்கள் ஓரளவுக்கு உதவிசெய்வர். வீடு, வாகனத்தில் தேவையான பராமரிப்புப் பணி களை நிறைவேற்றினால்போதும். புத்திரர்கள் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் கண்டு உங்களின் குடும்பச்சுமை குறைய இயன்ற அளவு உதவுவர். பூர்வீக சொத்தில் சிறுபகுதியை அடமானம் வைக்க, விற்பனை செய்ய சில சூழ்நிலைகள் உருவாகும். உடல்நலம் படிப்படியாகப் பலம்பெறும். உங்களிடம் எதிரித் தனமாக செயற் பட நினைப்பவர்கள் தன்நிலையில் பலமிழந்து போவர். வழக்கு விவகாரத்தில் இருந்த தாமதம் விலகி அனுகூல பலன் கிடைக்கும். தம்பதியர் குடும்பப் பொறுப் புகளை அக்கறையுடன் நிறைவேற்றி சந்தோஷமாக இருப்பர். சிலருக்கு வீடு, பணியிட மாற்றம் ஏற்படும். ஆபத்து, சிரமம் உருவாகிற தருணங்களில் குரு வருள் துணை நின்று உங்களைக் காக்கும். வெளிநாடு வேலை வாய்ப்பில் எதிர்பார்ப்பு நிறைவேறி நல்ல பலனைத்தரும். தொழிலதிபர்கள் உற்பத்தியை அதிகரித்து நல்ல லாபம் காண்பர்.

பணியாளர்கள் நிர்வாகத்தின் நலன் பாதுகாக்கப்படும் வகையில் செயற்படு வர். நகை, புடைவை, காய்கறி, மின்சார உபகரணங்கள், வாகனம், கட்டுமானப் பொருள் கள், தோல், கண்ணாடி, பீங்கான் பொருள்கள் விற்பனை செய்பவர்கள் கூடுதல் உழைப்பால் விற்பனையைப் அதிகரிப்பர். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பிற பொருள் கள் விற்பவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். சகவியாபாரிகள் உங்களின் கடின உழைப்பைக் கண்டு வியப்புறுவர். நிலுவை பணவரவு எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டு தலை கவனமுடன் பின்பற்ற வேண்டும். பணியில் சிறு அளவிலான குளறுபடி உரு வாகும். சக பணியாளர்களின் உதவி, வழிகாட்டுதலால் பணி இலக்கை சரிவர நிறை வேற்றுவீர்கள். சலுகைகள் ஓரளவுக்கு இருக்கும். குடும்பச் செலவுகளை கட்டுப் படுத்த கடன் பெறுவதும் சேமிப்புப் பணத்தை பயன்படுத் துவதுமான தன்மை இருக்கும். நிதி நிர்வாகம், எழுத்துத்துறை சார்ந்த பணியாளர்கள் வளர்ச்சி காண்பர்.

பெண்கள்:

பணிபுரியும் பெண்கள் பணியில் சில குளறுபடிகளை எதிர்கொள்ளலாம். பணி யிட மாற்றம், பணிச்சுமை போன்றவை ஏற்படலாம். வருட இறுதியில் வளர்ச்சி தரும் மாற்றம் ஏற்படும். குடும்பப் பெண்கள் கணவரின் அன்பு, பாசம் கூடுதலாகக் கிடைத்து அன்றாட குடும்பப் பணியை நிறைவேற்றுவர். தாய்வீட்டு உதவி பெறலாம். சுயதொழில் புரியும் பெண்கள் கூடுதல் மூலதனத்துடன் வியாபார நடைமுறையை அபிவிருத்தி செய்வர். போட்டியை சரிசெய்து முன்னேறுவீர்கள்.

மாணவர்கள்:

மாணவர்கள் நன்றாகப் படிப்பர். படிப்புக்கான பணவசதி ஓரளவுக்குக் கிடைக்கும். புள்ளிகள் அதிகரிக்கும். வேலைவாய்ப்பைத்தேடுபவர்களுக்கு அளவான சம்ப ளத்தில் பணி கிடைக்கும். இருப்பினும் கற்ற துறையில் வளரக் கிடைத்த வாய்ப்பாகக் கருதி பணிபுரிவீர்கள். பெற்றோரின் அன்பு, ஆதரவு சிறப்பாகக் கிடைக்கும். அரசியல் வாதிகள் சமூகத்தில் நற்பெயர் பெற உரிய வாய்ப்புக் கிடைக்கும். ஆதரவா ளர்க ளின் எதிர்பார்ப்பை சரிசெய்ய கொஞ்சம் செலவு செய்வீர்கள். எதிரிகளாகச் செயற் பட்ட வர்கள் உங்களிடம் மறைமுக அனுகூலம் பெற விரும்புவர். புத்திரர்கள் அரசியல் பணிக்கு குறைந்த அளவிலேயே உதவுவர். அரசு தொடர்பான காரியங் களில் அனு கூலம் பெற உங்களின் சமயோசித பேச்சு, அணுகுமுறை உதவும்.

விவசாயிகள்:

விவசாயிகளுக்கு எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். கால்நடை வளர்ப்பின் பலன் உங்கள் குடும்ப செலவினங்களைக் கட்டுப்படுத்தும். நிலம் தொடர்பான பிரச்சினையில் சுமூக தீர்வுவரும்.




உங்கள் ராசிக்கு மூன்றில் சனி, ஐந்தில் ராகு, ஒன்பதில் குரு, பதினொன்றில் கேது என்கிற வகையில் பிரதான கிரகங்களின் அமர்வு உள் ளது. குரு, சனி, கேது ஆகிய மூன்று கிரகங்களும் உங்களுக்கு அபரிமிதமான நற்பலன்களை அள்ளி வழங்கத் தயாராக உள்ளனர். உங்கள் காட்டில் அடைமழைதான் என்று பிறர் சொல் லுகிற விதமாக உங்களின் வாழ்க்கைத்தரம் உயரும். நல்லோர் சொல், வேத சாஸ்திரங்களின் கருத்துக் களை உணர்ந்தும் வாழ்வில் பின் பற்றியும் நடப்பீர்கள். பேச்சில் சாந்தமும் மன தில் கருணையும் நிறைந்திருக்கும்.

சமூகப் பணியில் ஆர்வம் வளரும். சகோதரர்களின் திருமணத்தை சிறப்பாக நடத்துவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க நல்லயோகம் பலமாக உள்ளது. தாயின் அன்பு, ஆசி கிடைக்கும். பூர்வீகசொத்தில் பெறுகிற வருமானம் உங்களின் கண் காணிப்பால் வந்துசேரும். உங்கள் சிறப்புகளைக் கண்டு எதிரிகளும் வியப்புற்று விலகிப் போவர். உடல்நலம் நன்றாக இருக்கும். கடன்களைப் பெருமளவில் அடைத்து விடுவீர்கள். தம்பதியர் கருத்து ஒற்றுமையுடன் நடந்து குடும்பப் பெருமையை உயர்த்துவர். நண்பர்கள் உரிய மரியாதையுடன் நடந்துகொள்வர். குடும்பத்தேவை பெருமளவில் பூர்த்தியாகும். எனவே புதிய அனுபவங்களைக் காண்பீர்கள். தொழில் சார்ந்த வகையில் புதிய முயற்சிகளை செயற்படுத்தி கூடுதல் வெற்றி பெறுவீர்கள். தொழிலதிபர்கள் வளர்ச்சி பெற்று ஆதாய பணவரவு பெறுவர்.

புதியவர்கள் தொழிலில் கூட்டுசேர விருப்பத்துடன் நாடுவர். பணியாளர்களின் ஒத்துழைப்பு சிறப்பாகக் கிடைக்கும். தொழில் நிறுவன அபிவிருத்திப்பணி நிறைவேறும். வெளிநாட்டுச் சுற்றுலா சென்றுவர வாய்ப்பு உருவாகி நிறை வேறும். சமூக அந்தஸ்து உள்ள பதவி, பொறுப்பு கிடைக்கும். நகை, புடைவை, வாகனம், கட்டுமான பொருள்கள், பிளாஸ்டிக், கடல்சார் பொருள்கள், பாத்திரம் ஆகியவற்றை வியாபாரம் செய் பவர்கள் சந்தையில் கூடுதல் வரவேற்பு பெறுவர். விற்பனை சிறந்து உபரி பண வரவைத்தரும். மற்றவர்களுக்கு இவர்களை விட நல்ல லாபம் கிடைப்பதுடன், அபிவிருத்திப்பணிகளையும் நிறைவேற்றுவர். கடன்களை அடைப்பதும், பொருள்கள் கொள்முதலை உயர்த்துவதுமான நன்னிலை உண்டு. அரசு, தனியார் துறையில் பணிபுரிபவர்கள் தகுதி, திறமையைப் பயன்படுத்தி நற்பெயர் பெறுவர். பணி இலக்கு எளிதாக நிறைவேறும். நிர்வாகத்தின் கவனத்தை ஈர்த்து பதவி, சம்பள உயர்வு பெறுவீர்கள். சக பணியாளர்களுடன் நட்பு வளரும். குடும்பத் தேவையை பெருமளவில் பூர்த்தி செய்வீர்கள். மருத்துவம், பொறியியல் துறை சார்ந்த பணியாளர்கள் மிக அதிக வருமானம் பெறுவர்.

**தருபவர்: வித்தியா**

பெண்கள்:

பணிபுரியும் பெண்கள் தமக்குள்ள திறமையை முழுமையாகப் பயன்படுத்தி பணியின் தரத்தை உயர்த்துவர். பணி இலக்கு எளிதாக நிறைவேறும். பதவி உயர்வு, ஏனைய சலுகைகள் கிடைக்கும். குடும்பப் பெண்கள் கணவரின் அன்பு, பாசத்தினை பெறுவர். குடும்பச் செலவுக்கான பணவரவு திருப்திகரமாக இருக்கும். புத்திரப்பேறு வகையில் குறைகளைச் சரிசெய்வதால் நற்பலன் கிடைக்கும். ஆபர ணச் சேர்க்கை உண்டு. சுயதொழில் புரியும் பெண்கள் கூடுதல் மூலதனத்துடன் அபிவிருத்திப் பணிசெய்வர். உற்பத்தி, விற்பனை உயர்ந்து சேமிக்கும் அளவில் பணவரவைத்தரும்.

மாணவர்கள்:

மாணவர்கள் ஒருமித்த மனதுடன் நன்கு படிப்பர். அரசு தொடர்பான காரியங்கள் தாமதமின்றி நிறைவேறும். பதவி, பொறுப்புகளை எதிர்பார்த்தபடி பெறுவீர்கள்.

விவசாயிகள்:

விவசாயிகள் விவசாயப்பணிகளை திறம்பட மேற்கொள்ள அனைத்து வசதிக ளும் கிடைக்கும். கால்நடை வளர்ப்பிலும் முன்னேற்றம் உண்டு. இதனால் தாரா ளமான பணப்புழக்கம் ஏற்படும். கூடுதல் நிலம் வாங்க அனுகூலம் உண்டு. குடும் பத்தில் சுபநிகழ்ச்சி இனிதாக நடக்கும்.

## உருளைக்கிழங்கு வலயம் மத்திய மாகாணத்தில் 4½ கோடி ரூபா செலவில் அமைக்கத் தீர்மானம்

கொழும்பு, ஜன.4

உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை ஊக்குவிக்கும் முகமாக மத்திய மாகாணத்தில் உருளைக்கிழங்கு வலயமொன்றை நிர்மாணிக்க மத்திய மாகாணத்தின் விவசாய, கால்நடை, சுகாதார, விவசாய சேவை அபிவிருத்தி நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் சுற்றாடல்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

உலகத்தின் தலைசிறந்த தொழில்நுட்பத்தில் 40 களஞ்சிய சாலைகளுடன் அமைக்கப்படவுள்ள இந்த வலயம் நுவரெலியா மாவட்டத்திலுள்ள விவசாயி களுக்குப் பேருதவியாக அமையும் எனவும் இதற்கான மொத்தச் செலவு நாலரைக் கோடி ரூபா என்றும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-5)

## போதையில் இடையூறு விளைவித்த இருவர் கைது

வடமராட்சி, ஜன.3

கரவெட்டிப் பகு தியில் மது போதை யில் பொதுமக்க ளுக்கு இடையூறு விளைவித்தனர் என்று நெல்லியடிப் பொலிஸாரால் இரு வர் கைது செய்யப் பட்டனர்.

கைது செய்யப் பட்ட இருவரும் இராஜ கிராமம் பகு தியில் மது போதை யில் நின்று அப்ப குதியில் நடமாடிய பொது மக்களுக்கு இடையூறு விளை வித்து வந்துள்ளனர்.

இது தொடர்பா கப் பொலிஸாருக் குக் தகவல் கிடைத் ததை அடுத்துஅங்கு சென்ற பொலிஸார் இருவரையும் கைது செய்தனர். (201-239)


## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1பிறிமா புறொயிலர் கோழிக் குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 06.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும் (பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்).

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் வைத்திலிங்கம் மார்க்கண்டு



அமரர் பாலசுப்பிரமணியம் கனகபாலன்

கடந்த 25.11.2010, 05.12.2010 ஆகிய தினங்களில் எம்மைவிட்டுப் பிரிந்த எமது குடும்பக் குலவிளக்குகளின் மறைவுகேட்டு எமக்கு நேரிலும், தொலைபேசியிலும் ஆறுதல் கூறி மரணச் சடங்கிலும் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (04.01.2011) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்சாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

124/2, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
செல்வராசா மேஸ்வரன்
(தீபன்)



தோற்றம்
13★09★1985

மறைவு
04★01★2010

தீபத்தின் திருவுருவம் தீபனே!
கள்ளம்அற்ற வெள்ளைச் சிரிப்பால்
உள்ளம் அனைத்தும் கொள்ளைகொண்டு
வஞ்சம்அற்ற நேர்மைப்பண்பால்
நெஞ்சம் அனைத்தும் வெற்றிகொண்டு
சீற்றம் அற்ற அன்புச் சொல்லால்
சுற்றம் அனைத்தும் இனிக்கச்செய்து
கொற்றவன் போல வாழ்ந்த உன்னை
கூற்றுவன் சடுதியில் கவர்ந்து கொன்றது தகுமோ?
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

செல்லப்பிள்ளையார் வீதி,
தவசிகுளம், மிருசுவில். (108341) தந்தை, தாய், தங்கைமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் 'சிக்குன்குனியா' நோயை கட்டுப்படுத்த உதவியது யாழ். மாநகரசபை

## ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ். மாவட்டத்தில் சிக்குன் குனியா நோய்த்தாக்கம் அதிகரித்திருந்தவேளை அதைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுக்கு உதவி வழங்கியது யாழ். மாநகர சபையே என மாநகர சபை ஆணையாளர் மு.சரவணபவன் தெரிவித்தார்.

மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் அண்மையில் இடம் பெற்றது. எனவே இக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் மேலும் உரையாற்றுகையில்:

மாநகர சபையின் ஆயுர்வேத வைத்திய நிலையத்தால் தயாரிக்கப்பட்ட மருந்தே சிக்குன்குனியா நோய்த்தாக்கத்தில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்க உதவியது என்றார் அவர். தொடர்ந்து யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உரையாற்றுகையில்:

வடமாகாண ஆளுநருக்குத் தொண்டையில்ஏற்பட்ட நோயைக் குணப்படுத்தவும் எமது ஆயுர்வேத வைத்திய நிலையத்தால் தயாரிக்கப்பட்ட மருந்து உதவியது. அத்துடன் எமது ஆயுர்வேத வைத்திய நிலையத்தினால் தயாரிக்கப்படும் மருந்துகள் மிகவும் தரம் வாய்ந்ததாகவும் அதனை விளம்பரப்படுத்தி வருவாயை அதிகரிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (201-7)

### இசைக்கருவிகள் மீட்டும் போட்டி

கொழும்புத்துறை றொசாறியன் சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு பிறண்ஸ் இசைக்குழுவின் அனுசரணையுடன் இசைக் கருவிகள் மீட்டும் போட்டிகள் நடத் தப்பட உள்ளன. இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக் குடன் இடம் பெறும் இந்தப் போட்டியில் கீழைத்தேய, மேலைத்தேய வாத்தியக் கருவிகள் மீட்டுவோர் கலந்து கொள்ளமுடியும்.

போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தமது விண்ணப்பங்களை கொழும்புத் துறை றொசாறியன் சனசமூக நிலையம், 28, ஆனந்தன் வடலி வீதி என்னும் முகவரிக்கு எதிர்வரும் 10 ஆம்திகதிக்கு முன் னர் அனுப்பிவைக்கவும். மாண வர் மட்ட திறந்த மட்டங்களில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளதாக நிலையக் கலைப்பிரிவுப் பொறுப்பாளர் எஸ். யேசுதாஸ் தெரிவித்துள்ளார். (201-135)

### சேவையின் சிறப்பு.......



கௌரவிப்பு: மக்கள் வங்கியின் 50ஆவது ஆண்டு பூர்த்தி விழா வங்கியின் சாவகச்சேரி கிளையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் வங்கிக்கிளையின் நீண்டநாள் வாடிக்கையாளருக்கு நினைவுக் கேடயம் வழங்குகிறார். அருகில் வங்கிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் உட்பட வங்கி உத்தியோகத்தர்களும் காணப்படுகின்றனர். (201-207)

# 1,185 அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கு, கிழக்கில் முன்னெடுப்பு

## பொருளாதார அபி . அமைச்சின் அதிகாரி தகவல்

யழ்ப்பாணம்,ஜன.4

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 'கமநெகும' அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஆயிரத்து 185 திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

உப - கருத்திட்டம்மூலம் தெரிவு செய்யப்பட்ட திட்டங்கள் 1532 கிராம அலுவலர்கள் பிரிவில் வடக்கு -கிழக்கில் நடைமுறைப்படுத்தப்படும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இதற்கான நிதியைப் பிரதம செயலாளர்கள் ஊடாக வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி அமைச்சுகளுக்கு வழங்கியுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஏ.கே. ரணவக்க மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

நான்கு ஆண்டுகளில் அமுலாக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்த இந்தத் திட்டங்கள் திடீரென 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 14ஆம் திகதி உப - கருத்திட்டங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கு இலங்கை வங்கியின் கணக்கு ஊடாக நிதி வழங்கப்படும்.

மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபைக்கும் 200 மில்லியன் ரூபா கிடைக்கும்.

மேற்படி அபிவிருத்தித் திட்டங்களில் நேரடி முகாமைத்துவத்தை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர்கள் கண்காணிப்பர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-302)




# ஏழாலைப் பகுதி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் விநியோகம்

வலி.வடக்கு, ஜன.4

வெளிநாட்டு நிறுவனத்தின் உதவியுடன் ஏழாலைப் பகுதியில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. பிரஸ்தாப மாணவர்களுக்கு ஜேர்மனியிலுள்ள வெற்றிமணி அமைப்பின் ஏற்பாட்டில் பாடசாலை உபகரணங்கள் ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் த.வாமதேவன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உடுவில் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சே. குபேரநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் ஏழாலைப் பாடசாலைகளில் அதிபர்களான ஏழாலை சைவ மகஜனா வித்தியாலய அதிபர் திருமதி தேவகி புவனேஸ்வரன், ஏழாலை புனித இசிதோர் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் சு.சிவகுமார் மற்றும் முன்னாள் ஓய்வுபெற்ற அதிபர் சி.சிவகுமார், வெற்றிமணி நிறுவனத்தைச் சேர்ந்த சுபோதினி உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டார்கள். (ஒ-86)

# தென்மராட்சி பிரதேச செயலகத்தில் உதவிக் கொடுப்பனவைப் பெறலாம்

தென்மராட்சி, ஜன.4

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு மருத்துவ உதவி மற்றும் வசதிகளை விரிவுபடுத்தல் உதவி ஆகியவற்றுக்கு விண்ணப்பித்தவர்களில் ஒரு தொகுதியினருக்கான யுனிசெவ் செயற்றிட்டத்தின்கீழ் கொடுப்பனவுகள் வந்துள்ளன. மருத்துவ உதவி கோரிய 10 பேருக்கும் வசதிகளை விரிவுபடுத்தல் உதவி கோரிய 4 பேருக்கும் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் உரிய கொடுப் பனவுக்குரிய காசோலைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கொடுப்பனவு பெற அறிவிக்கப்பட்ட பின்வரும் பயனாளிகள் எதிர்வரும் ஏழாம் திகதி குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ தேவை உதவி: பொ.பரமேஸ்வரி-(மறவன்புலோ), ச. சர்மிளா - (வரணி வடக்கு), இ.சபேசன் - (சரசாலை மத்தி), ஏ. சுந்தரலிங்கம் - (கைதடி தெற்கு), து.யோகதாஸ் - (வரணி வடக்கு), அ. விமலாதேவி - (கல்வயல்), இ.ஜெயரஞ்சினி - (தாவளை - இயற்றாலை), இ.ஜெயதேவி -(சங்கத்தானை), தி. பற்குணம் - (வெள்ளாம் போக்கட்டி), க. இரவிச்சந்திரன் - (பாலாவி வடக்கு)

நலிவுற்ற குடும்பங்களுகான வசதிகளை விரிவுபடுத்தல் தேவை உதவி: த. சறோஜினி - (கெருடாவில் சாவகச்சேரி), பொ.ஜெயரூபன் - (நாவற்காடு, வரணி), சி. செல்வராசா - (கரம்பைக் குறிச்சி),

அ. ஜெயராணி - (கரம்பைக்குறிச்சி)

அத்துடன் பிரதேசத்தில் நடத்தப்பட்ட மாற்று ஆற்றலுடையோர் தகவல்களைத் திரட்டியமைக்காகப் பின்வரும் தொண்டர்களுக்கும் கொடுப்பனவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தொண்டர்களின் விவரங்கள் வருமாறு:

த.ஜெனிகா - (பெருங்குளம் சாவகச்சேரி), தே. மதுவந்தி - (மட்டுவில் தெற்கு), ப. பிரியதர்சினி - (சங்கத்தானை) (201-207)

# கரையான்பிட்டி மயானக் கொட்டகையை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுப்பு

சண்டிலிப்பாய், ஜன.4

நிசாப் புயலினால் சேதமடைந்த ஆனைக்கோட்டை கரையான் பிட்டி இந்து மயானத்தில் அமைக் கப்பட்டுள்ள கொட்டகையை மழைக்காலங்களிலும் சடலங்களைத் தகனம் செய்யக்கூடிய வகையில் புனரமைத்துத் தருமாறு மேற்படி மயானத்தின் அபிவிருத்திச் சங்கத் தலைவர் கே.சுப்பிரமணியம் வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளருக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி மயானத்தில் பல வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டுள்ள தகரத்தினாலான கொட்டகை நிஸாப் புயலினால் பலத்த சேதத்துக்குள்ளானது. கொட்டகையில் பொருத்தப்பட்டிருந்த கூரைத்தகடுகள் சேதமடைந்த நிலையில் இருப்பதால் மழை காலங்களில் சடலங்களைத் தகனம் செய்வதில் காலதாமதமும் சிரமங்களும் ஏற்படுகின்றன. இதேவேளை, மயானத்தின் பாதுகாப்புக் கருதி நலன்விரும்பி ஒருவரால் செய்து கொடுக்கப்பட்டுள்ள 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கேற்றைப் பொருத்துவதற்கு 700 அடி நீளமான சுற்று மதில் மயானத்தைச் சுற்றிக் கட்ட வேண்டியிருக்கிறது. கேற்றைப் பொருத்துவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொள்ளுமாறு அபிவிருத்திச் சங்கத் தலைவர் பிரதேச செயலாளருக்கு கோரிக்கை விடுத்துள்ளார். (201-115)

# உள்ளூராட்சிச் சபைகளூடாக மிகப் பெரும் அபிவிருத்தித் திட்டங்கள்

## வடமாகாண ஆளுநர் உரை

யாழ்ப்பாணம், ஜன.3

வடமாகாணத்தில் உள்ளூராட்சிச் சபைகளின்ஊடாக பெரும் அபிவிருத்தித் திட்டங்களும் சமூக நோக்குத் திட்டங்களும் முன்னகர்த்தப்படவுள்ளன.

அந்தவகையில் வடமாகாணத்தில் 10 இளம் அதிகாரிகளை ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் கொள்கைக்கு இணங்க உள்ளூராட்சிச்சபைச் செயலாளர்களாக நியமிக்கின்றேன்.

இளம் நிர்வாகிகளை உள்ளூராட்சிச்சபைக்கு நியமிப்பதன் ஊடாக அனைத்து அபிவிருத்திகளையும் துரிதமாக மேற்கொள்ளலாம்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

வடமாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள 10 உள்ளூராட்சிச் சபைகளுக்கு 10 நிர்வாக அதிகாரிகளை உள்ளூராட்சி சபைச் செயலாளர் நியமிக்கும் நிகழ்வு கடந்த முதலாம் திகதி வடக்கு மாகாண ஆளுநரின் தலைமையில் பத்திரமுல்ல - லில்லி மாவத்தையில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சிச் சபை செயலாளர்களாகக் கடமையேற்கும்10 நிர்வாகிகளுக்கான நியமனக் கடிதங்களை ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி வழங்கி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

முப்பது வருடகால யுத்த திற்குப் பின்னர் வடக்கின் அபிவிருத்திக்கான நிகழச்சித் திட்டங்களை ஜனாதிபதி மகிந்த சிந்தனைக் கோட்பாட்டுக்கு இணங்க முன்வைத்து நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

அதன் ஓர் அங்கமே இளம் பட்டதாரிகளை, இளம் நிர்வாகிகளைச் செயலாளர்களாக நியமிக்கும் திட்டம் ஆகும்.

இந்தத் திட்டம் இன்று நிறைவேறுகின்றது. இதன் ஊடாக உள்ளூராட்சிச் சபையின் பெரும் அபிவிருத்திகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் சரியான முறையில் இடம் பெறும் என்றார் அவர்.

இந்த நிகழ்வில் - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உள்ளூராட்சி முன்னாள் ஆணையாளர் இ. இளங்கோவன், முன்னாள் யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி, வட மாகாண முன்னாள் பிரதம செயாளரும் ஆளுநரின் செயலாளருமான சி.ரங்கராஜன், வடக்குமாகாணதிட்டமிடல் செயலக பிரதிப்பிரதம செயலாளர் இ. உமாகாந்தன், காணி அபிவிருத்தித் திணைக்கள நிர்வாக அதிகாரி பி. தயானந்தன் மற்றும் உயரதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். வடக்கு மாகாணத்திற்கான 11 விளையாட்டு அலுவலர்கள், 3 பயிற்சியாளர்கள், 14 சுகாதார வெளிக்கள பரிசோதகர்கள் ஆகியாருக்கும் நியமனக் கடிதங்களை வடக்கு மாகாண ஆளுநர் வழங்கினார். (201-301)

# தியாகி அறக்கொடை நிதியத்தின் உபகரணம்

வலி. வடக்கில் அண்மையில் மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் தமது வசிப்பிடங்களைத் துப்பரவு செய்வதற்காக, தியாகி அறக் கொடை நிறுவனம் அலவாங்கு, மண்வெட்டி உட்படப் பல உபகரணங்களை வழங்யுள்ளது. தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகரின் பிறந்த தினத்தை முன்னிட்டு வலிவடக் கில் மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவில் அண்மையில் மீள்குடியமர்ந்த குடும்பங்களில் 100 குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மேற்படி உபகரணங்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை வசதி குறைந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பல்வேறு விதமான உதவிகளை வழங்கிவரும் மேற்படி நிறுவனம் சுதுமலையில் உள்ள புதுமடம் றோ.க.த.க பாடசாலை மாணவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கல்வி உபகரணங்களையும் வழங்கியுள்ளது. (201-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
சில பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கி விட்டுத் திருப்தி இல்லாமல் போகலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும் ஏதாவது ஒரு வழியில் தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர், அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். வழக்கத்திற்கு மாறாகக் கூடுதல் நேரம் தூங்குவீர்கள். மறதியால் அவதியுண்டு.

**இடபம்:**
எந்த விடயத்திலும் மற்றவர்கள் பாராட்டும் வகையில் நடந்து கொள்வீர்கள். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்கள் மூலம் முடித்துக் கொள்வீர்கள். முக்கிய காரியமாக வெளியில் செல்லும் நண்பர்களுடன் நீங்களும் உடன் செல்லலாம். வெளியூர்ப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். தூரத்து உறவினர் ஒருவரைச் சந்திக்கலாம்

**மிதுனம்:**
எல்லோரிடமும் அன்பாக நடந்து கொள்வீர்கள். பெரிய மனிதர்களின் வாழ்த்துக்களைப் பெறுவீர்கள். நல்லவர்களின் யோசனை கேட்டு செயற்பட முற்படுவீர்கள். கணவன் மனைவி இடையே பாசம் அதிகரிக்கும். விருந்து, விசேடங்களால் வீட்டில் மகிழ்ச்சி, சந்தோஷம் குடிகொள்ளும். பணவரவுகளைப் பெறலாம்.

**கடகம்:**
சோர்வு, சோம்பலால் சில வேலைகளைக் காலதாமதமாகச் செய்வீர்கள். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர். நீங்கள் நினைத்தபடி சில காரியங்களைச் சாதிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பீர்கள். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம்

**சிங்கம்:**
பெண்கள் வழியில் சில உதவிகள் கிடைக்கலாம். சில விடயங்களில் இரகசியமாகச் செயற்படுவீர்கள். நீண்ட நாள்களாகச் செல்லாத உறவினர் ஒருவரின் வீட்டிற்கு செல்லலாம். நினைத்த காரியம் ஒன்று நடப்பதில் தடை, தாமதம் ஏற்படலாம். உங்களுக்குத் தெரிந்த ஒருவரை மற்றொருவருக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்கள்.

**கன்னி:**
எதிலும் லாப, நட்டக் கணக்குப் பார்த்து செயற்படும் நாள். நீண்டநாளைய எண்ணங்கள் பூர்த்தியாகும். மின்சார உபகரணங்கள் வழியில் பராமரிப்புச் செலவுகளைச் சந்திக்கலாம். கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரலாம். புதிய அனுபவங்களைப் பெறலாம். உங்களைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படலாம்.

**துலாம்:**
வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். எப்படியும் முடிந்துவிடும் என நினைத்த காரியம் ஒன்று முடிவடையாமல் போகலாம். வெளியூரில் வசிக்கும் உறவினர் ஒருவர் உங்களின் இல்லத்திற்கு வரலாம். உங்களின் கடந்த கால அனுபவங்களைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:**
உங்களின் பேச்சுக்குச் சிலர் எதிர்ப்பேச்சுப் பேசிக் கோபம் உண்டாக்கலாம். நாளைய சில காரியங்களுக்காக இன்றே முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். தேங்கிக் கிடந்த வேலைகளை முடிப்பீர்கள். வரவேண்டிய பணவரவு ஒன்றைக் கேட்டு வாங்குவீர்கள். நண்பர்கள் சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள்.

**தனுசு:**
சிலருக்குக் கடனுதவி அல்லது பொருள் உதவி செய்யலாம். உறவினர் ஒருவரைப் பார்ப்பதற்காக உணவுப்பண்டங்கள் வாங்கிச் செல்லலாம். சிலரிடம் பொய் பேசி முக்கிய காரியம் ஒன்றைச் சாதிப்பீர்கள். சில நிமிடங்களில் முடிந்து விடும் என நினைத்த வேலை ஒன்று நீண்ட நேரத்திற்கு இழுத்தடிக்கலாம். திடீர்ப் பயணம் செல்லலாம்.

**மகரம்:**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயற்படுவீர்கள். பெற்றோர் ஒத்துழைப்பார்கள். சொந்த பந்தங்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தை விரிவுப்படுத்துவீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள். மருத்துவ சிகிச்சைக்குச் செல்லும் சிலருடன் துணைக்குச் செல்லலாம்.

**கும்பம்:**
நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். சிறிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில் பெரிய அளவில் பலன் கிடைக்கலாம். வெளியில் சுற்றாமல் ஓய்வெடுப்பதில் நாட்டம் செல்லும். நண்பர்களுக்காக சிலரிடம் பரிந்து பேசலாம். சந்தோஷமான செய்தியைக் கேட்கலாம்.

**மீனம்:** கடன் பிரச்சினைகளால் கலக்கம் அடையலாம். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கலாம். திட்டமிட்ட காரியம் ஒன்று நடக்காமல் போனாலும் திட்டமிடாத காரியம் ஒன்று நடக்கும். உங்களின் நலனில் அக்கறை கொண்ட ஒருவரை அறிந்து கொள்வீர்கள். குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம்.

# சிறுகுற்றங்கள் குறித்த விசாரணைகள் பொலிஸ் நிலையங்களுக்கு ஒப்படைப்பு

## நீதிமன்றங்களில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்க

கொழும்பு,ஜன.4

சிறுகுற்றங்களுக்காகத் தொடரப்படும் வழக்குகள் பற்றிய விசாரணைகள் நீதி மன்றங்களில் தாமதமாவதைத் தடுப்பதற்காக அத்தகைய குற்றங்களை விசாரித்து முடிவு வழங்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களிடம் ஒப்படைக்க நீதி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதற்கமைய அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களாக நியமித்து அவர்கள் மூலம் இத்தகைய வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக நீதி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு நியமிக்கப்படவுள்ள உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களின் அலுவலகங்கள் மாவட்டத்துக்கு ஒன்று என்ற ரீதியில் அமைக்கப்படும்.

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதியுடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகளின் பின் ஜனாதிபதி இத்திட்டத்துக்கு அனுமதி வழங்கியுள்ளதாக அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

(ஏ-5)

## சேமிப்பின் விருத்தி....



ஆரம்பம்: தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் இடம்பெற்ற எழுச்சி நிகழ்வைத் தேசிய சேமிப்பு வங்கியின் வடக்குக் கிழக்கு வலய முகாமையாளர் யூ.எல்.ராபீக் மங்கள விளக்கேற்றி ஆரம்பிக்கிறார். அருகில் தேசிய சேமிப்பு வங்கி, கொழும்பு வடக்கு வலய முகாமையாளர் லால் கருணாதிலக, தலைமை தங்கிய பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் எம்.பரமானந்தம் உட்பட வங்கி உத்தியோகத்தர்கள் நிற்கின்றனர்.

## நேர்மையின் வெற்றி



வாழ்கையில் வெற்றி பெற என்ன வழி? என்ற விடயத்தை எடுத்துக் கொண்டால் இது ஒரு முக்கியமான கேள்விதான். இதற்கு எல்லோரும் சொல்கின்ற பொதுவான பதில் உழைத்தால் வெற்றி பெறலாம் என்பதாகும். அந்தவகையில் ''வாழ்க்கையில் வெற்றி பெற உழைப்பு மட்டும் இருந்தால் போதாது.... நேர்மையும் வேண்டும்'' எனக் கூறியுள்ளார் சிறந்த பொருளாதார நிபுணரான பாவ் ஹாப்மேன்.

இரண்டாம் உலகப்போர் முடிந்த சமயம் இந்த நிபுணர் அமெரிக்காவின் நிதி ஆலோசகராக இருந்தார். அப்போது தனது வாழ்வில் நடந்த நிகழ்வு ஒன்றைக் கூறியுள்ளார்.

அவர் தனது கல்வியைக் கற்று முடித்து விட்டு இளவயதிலே வேலை தேடிக் கொண்டிருந்தார். அந்தவேளையில் ஒரு கால்நடை வைத்தியரிடம் சென்று வேலை கேட்டார். இவர் வைத்தியரிடம் வேலை கேட்கச் சென்ற வேளையில் அந்த வைத்தியர் தன்னுடைய பழைய கார் ஒன்றை விற்பதற்காக வேறு ஒருவரிடம் விலை பேசிக்கொண்டிருந்தார்.

கார் வாங்க வந்தவர் அவரிடம் காரைப் பற்றிய விவரமெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார். அதற்குக் காரணம் கார் நல்ல நிலையில் இருக்கிறதா என்ற சந்தேகம்தான்.

எல்லா விவரமும் கேட்டுவிட்டுக் கடைசியாகக் கூறினார். ''டாக்டர் இந்தக் காரை நீங்களே என்னுடைய ஊருக்குச் செலுத்திக் கொண்டு வரவேண்டும். கார் எந்தப் பழுதும் இல்லாமல் என்னுடைய ஊருக்கு வந்து சேர்ந்தால் அங்கேயே நான் பணம் கொடுத்துக் காரை வாங்குகிறேன்'' எனக் கூறினார்.

''என்னுடைய கார் அவ்வளவு தூரம் பழுதில்லாமல் போய்ச் சேருமா?'' என்கிற சந்தேகம் டாக்டருக்கு ஏற்பட்டது.

அந்த டாக்டர் தன்னிடம் வேலை கேட்டு வந்திருந்த பாவ்ஹாப்மேனை அழைத்து ''இதோ பார்..... நீ இந்தக்காரை அவருடைய ஊருக்குக் [illegible] கொண்டு போய்ச் சேர்த்தாய் என்றால் உனக்கு நான் வேலை கொடுக்கிறேன். அதுமட்டுமல்லாமல் கார் விற்ற தொகையில் ஒரு தொகையும் தருகிறேன் சம்மதமா?'' என்று கேட்டார். ஹாப்மேன் சிந்தித்துப் பார்த்தார். அதன் பின்னர் சம்மதித்துவிட்டார். உடனே அவரும் கார் வாங்க வந்தவரும் புறப்பட்டனர். ஹாப்மேன் மிகவும் சிரமப்பட்டு வீதியில் எந்த இடத்திலும் நிறுத்தாமல் காரைச் செலுத்திக் கொண்டு போய் ஊரைச் சென்றடைந்தார்.

''அதன் பின்னர் கார் வாங்க வந்தவர் ஹாப்மேனை அழைத்து வீட்டுக்குள்ளே சென்று இப்ப சொல்லு.... இந்தக் காரின் நிலைமை எப்படி இருக்குது....? நல்ல நிலையில் உள்ளதா? ...... உன் மனசாட்சிப்படி பதில் சொல்லு '' என்று கேட்டார்.

உடனே அவர் ''கார் நல்ல நிலையில் இருக்கின்றது'' எனச் சொல்வதற்காகத்தான் வாயைத் திறந்தார். அதற்கிடையில் எதிரே உள்ள சுவரைப் பார்த்தார். அங்கே இயேசுநாதரின் படம் தொங்கவிடப்பட்டிருந்தது. அந்தப் படத்தில் ''நீ பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் இயேசு கவனித்துக் கொண்டிருக்கிறார்'' என எழுதப்பட்டிருந்தது.

உடனே ''கார் சரியான நிலையில் இல்லை'' என்ற உண்மையைச் சொல்லிவிட்டார். அவர் அப்படிச் சொன்னதும் கார் வாங்க வந்தவர் அவரை மிகவும் ஆச்சரியமாகப் பார்த்தார். அவருடைய நேர்மை இவரைச் சிந்திக்க வைத்தது.


''உன்னுடைய நேர்மையைப் பாராட்டுகிறேன்.... உனக்கு ஒருதொகைப்பணம் கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் இந்தக்காரை வாங்குகிறேன்'' எனக் கார் வாங்க வந்தவர் கூறினார். இப்போது ஹாப்மேன் திகைத்துப் போனார். திரும்பவும் அவர் ''நீ காரைச் செலுத்தி வரும் பொழுதே உன்னுடைய திறமையைப் பார்த்தேன். உனக்கு விருப்பம் இருந்தால் நீ என்னிடம் வேலைக்குச் சேரலாம்'' எனக் கூறினார்.

பாவ் ஹாப்மேன் அவரிடமே வேலைக்குச் சேர்ந்தார். படிப்படியாக முன்னேறினார். அமெரிக்க நிதி ஆலோசகர் என்னும் அளவுக்கு வந்த பின்பும் அந்தப் பழைய சம்பவத்தை அவர் மறக்கவில்லை. அடிக்கடி பலபேரிடம் சொல்லிக் கொண்டே இருப்பார்.

இதிலிருந்து என்ன விளங்குகிறது என்று பார்த்தால் உழைப்பு மட்டும் போதாது; நேர்மையும் வேண்டும் என்பதுதான். தற்போதெல்லாம் சில பேருடைய நேர்மை எமக்கு மிகவும் ஆச்சரியமாகக் கூட இருக்கின்றது!

கோ.சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருளின் கதவுகளைத் ① திறந்தவன்

**ந**டுநிசி சோமாலியாவை நெருங்கிக் கொண்டிருந்தது. பேய்கள் கூட நடமாடப் பயங்கொள்ளும் அளவுக்கு எங்கும் ஒரே இருள். ''ஊ ஊவ்'' என்ற ஒலியோடு சுழன்றடித்த காற்றில் அனல்கொட்டும் மணற் துகள்கள் மேலெழுந்து சூழலை இன்னும் பயங்கரமானதாக மாற்றிக்கொண்டிருந்தன. இவற்றையெல்லாம் கணக்கிலெடுக்காமல் இருளை ஊடறுத்தபடி நான்கு உருவங்கள் நகர்ந்து கொண்டி ருந்தன. நான்குபேரினதும் கண்களைத் தவிர முகத் தின் ஏனைய பாகங்கள் வெளியில் தெரியாதபடி கறுப்புத் துணியால் கட்டியிருந்தனர்.

அவர்களின் கண்களில் கொலைவெறி; கையில் இருந்த கத்திகள் இரத்தம் குடிக்கத் துடித்துக் கொண்டிருந்தன. அவர்கள் தேடி வந்த மாளிகையைக் கண்டதும் பூனையை விடவும் மிக மெதுவானதாகத் தமது காலடி ஓசையை குறைத்துக் கொண்டார்கள்.

மாளிகை உறங்கிக் கொண்டிருந்தது. தினசரி நள்ளிரவு நெருங்கும் சமயத்தில் மின்சாரம் தடைப்படுவது வழமை. அதனால் அங்கு சிறு வெளிச்சம் கூட இல்லை. இதைவிட வேறு நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது. வாசலில் ஒருவன் காவலுக்கு நிற்க மூவர் சந்தடியின்றி மதிலால் ஏறி உள்நுழைந்தனர். காவலாளிகளிடமிருந்து எச்சரிக்கை ஒலிக்குப் பதிலாக 'கொர்' என்ற குறட்டை ஒலியே வெளிப்பட் டதால் வந்தவர்களின் வேலை இன்னும் இலகுவானது. மாளிகையின் பின்பக்கக் கதவில் அவர்கள் கொண்டு வந்திருந்த மாற்றுச் சாவி பொருத்தப்பட்டதும் மறுப்பேதும் கூறாமல் தானாகவே திறந்தது கதவு. அதன் பின்னர் ஒரு நொடியைக் கூட வீணாக்க அவர்கள் விரும்பவில்லை. ஏற்கனவே அங்கு நடமாடிய பரிச்சயம் உள்ளவர்கள் போல தடதடவென மாடிப் படிகளில் ஏறினார்கள். மாடியிலிருந்த அறை கள் நான்கும் திறந்தபடியே இருந்தன. அவற்றில் மூன்று அறைகளில் - வெளியில் காவலுக்கு ஆள்கள் இருக்கிறார்கள் தானே என்ற நம்பிக்கையில்- மூன்று முக்கியமான புள்ளிகள் உறங்கிக் கொண்டிருந்தனர். அவர்களின் தூக்கத்துக்கு எந்தவித இடையூறும் செய்யாமல் முகமூடி நபர்களின் கத்திகள் மேலெழுந்தன.

''சதக்!!''

உறங்கிக் கொண்டிருந்தவர்களின் கழுத்தில் இறங்கிய கத்திகள் உருவப்பட்டதும் மாய மனிதர்கள் போல அந்த இடத்திலிருந்து கொலையாளிகள் மறைந்து போனார்கள்.

அப்படி நொடிப்பொழுதிலேயே அங்கிருந்து அகன்றவர்கள் நேரே சென்றடைந்தது அந்நாட்டின் பிரதான மதகுருவின் வீட்டுக்குத்தான். மதகுருவும் இவர்களின் வருகைக்காகப் பார்த்த விழி பூத்திருக்க அந்த நடுநிசியில் காத்திருந்தார். கத்திகளில் சூடான இரத்தம் வழிய வந்தவர்களைக் கண்டதும் அவர் முகத்தில் திருப்தியின் ரேகைகள் முளைவிட்டன. தயாராக வைத்திருந்த பணத்தை அவர்களிடம் ஒப்படைத்ததும் நன்றி சொல்லிவிட்டு மீண்டும் இருளில் கலந்தார்கள் முகமூடி மனிதர்கள்.

மதகுருவுக்கு இப்போதுதான் நிம்மதி. நீண்ட நாளாக அவருக்கு எதிராகக் காய்களை நகர்த்தி மக்களைத் திரட்டி குடைச்சல் கொடுத்தவர்களை ஒருவாறாக் எந்தவித தடயமுமின்றி கொன்றாகிவிட்டது.

''இனி என்னை எதிர்க்க யாரும் இல்லை'' சந்தோஷ மிகுதியில் இந்த வார்த்தைகளை அவர் சற்று உரக்கவே

ஒளண்யன்

உச்சரித்தார். ஆனாலும் அந்த சந்தோஷத்தை முகத்தில் அவர் காட்டிக்கொள்ள முடியாது. அப்படிச் செய்தால் அவர்தான் கொலையின் சூத்திரதாரி என்பதை எல்லோருமே உணர்ந்து கொண்டு விடுவார்கள். அது இந்தக் கொலையைச் செய்ததற் கான அர்த்தத்தையே கெடுத்துவிடும்.

கொல்லப்பட்டவர்கள் மதகுருவின் அரசியல் எதிரிகளாக இருந்தபோதும் அவர்கள் ஒருபோதுமே தனது எதிரிகள் அல்ல என்பது போலவே மதகுரு நடந்துகொண்டார். நீறு பூத்த நெருப்பு அவர். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசி வந்த மதகுரு இனியும் அதனைத் தொடர முடியாதென்று கருதினார். எதிரிகளின் மரணம் அவருக்கு அவசரமாகத் தேவைப்பட்டது. இந்தக் கொலையைச் செய்வதற்காக அவருக்கு கூலிக்கு கொலை செய்யும் நபர்கள் தேவைப்பட்டார்கள். தனது மிக நெருங்கிய நண்பனுக்கு நிலைமையை விளக்கி ஒரு மின்னஞ்சல் அனுப்பினார். அடுத்தநாளே யாரையும் கொலை செய்யக்கூடிய விவசாயக் கூலிகளை அந்த நண்பர் மதகுருவிடம் அனுப்பிவைத்தார். காதும் காதும் வைத்தது போலக் காரியம் முடிந்துவிட்டது. 'நன்றி மறப்பது நன்றன்று' என்ற தமிழ்ப் பழமொழியை சோமாலியாவின் மதகுருவும் அறிந்திருப்பார் போலும். தன்னுடைய நண்பனுக்குக் காரியம் வெற்றிகரமாக முடிந்ததையும் அதற்கு விவசாயக்கூலிகளை அனுப்பிவைத்ததற்கு நன்றி கூறியும் இன்னொரு மின்னஞ் சலை அனுப்பிவிட்டு மாளிகை யின் மேற்தளத்திற்கு வந்தார்.

**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

''என்னை எதிர்த்தவர்களுக்கு இதுதான் கதி. இந்தக் கொலைகளை நான்தான் செய்தேன் என எந்தக் கொம்பனும் கண்டுபிடிக்க முடியாது''

பலங்கொண்ட மட்டும் கத்திய அவரது குரல் சுற்று வட்டாரம் எங்கும் எதிரொலித்தது.

ஆனாலும் மதகுருவின் எண்ணம் மூன்றே மாதங்களுக்குள் பொய்த்துப் போகச் செய்து கொண்டு ஒரு கொம்பன் வந்தான். மதகுருவின் கொலைகளை ஆதாரத்தோடு ஒரே இரவில் உலகெங்கும் சொன்னான். சோமாலியாவில் தொலைந்து போன கொலைகளை அக்குவேறு ஆணிவேறாக்கினான். உலகமே ''தூ!'' வென்று காறியுமிழ்ந்தது மதகுருவின் முகத்தில். கொலைக்குற்றத்தை ஏற்றுக்கொண்ட மதகுரு தனது பதவியைத் தொலைக்க வேண்டியிருந்தது.

மதகுருவின் கொலைகளை ஆதாரங்களோடு சொன்னது வேறு யாருமல்ல, விக்கிலீக்ஸ் இணையத்தளம்தான்.

சொன்னவன் யூலியன் அசாஞ்சே என்ற இணைய மாயாவி.

யார் அந்த யூலியன் அசாஞ்சே?

*(திரைகள் இன்னும் திறக்கும்)*

# தை பிறந்தால் வழி பிறக்கும் பாடசாலைக் கதவுகள் திறக்குமா?

தைபிறந்தால் வழிபிறக்கும் என்பது தமிழ் மக்களின் கூற்று. தைபிறக்கப் போகின்றது. ஆனாலும் பணம் இல்லையென்ற காரணத்தினால் பல மாணவர்களுக்கு பாடசாலைக் கதவுகள்/வழிகள் திறக்கப்படவில்லை; படுவதில்லை என்கிற உண்மை உதைக்கிறது.

தை பிறப்பது பாடசாலை அதிபர்களுக்கும் பழைய மாணவர் சங்கங்களுக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கும் கொண்டாட்டமாக வேண்டுமானால் இருக்கலாம். மற்றொரு வகையில் குறிப்பிட்ட சில வங்கிகளுக்கும் கூட கொண்டாட்டம். ஆனால் ஏழைப் பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் அது நிச்சயமாகக் கொண்டாட்டமான காலப்பகுதியில்லை.

இன்றைய யாழ்ப்பாணக் கல்வி 'கடை' நிலைவரத்தில் தரம் ஒன்றில் பாடசாலை அனுமதிக்கு பத்தாயிரம் முதல் 25 ஆயிரம் வரை அரச பாடசாலைகளில் அறவிடப்படுகிறது. தனியார் பாடசாலைகளில் 50 ஆயிரம் முதல் 75 ஆயிரம் வரை நன்கொடைகள், அனுமதிக்கட்டணம் என அறவிடப்படுகிறது.

தற்போது அரச பாடசாலைகளின் அதிபர்கள் பல்வேறு நவீன முறைகளில் தம்மிடம் இருந்து பணம் அறவிடுகிறார்கள் என்பது பொற்றோர்களின் குற்றச்சாட்டு.

பாடசாலை அனுமதிக்கு நன்கொடைகள், அன்பளிப்புக்களை பாடசாலை அபிவிருத்திச் சங் கக் கணக்கு இலக்கத்தில் அல்லது பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கக் கணக்கு களில் வைப்பி லிட்டு அதனை உறுதிப்படுத்தும் வங்கித் துண்டை சமர்ப்பிக்கும்படி பெற்றோர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

அண்மையில் வடமாகாணக் கல்வித் திணைக்கள உயர் அதிகாரியினால் விடப்பட்ட ஓர் அறிக்கையில், பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் போது பணம் அறவிட்டால் அதிபர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவித்திருந்தார்.

இது பெற்றோர்களுக்கு முதலில் மன ஆறுதலைக் கொடுத்தது. ஆனால் பின்னர் பாடசாலைகளில் நடந்து முடிந்த விடயங்கள் அவர்களைத் திகைக்க வைத்தன.

இன்று யாழ்ப்பாண நகரப்பகுதிளில் உள்ள பல பாடசாலைகளில் சுமார் பதினைந்து கிலோமீற்றருக்கும் அப்பால் இருந்து வரும் மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் பாடசாலையின் அயலில் உள்ளவர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. காரணம் பணம். தூரத்தில் இருந்து வருகிறவர்கள் எவ்வளவு பணம் கொடுக்கிறார்களோ அவ்வளவு இலகுவாக அனுமதி கிடைக்கிறது. தரம் ஒன்றுக்கான அனுமதிதான் இந்தளவு அல்லோலகல்லோலம் என்றால் தரம் 6இற்கான அனுமதியும் இதற்குக் குறைந்த ஒன்று அல்ல.

தன்னை வருத்தி வயதுக்கு அதிகமான சுமையைச் சுமந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஒரு மாணவன் பிரபல பாடசாலை ஒன்றில் படிப்பதற்குத் தேவையான வெட்டுப் புள்ளிகளை நிறைவுசெய்த போதிலும் அப்பாடசாலையில் அவனுக்கு அனுமதி கிடைப்பதில்லை என்பது எவ்வளவு பெரிய வேதனை. பணம் இல்லை என்ற ஒரே காரணத்திற்காகத் தேசிய பாடசாலைகள் உட்பட முன்னணிப் பாட



சாலைகளில் மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை பிரபல பாடசாலைகளுக்கான வெட்டுப் புள்ளியை எட்டாத போதிலும் புலமைப்பரிசில் சித்தி அடைந்தவர் என்ற காரணத்தை மட்டும் காட்டி 50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை பெற்றுக்கொண்டு பிரபல பாடசாலைகள் சில மாணவருக்கு அனுமதி வழங்கி உள்ளன.

அரசு இலவசக் கல்வி என்று கூறினாலும் யாழ். குடாநாட்டில் உள்ள அரச பாடசாலைகளின் நிலை குறிப்பாக கிராமப் பாடசாலைகளின் நிலை கட்டணக் கல்வி முறைக்குச் சற்றும் குறைந்ததாகத் தெரியவில்லை. இந்த விடயத்தில் அதிகாரிகளின் நடவடிக்கைகளும் போதுமானதாக இல்லை என்று பெற்றோர் குறைப்படுகின்றனர்.

ஒவ்வொரு மாணவனது அனுமதிக்காக எவ்வளவு பணம் பெறப்பட்டுள்ளது என்பதைக் கண்டறியவும் தேவை ஏற்படின் நடவடிக்கை எடுக்கவும் வழிவகைகள் இருக்கும் போது அதிகாரிகள் சும்மா இருப்பது ஏன்? என்பதே பெற்றோரின் கேள்வி.

''இது இன்றுநேற்றல்ல கடந்த பல வருடங்களாகவே தொடர்கின்றது. ஆனால் இன்றைய 'விலையேற்றத்தை' ஈடுசெய்ய நடுத்தர மக்களாலேயே முடியவில்லை. பாவம் ஏழைகள் என்ன செய்வார்கள்'' - என்றார் பெற்றோர் ஒருவர்.

**வில்லவன்**

இத்தகைய நிலைமையினால் இன்று பல நூற்றுக்கணக்கான பிள்ளைகள் தமது எதிர்பார்ப்பை நிறைவு செய்ய முடியாமல் மனவிரக்தியுடன் கல்வி கற்று வருகின்றார்கள். காசுதான் கல்வியைத் தீர்மானிக்க முடியுமெனில் எதற்கு அரச பாடசாலைகளும் இலவசக் கல்வியும்? இந்தப் போக்கு இன்றைய அரசு திட்டமிடுவதைப்போன்று தனியார் கல்வி நடவடிக்கைகளுக்கும், கல்வி வியாபாரத்துக்குமே வழி கோலும். தமிழனின் சொத்து கல்வி எனில் அதில் கணிசமான பங்கு இலவசக் கல்விக்கும் உண்டு. அதை இழப்பதென்பது தமிழன் கல்வியை இழப்பதற்கு ஈடானதே!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரலாறு மீள எழுதப்படுமா?



இன்றைய நவீன மனிதனானவன் ஓமோசேபயன்ஸ் எனப்படும் ஆதிகால மனிதனின் வழித்தோன்றல் எனவும் இவன் 200,000 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றினான் எனவும் கூறப்படுகிறது.

ஆதி மனித பரம்பரை ஆபிரிக்காவிலேயே தோன்றியதாகவும் பின்னர் படிப்படியாக மத்திய கிழக்கினூடாக ஐரோப்பா மற்றும் ஆசியாவிற்கு இடம்பெயர்ந்ததாகவும் இதுவரை காலமும் விஞ்ஞானிகளால் தெரிவிக்கப்பட்டு வந்ததாகும்.

ஆனால் அண்மையில் மத்திய இஸ்ரேல் குகையொன்றில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதிகால மனிதனின் பற்கள் சுமார் 400,000 வருடங்கள் பழைமையானவை என நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவை நவீன மனிதனின் பற்களுடன் பெரிதும் ஒத்துப்போவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப் பற்களை எக்ஸ்ரே மற்றும் சி.டி ஸ்கான் ஆகியவற்றிற்கு உட்படுத்தியதாகவும் இவ்வாய்வில் ஈடுபட்டிருந்த டெல் அவிவ் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் நவீன மனிதனின் பரிணாம வளர்ச்சி தொடர்பான வரலாறானது மீள எழுதப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இதனை உறுதி செய்ய மேலும் பல ஆராய்ச்சிகள் அவசியம் என ஆய்வில் ஈடுபட்டுள்ள பேராசியர் அவிவ் கோபர் தெரிவித்துள்ளார்.

## அதிவேகம்

நாம் இப்போது பயன்படுத்தும் வேர்ஷன் கணினியின் வேகத்தை மிகப் பல மடங்காக அதிகரிக்கும் தொழில்நுட்பத்தை விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். இது தொடர்பாக இங்கிலாந்தில் உள்ள கிளாஸ்கோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினார்கள்.

அவர்கள் புதிய சிப் ஒன்றை உருவாக்கி உள்ளனர். இதன் மூலம் கணினியை அதிவேகமாகச் செயல்பட வைக்க முடியும். தனிப் பாவனைக் கணினியில் உள்ள புராசசர் மைக்ரோ சிப்பில் பொதுவாக 2 அல்லது 4 பாகங்கள் இருக்கும்.




சில சிப்களில் 16 பாகங்கள் வரை இருக்கும்.

இப்போது விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள மைக்ரோ சிப்களில் 1,000 பாகங்களை உருவாக்க முடியும். இதனால் இந்த கணினி தற்போதைய கம்பியூட்டரைவிட 20 மடங்கு வேகமாக வேலை செய்யும். இது தனிப் பாவனைக் கணனியாக இருந்தாலும் அதிநவீன கணினியை விட சக்தி வாய்ந்ததாக இருக்கும்.

இந்தக் கணினி இன்னும் சில வருடங்களில் பயன்பாட்டுக்கு வந்து விடும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

## மீண்டது புலி



எம்மில் பலரால் இதுவரை அறியப்படாததும் அழிந்து போயிருக்கலாம் என விஞ்ஞானிகளால் கருதப்பட்டு வந்ததுமான ''சிஹரன் சீட்'' எனப்படும் பூனைக்குடும்பத்தை சேர்ந்த புலி வகையொன்றின் புகைப்படத்தினை ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் வெளியிட்டுள்ளனர்.

இப்புகைப் படங்களாவன ஆபிரிக்க நாடான நைஜீரியாவிலேயே பிடிக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சியாளர்களால் பொருத்தப்பட்ட கமராவிற்கே இதன் புகைப்படம் அகப்பட்டுள்ளது.

உலகில் இவ்வகைப் புலிகள் 250 வரையிலேயே காணப்படுவதாகவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இதனைக் கண்டுபிடிப்பதற்காக ஆராய்ச்சியாளர்கள் கடந்த 2000 ஆம் ஆண்டிலிருந்து முயன்று வந்தனர்.


இந்தப் புகைப்படங்கள் அவர்களின் தேடல்களுக்குத் தற்போது புத்துயிர் அளித்துள்ளன.

## வராது கிரகணம்

சூரியனிடம் இருந்து நிலாவுக்குச் செல்லும் ஒளிக்கதிர்களைப் பூமி மறைக்கும் நிகழ்வான சந்திரகிரகணம் 372 ஆண்டுகளுக்கு பின்னர் அண்மையில் அதிகாலை நடந்தது.

இதுபோன்ற சந்திர கிரகணம் 372 ஆண்டுகளுக்கு முன்பு குளிர்காலத்தில் தோன்றியது.

தற்போதும் கடுமையான குளிர்



காலத்தில் இந்தக் கிரகணம் நடந்தது. 2094ஆம் ஆண்டு வரை இதுபோன்ற சந்திர கிரகணம் நிகழாது. இந்த சந்திர கிரகணத்தின் போது சூரியனின் ஒளிக்கதிர்கள் நிலாவின் மீது விழாது. பூமி மறைத்து கொள்ளும்.

கிரீன் விச் நேரப்படி அண்மையில் அதிகாலை 2.40 மணியில் இருந்து, 3.53 மணி வரை முழு சந்திர கிரகணம் தெரிந்தது.

சுமார் 72 நிமிடங்கள் இது நீடித்தது. பூமியின் நிழலில் தாமிரம் போன்ற நல்ல சிவப்பு நிறத்தில் நிலா காணப்பட்டது. அன்று வானம் தெளிவாக இருந்ததால் வடஅமெரிக்கர்கள் இந்த சந்திர கிரகணத்தை நன்றாகப் பார்க்க முடிந்தது. இந்த சந்திர கிரகணம் இலங்கையில் தெரியவில்லை.

## ஞாபக மறதியா?



ஞாபகமறதி என்பது இன்று பலருக்கும் உள்ள பிரச்சினை. அவர்களுக்கு ஓர் ஆறுதல்! ஞாபக சக்தியைச் செயற்கையாகக் கூட்டும் உத்தியை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன் மூலம் தலைக்குள் நேரடியாக ஊடுருவாமலே ஞாபகசக்தியைத் தூண்டலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு விஞ்ஞானிகள் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தின் பெயர் ''டிரான்ஸ்கிரேனியல் டைரக்ட் கரன்ட் ஸ்டிமுலேஷன். அதாவது எலக்ட்ரோடுகளை பயன்படுத்தி மயிர்க்கால்களில் மிகக் குறைந்த அளவு மின்சாரத்தைச் செலுத்துவது. இதன் மூலம் மூளையின் ஒரு பகுதியின் செயற்பாட்டை தற்காலிகமாகக் கூட்டவோ, குறைக்கவோ முடியும்.


இது தொடர்பான ஞாபகசக்திப் பரிசோதனையில் மேற்கண்ட மின்தூண்டலுக்கு உள்ளானவர்கள் மற்றவர்களைவிட இரு மடங்கு புள்ளிகளைப் பெற்றனர்.

பார்வையால் காண்பவற்றை அவர்கள் நினைவில் வைத்துக்கொள்வதில் 110 சதவீத முன்னேற்றம் காணப்பட்டது.




## தங்கமே தங்கம்...

**தங்கம் சேகரிக்கும் பாசிகள்:** பல்வேறு கரைசல்களில் இருந்து தங்கத்தைப் பிரித்தெடுப்பதற்கான ஒரு புதிய முறையை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். சிலவகை பாசிகள் நீர்க்கரைசல்களில் இருந்து தங்க அணுக்களை உட்கவருகின்றன என்று அவர்கள் கண்டுபடித்திருக்கின்றனர். அந்த ஆராய்ச்சி இன்னும் ஆரம்ப கட்டத்தில்தான் இருக்கிறது. இருந்தாலும் இயற்கை நீர், தொழிற்சாலைக் கழிவுநீர், கைவிடப்பட்ட சுரங்கக் குப்பைகள் ஆகியவற்றில் இருந்து தங்கத்தைப் பிரித்தெடுக்க பாசிகளைப் பயன்படுத்தலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள்.



அந்த ஆய்வாளர்கள் நியெக்சிகோ மாநிலப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள். முன்னொரு காலத்தில் அந்த மாநிலத்தில் பெருமளவு தங்கம் இருப்பதாகத் தெரியவந்தபோது தங்க வேட்டைக்காக மக்கள் மந்தை மந்தையாகப் படையெடுத்தனர். அவர்களால் தங்கம் எடுக்கப்பட்டு பின் கைவிடப்பட்ட பல சுரங்கங்கள் [illegible] கரைந்திருக்கும் தங்கத்தை பாசியைப் பயன்படுத்திப் பிரித் [illegible] விஞ்ஞானிகள் நம்புகின்றனர்

## வீட்டிலே நூல்நிலையம்

கூகுள் நிறுவனம் வெகுநாள்களாகச் சொல்லி வந்த தன் மின் நூல்கள் விற்பனை இணைய தளத்தினைத் திறந்துவிட்டது. இந்த நூல்களில் பலவற்றை இணைய வெளியில் வைத்துப் படிக்கலாம். இதன் பி.டி.எப். பதிப்பு சில நூல்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் அவற்றை இலவசமாகத் தரவிறக்கம் செய்து படிக்கலாம்; நண்பர்களுக்கும் அனுப்பலாம்.



கம்ப்யூட்டர், ஆண்ட்ராய்ட் சிஸ்டம், ஐ-போன், ஐ-பாட் என எந்த டிஜிட்டல் ரீடிங் வசதி கொண்ட சாதனத்திலும் இதில் உள்ள நூல்களைப் படிக்கலாம். இதனால், ஒரு குறிப்பட்ட நூலில் 34 பக்கங்களை ஐ-பாட் மூலம் படித்துவிட்டுப் பின் இன்னொரு நாளில் உங்கள் லேப் டாப் கம்ப்யூட்டரில் 35 ஆம் பக்கத்திலிருந்து தொடர்ந்து படிக்கலாம். அல்லது கூகுள் தரும் வெப் ரீடர் அப்ளிகேஷன் மூலமாகவும் நூல்களைப் படிக்கலாம்.

நூல்களின் விலை 5.49 டாலர் முதல் 19.99 டாலர் வரை உள்ளது. நூல்களை அவற்றின் ஆசிரியர்கள் வாரியாகவும், தலைப்பு வாரியாகவும், சில முக்கிய சொற்கள் வாரியாகவும் தேடிக் கண்டறிந்து பயன்படுத்தலாம். நூல்கள் பிரசுரிக்கப்பட்ட ஆண்டு வாரியாகவும் பார்க்கலாம். இலவசமாய்க் கிடைக்கக் கூடிய நூல்களை மட்டும் தேடிப் பார்க்கலாம். கூகுள் நிறுவனத்தின் தேடுதல்தளம் இதிலும் தரப்படுத்தும், நாம் சொற்களை டைப் செய்திடுகையிலேயே, நீங்கள் தேடும் நூல்கள் இதுவோ என்று அடுத்தடுத்துக் காட்டப்படுகின்றன.

நூல் பிரசுரித்தவர்கள் கூகுள் நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு தங்கள் நூல்களை இதில் பட்டியலிட்டு விற்பனையை மேற்கொள்ளலாம். கூகுள் அனைத்து நூல் ஆசிரியர்களையும், பிரசுரகர்த்தர்களையும் இந்த தளத்தைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை கணபதி படிப்பகம்

வல்வை மண்ணில் உள்ள சனசமூக நிலையங்களில் கணபதி படிப்பகத்துக்குக் காலத்தால் அழியாத புகழ் உண்டு. வல்வையில் வேம்படி வாசிக சாலை என்ற பெயருடன் தொடங்கப்பட்டு ஒரு சனசமூக நிலையம் நடத்தப்பட்டு வந்தது. இந்தச் சனசமூக நிலையத்தைக் கொத்தியால் யூனியன் தொழிலாளர்கள் சிறப்பாக நடத்திவந்தனர். இதனை இப்பிரதேச மக்கள் வாசிப்பு ஆர்வ மேம்பாட்டால் பயன்படுத்தத் தொடங்க பெரும் இடநெருக்கடி வாசிக சாலையில் ஏற்பட்டது. இதனால் நிர்வாகம் கட்டடம். ஒன்றை நிறுவி அங்கே இந்த வாசிக சாலையை நடத்துவது என்று தீர்மானித்தது.

இதற்கான பொறுப்பு வாசிகசாலையின் செயலாளராக இருந்த இலட்சுமி காந்தனிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்றைய கலைஞர்கள் கூடி எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் இந்தக் கட்டடத்துக்கான நிதியை நாடகம் நடத்திச் சேகரிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

அப்போது தோற்றம் பெற்ற கலைவாணி நாடக மன்றத்தின் நாடகமான 'தீர்ப்புக்கு முன்' என்ற சீர்திருத்த நாடகம் மூலம் நிதி சேகரிக்கப்பட்டது. நாடகச் செலவு கழித்து மிகுதிப் பணம் முழுவதும் இலட்சுமிகாந்தனிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் பின்னர் குறித்த வாசிக சாலைக்கு என்ன பெயர் சூட்டலாம் என ஆராய்ந்து 'கணபதி படிப்பகம்' என்ற பெயர் சூட்டப்பட்டது.

இந்த வாசிக சாலை 14.09.1967 ஆம் ஆண்டு அப்போதைய பட்டின சபைத் தலைவர் வி.இரத்தினவடிவேலால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த வாசிக சாலை தனது பிரதேச மழலைகளின் கல்வியை வளர்க்கும் நோக்குடன் பாலர் பாடசாலை ஒன்றை தனது ஐந்தாவது ஆண்டு முடிவில் ஆரம்பித்து வைத்தது.

இந்தப் பாடசாலை மழலைச் செல்வங்களின் கல்வியில் சிறந்த அக்கறை எடுத்துச் செயற்பட்டு வருவது பாராட்டப்படக் கூடியது.


இவ்வாறு பல எண்ணுக் கணக்கற்ற மக்கள் பணியில் குறித்த வாசிக சாலை செயற்பட்டு வருகின்றது. மக்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் நோக்குடன் பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

சமூக சேவைகள் என்ற ரீதியில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வல்வை மகளிர் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவிகளுக்கு 25 சைக்கிள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

எனவே, ஊர் மக்களுக்கு மட்டுமல்ல ஏனைய பிரதேச மக்களுக்கும் பெரிய உதவிகளைச் செய்துவரும் இந்தப் படிப்பகம் மேலும் வளர்ந்து பல உதவிகளையும் சேவைகளையும் தொடர்ந்து ஆற்றவேண்டும் என்பதே அனைவரதும் பிரார்த்தனையாகும்.




# வடமராட்சியில் பழைமையான மடம்



வடமராட்சி உடுப்பிட்டி வீதியில் இரும்பு மதவடியில் இருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் தோட்டங்களுக்கு மத்தியில் சுமார் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மடம் ஒன்று அமைந்துள்ளது.

வீதியால் செல்பவர்கள் மழை, வெயில் காலங்களில் இளைப்பாறுவதற்கு ஏதுவாகவும் தோட்டத்தில் வேலை செய்பவர்கள் களைப்பு நேரத்தில் இளைப்பாறுவதற்கும் குறிப்பிட்ட மடம் பேருதவி செய்து வருகின்றது.

தொகுப்பு - ஹரிஸ்



சுமார் 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட எமது மூதாதையர்கள் மடத்தின் தேவையையும் குறிப்பிட்ட இடத்தில் மடம் அமைய வேண்டியதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டு இயற்கை எழில் கொஞ்சும் இரும்பு மதவடிக்கு அண்மையில் உள்ள தோட்டக் காணியில் குறிப்பிட்ட மடத்தை நிர்மாணித்து இருந்தார்கள்.

இந்த மடம் கடந்த காலங்களில் இந்தப் பகுதியால் சென்று வரும் பலர் இளைப்பாற ஏதுவாக அமைந்துள் ளது. இதனால் பலர் பயன் பெற்றுள்ளார்கள்.


ஆனாலும், 'நன்மைக்குக் காலம் இல்லை' என்பார்கள். குறிப்பிட்ட மடத்தில் பிற்பகல் நேரங்களில் மது அருந்துபவர் களாலும் ஒரு சில விஷமிகளாலும் குறிப்பிட்ட மடத்தின் ஓடுகள் உடைக்கப்படுவதாகப் பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறிப்பிட்ட மடத்தின் ஓடுகள் உடைக்கப்பட்டு உள்ளதாகவும் மடத்தின் உட்பகுதிக்குள் வெற்று மதுப்போத்தல்கள் உடைக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் பொதுமக்கள் மேலும் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால், இப்பகுதியில் உள்ள தோட்டத்தில் வேலை செய்பவர்களும் இந்தப் பகுதியால் பயணங்களை மேற்கொள்ளும் பயணிகளும் மழை காலங்களில் ஒதுங்க இடமில்லாமல் தவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இந்த விடயத்தில் உரிய தரப்புக்கள் கவனமெடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

# வீதிகளில் மின்விளக்கு இல்லை; இரவில் பயணிப்போர் அச்சத்தில்



வடமராட்சியில் முக்கிய பல வீதிகள் தொடர்ந்தும் மின்விளக்குகள் இன்மையால் ஒளியேற்றப்படாமல் உள்ளன. இது குறித்து ஏற்கனவே பொதுமக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் வதிரி- உடுப்பிட்டி வீதி, கொற்றாவத்தை வீதிகள், நெல்லியடி- வதிரிச்சந்தி போன்ற சில முக்கிய வீதிகளில் மின் விளக்குகள் பொருத்தப்படாமல் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே பொருத்தப்பட்ட சில மின்விளக்குகள் பழுதடைந்தும் உள்ளன. எனவே இருள் படர்ந்த இந்த வீதியால் இரவு நேரங்களில் பயணிக்கும் பயணிகள் விபத்துகளில் சிக்கும் சந்தர்ப்பங்கள் எதிர்வரும் கால[illegible] விபத்து ஏற்பட்ட பிறகு இதுதான் காரணம் என நினை[illegible]பதில் எந்த அர்த்தமும் இல்லை.

அத்துடன் இருள் மண்டிய வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் வழிப்பறிச் சம்பவங்களிலும் சிக்கும் நிலையுள்ளது.

எனவே இந்த விடயம் தொடர்பாக உரியவர்கள் [illegible] நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு இந்தியா ரூ.235 மில்லியன் நன்கொடை

வடக்கில் அச்சுவேலியில் ரூபா 280 மில்லியன் ஆரம்பச் செலவில் நிறுவப் படவுள்ள கைத்தொழில் பேட்டைக்கு இந்திய அரசு உதவித் தொகையாக ரூபா 235 மில்லியன் நன்கொடை வழங்குகிறது. மிகுதி ரூபா 45 மில்லி யனை இலங்கை அரசு செலவு செய்யும்.

கைத்தொழிற் பேட்டையின் முதல் கட்டம் 2011 இறுதிப் பகுதியில் பூர்த் தியடையும்.

65 ஏக்கர் நிலப்பரப்பில் கைத்தொழிற் பேட்டை அமைகிறது.இதில் 25 ஏக்கரில் முதல்கட்ட உற்பத்திகள் ஆரம்பமா கும். இந்த நிலப்பரப்பில் உற்பத்திக ளைத் தொடங்க நான்கு கம்பனிகள் முதலீட்டுச் சபையின் ஆதரவுடன் முன்வந்துள்ளன.

MAS Holdings, Oris Apparels Lanka, Timex, Shore to Shore (Pvt) Ltd ஆகி யவையே அந்த நான்கு கம்பனிகள் ஆகும்.

இந்த 25 ஏக்கர் போக மிகுதியுள்ள 40 ஏக்கர் நிலம் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் முயற்சிகளுக்காக வழங் கப்படும். 2012 இல் கைத்தொழிற் பேட்டை முழுமையாக இயங்கத் தொடங்கிவிடும்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற் றும் சிறுதொழில் முயற்சிகள் அமைச் சின் செயலாளர் பி.சிவஞான மூர்த்தி இந்தத் தகவல்களைத் தெரிவித்துள் ளார்.

கைத்தொழிற் பேட்டையில் 2000 முதல் 3000 பேர் வேலைவாய்ப்புப் பெறுவார்கள். கைத்தொழிற் பேட்டை யில் தொழில்களைத் தொடங்கப் பலர் ஆவலாக உள்ளார்கள், நில ஒதுக்கீடு கேட்கிறார்கள்.

போருக்கு முன்னர் அச்சுவேலிக் கைத்தொழிற் பேட்டை செயற்பட்டு வந்தபோது 30 தொழில்கள் அங்கே நடைபெற்று வந்தன.

முன்னர் தொழில் நடத்தியவர்கள் மீண்டும் அங்கே தொழில்களை மீளத் தொடங்க விரும்புகிறார்கள் என்ற தகவலையும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதோடு நாட்டின் பொரு ளாதார வளர்ச்சிக்கும் பெரும் பங்க ளிப்புச் செய்யும். (சி)

## பெரு மழையால் 3 லட்சத்து 84 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர்

கொழும்பு, ஜன.4

நாடெங்கும் பெய்துவரும் கடும் மழையால் இதுவரை 94,008 குடும்பங் களைச் சேர்ந்த 3,84,000 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர். இருவர் மரணமாகியுள் ளனர் என அனர்த்த நிவாரண முகாமைத் துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கூடுதலான பாதிப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது. இங்கு இருவர் மரணமாகியுள்ளதுடன் 87,832 குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளனர்.

நுவரெலியா, கண்டி, திருகோணமலை, மாத்தறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் பெருந்தொகையான மக்கள் பாதிக்கப் பட்டுள்ளனர். 1437 வீடுகள் முற்றாகவும் 35,082 வீடுகள் பகுதியாகவும் சேதமா கியுள்ளன என அனர்த்த நிவாரண முகா மைத்துவ நிலையம் சுட்டிக்காட்டியுள் ளது. (ம-5)


விழிநீர் சொரிந்து நிற்கும்
ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் சின்னையா திருநாவுக்கரசு
(சின்னராசா)



மலர்வு
09.10.1948

உதிர்வு
14.01.2010

திதி: 04.01.2011

ஆண்டு ஒன்று ஆனாலும் மறையாமல்
எங்களுடன் உறவாடிய வண்ணம் உள்ளன
உங்கள் நினைவுகள். பார்க்கும் இடம் எல்லாம்
நீங்கள் நிற்பதுபோல் எம்முடன் வாழ்ந்த காலங்கள்
எம்முன்னே நித்தமும் அலைமோதிய வண்ணம் உள்ளன.
அப்பா! இறுதியில் கண்ணீரில் எம்மை
நனைய விட்டுச் சென்றீர்கள்
உங்களுடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் கிழக்கு,
ஊரெழு.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## நெல்லியடி ம.ம.வி. 10 இல் ஆரம்பம்

வடமராட்சி, ஜன.4

நெல்லியடி மத் திய மகா வித்தி யாலய வகுப்புகள் ஆண்டிறுதி விடு முறைக்குப் பின் னர் எதிர்வரும் 10 திகதி முதல் ஆரம் பமாகும் என அதி பர் எஸ். சேதுராஜா தெரிவித்துள்ளார்.

இவ் வித்தியா லயத்தில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை விடைத் தாள் மதிப்பீட்டு பணி நடைபெற்று வருவது குறிப்பி டத்தக்கது. (ஒ-236)

# யாழ். பல்கலைக்கழகத்துக்கு கொமர்ஷல் வங்கி உதவி

யாழ். பல்கலைக்கழகத்துக்கு ஐந்து கணினி உபகரணங்களை கொமர்ஷல் வங்கி வழங்கியிருக்கிறது. மாணவர்களின் தொழில்நுட்பத் திறமையை வளர்ப் பதற்கே இந்த உதவி.

குறிப்பாக Geographical Information System, Remote Sensing, Geology, Hydrology துறைகளைச் சார்ந்த மாணவர்கள் இவற்றால் பெரும்பயன் அடைவர்.




கொமர்ஷல் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ரவி டயஸ் கணினி உபகரணங்களை யாழ். பல்கலைக்கழக பூகோளவியல் பகுதி யின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.குகபாலனிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். தற்போதைய தலைவர் பேராசிரியர் எஸ்.ரி.பி. இராஜேஸ் வரன் அருகில் காணப்படுகிறார். கொமர்ஷல் வங்கியின் பிராந்திய முகாமை யாளர், மற்றக் கிளைகளின் முகாமையாளர்கள், வங்கி ஊழியர்கள், பல்கலைக் கழக அதிகாரிகள் ஆகியோர் மத்தியில் கணினிகள் கையளிக்கப்படுகின்றன.(சி)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
வனமோகன் கோபிராஜ்

மலர்வு: 26.07.2002
உதிர்வு: 04.01.2010

விழியோரம் நீர் கசிய
விரைந்த ஓராண்டில் - உம்
நினைவாக இவ்வஞ்சலி

9 /7, கோபால் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (108376)

குடும்பத்தினர்.


## பொலிஸாரின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் திட்டம்

கொழும்பு, ஜன.4

மட்டக்களப்பு கரடியனாறு, ஹெலி யகொட, கலவான சம்பவங்களில் உயி ரிழந்த பொலிசாரின் பிள்ளைகளின் நலன்கருதி புலமைப்பரிசில் திட்ட மொன்றை அறிமுகப்படுத்துமாறு பாது காப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ தேசிய காப்புறுதி நிதியத்துக்கு அறிவித்தல் வழங்கியுள்ளார்.

இந்தச் சம்பவங்களில் உயிரிழந்த பொலிஸாரின் குடும்பங்களுக்கு ஏற்க னவே 36 லட்சம் ரூபா நஷ்ட ஈடாக வழங்கப்பட்டுள்ளதாகத் தேசிய காப்புறுதி நிதியத்தின் தலைவர் சேகை அபேகுண சேகர தெரிவித்தார். அத்துடன் உயிரிழந்த பொலிஸாரின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காகப் புதிய புலமைப் பரிசில் திட்டமொன்று நடைமுறைப்ப டுத்தப்படும் எனவும் 2011 ஆம் ஆண்டில் இது அமுலுக்கு வருமெனவும் அவர் கூறி னார்.அரச பணியி லுள்ளவர்களைப் போலவே அவர்க ளது பிள்ளைகளுக் கும் தேசிய காப்பு றுதி நிதியத்தின் கீழ்ப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள தாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-5)


ஓய்வுநிலை அதிபர்
உயர்திரு. அ. பஞ்சலிங்கம்
அவர்களின்
பவளவிழா



காலம்: 08.01.2011 சனிக்கிழமை பிற்பகல் 3மணி
இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி
எமது இயக்குநரின் விழா சிறப்புற அமைய உளமார வாழ்த்துகின்றோம்.

KALAIMAGALINTERNATIONOALCOLLEGE,
KOKUVIL.



## பகிரங்க அறிவித்தல்
### தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்
### முல்லைத்தீவு மாவட்டம்

கடந்த 15.12.2010ஆம் நாள் முல்லை மாவட்ட அரச அதிபருக்கும் தனியார் பேருந்து உரிமை யாளர் சங்க இயக்குநரவைக்குமான ஒன்று கூடலில் அதிகளவான பேருந்துகள் பதிவுசெய் யப்பட்டு வழியனுமதி கிடைக்காமல் உள்ளது எனவும், இதனால் 01.01.2011ஆம் நாள் முதல் புதிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதும், வழியனுமதி வழங்குவதும் நிறுத்தப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்.


## அலங்காரத் திருவிழா

நீர்வேலிகாமாட்சி அம்பாள் ஆலய வரு டாந்த அலங்காரத் திருவிழா எதிர் வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங் கள் நடைபெற்று ..... தினத் தன்று நிறைவு பெறும். (201-72)


நிப்லோ பிளவு கலப்பை விற்பனைக்கு

நிப்லோ பிளவு கலப்பை (ஒறிஜினல் யப்பான்), நிப்லோ (கொழும்பான்) ஆகியவை விற்பனைக்குண்டு.

விற்பனை முகவர்:
திரு.மதி,
சிவன் வீதி, ஆவரங்கால்,
புத்தூர். 0770564672 (108394)

தொடர்பு:
0777243395,
0717035363


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலைச் செய்கைக்கு அரசிடம் சலுகைக்கடன் பெற யோசனை

நுவரெலியா, ஜன.4

தேயிலை மீள்நடுகையை ஊக்குவிக்கும் முகமாக அரசிடம் குறைந்த வட்டிக்கு சலுகைக் கடன்களைப் பெறுவது குறித்து ஆராய்ந்து வருவதாக தேயிலைச் சபை அறிவித்துள்ளது.

தேயிலை உற்பத்தி அண்மைக்காலமாக குறித்த இலக்கிலும் பார்க்க பின்தங்கியுள்ளதாகவும் சபை அறிவித்துள்ளது.

தற்பொழுது 0.5 சதவீதமாக உள்ள தேயிலை மீள்நடுகை வீதத்தினை ஆண்டுக்கு மூன்று சதவீதமாக அதிகரிப்பதற்கு பெருந்தோட்ட அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

பிராந்திய பெருந்தோட்ட ஒத்துழைப்புத் தோட்டங்கள் மற்றும் மொத்த அறுவடையில் பெரும்பாலான பங்கை உற்பத்தி செய்யும் சிறிய விவசாயிகளுக்காகவே வட்டிக்குறைப்புடனான கடன்களை வழங்குவது குறித்து அமைச்சு கலந்தாலோசித்து வருகின்றது - எனத் தேயிலைச் சபையின் மூன்றாவது காலாண்டுக்குரிய ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வட்டிக்குறைப்புகளுடனான கடனைப் பெற்றுக் கொள்வதற்குரிய பேச்சுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வட்டிக் குறைப்புடனான கடன் குறித்து அமைச்சே தீர்மானிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதனால் தேயிலை மீள்நடுகைக்கோ மீள்விதைப்புக்கோ சிறு விவசாயிகள் அரசின் மூலம் நிதி உதவியைப் பெறும் சாத்தியம் உள்ளதெனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும் தேயிலைத் தோட்டங்களில் உள்ள புதர்களை அகற்றும் வீதத்தினை அதிகரிப்பதற்குரிய திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டதாக தேயிலைச் சபை கூறியுள்ளது.

சிறு விவசாயிகளுக்கான புதிய கன்றுகள் அரசின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் தேயிலை அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்படும்.

இந்தியாவில் ஒரு ஹெக்ரேயரில் 2,000 கிலோ தேயிலையும், கென்யாவில் 2,600 கிலோ தேயிலையும் உற்பத்தி செய்யப்படும் நிலையில் இலங்கையில் 1,600 கிலோவே உற்பத்தியாகின்றது. 1 கிலோ தேயிலையின் உற்பத்திச் செலவு கென்யாவில் 1.20 அமெரிக்க டொலராகவும், இந்தியாவில் 200 அமெரிக்க டொலராகவும் உள்ள நிலையில் இங்கு 2.80 அமெரிக்க டொலராக உள்ளது.

(ளி)

## பன்வில பிரதேச தேயிலைத் தோட்டங்களில் பெண் தொழிலாளர்களுக்குப் பற்றாக்குறை

பன்வில, ஜன.4

பன்வில பிரதேசத்திற்கு உட்பட்ட தேயிலைத் தோட்டப் பகுதிகளில் பெண் தொழிலாளர்கள் பற்றாக்குறையாக உள்ள தால் தேயிலைத்துறையை கொண்டு நடத்த முடியவில்லை எனத் தோட்ட முகாமையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போதைய யுவதிகள் தோட்டத் தொழிலில் ஆர்வம் காட்டாமை, குறைந்த சம்பளம் வழங்கப்படுகின்றமை போன்ற காரணங்களால் பெண் தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக நகர்ப்புறங்களை அண்மித்த தோட்டப் பகுதி களிலேயே இவ்வாறு பெண் தொழிலாளர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இங்குள்ள யுவதிகள் நகர்ப்புறங்களுக்கு கூடுதலான சம்பளத்திற்கு வேறு வேலைகளுக்குச் செல்கின்றனர்.

தோட்டப் பகுதிகளில் தொழில் புரியும் பெண் தொழிலாளர்களுக்கு இன்றைய வாழ்க்கைச் செலவுக்கேற்ப கூடுதலான சம்பளத்தை வழங்காவிட்டால் மேலும் பற்றாக்குறை ஏற்படுவதுடன், பெருந்தோட்டத்துறையை இலாபமீட்டும் துறையாகக் கொண்டு செல்வதில் சிரமமேற்படும் என்றும் தோட்ட முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# கஞ்சா வைத்திருந்த யாத்திரிகர் சிவனொளிபாதமலையில் கைது

2,550 மில்லி கிராம் கஞ்சாவை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிவனொளிபாதமலையில் வைத்து ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட யாத்திரிகர் ஒருவருக்கு ஹற்றன் நீதிவான் சந்துன் விதான ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.




பதுளையிலிருந்து ரயில் மூலம் ஹற்றன் வந்திருந்த லக்மால் திசாநாயக்க என்பவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

ஹற்றன் ரயில் நிலையத்தில் யாத்திரிகர்களின் பயணப் பொதிகள் பொலிஸாரால் சோதனையிடப்பட்டபோதே இந்தக் கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

(ளி)

## நுவரெலியாவில் தீ விபத்து 23 குடும்பங்கள் பாதிப்பு

நுவரெலியா, ஜன.4

நுவரெலியா, கந்தப்பளை பண்டாரநாயக்க மாவத்தைப் பகுதியில் அமைந்துள்ள லயன் வீடுகள் சிலவற்றில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஏற்பட்ட தீ விபத்தில் 22 வீடுகள் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளமை.

மின் ஒழுக்கின் காரணமாகவே விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரும் தீயணைப்புத்துறையினரும் இணைந்து தீயை அணைத்தனர். இடம்பெயர்ந்த குடும்பங்கள் அயலிலுள்ள வீடுகளில் தங்கியுள்ளனர்.

இந்தத் தீ விபத்தில் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் 23 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 108 பேர் தமது உடைமைகளை இழந்து நிர்க்கதிநிலைக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன என நுவரெலியா மாவட்டச் செயலாளர் டி.பி.ஜி . குமாரசிறி அறிவித்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற மலையக மக்கள் முன்னணியின் அரசியற் பிரிவுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வி. இராதாகிருஷ்ணன் சேதவிவரங்களை ஆராய்ந்து அவை தொடர்பாக் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

தீ விபத்து இடம்பெற்ற இடத்திற்கு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி. இராஜதுரை வருகை செய்து சேத விவரங்கள் குறித்து தகவல்களைத் திரட்டிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ளி)

# மட்டு. மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு

### அனர்த்த முகாமைத்துவ பிரதியமைச்சர் தகவல்

மட்டக்களப்பு, ஜன.4

மட்டக்களப்பு மாவட்டத்தில் மழை, வெள்ளப்பெருக்கால் சேதமடைந்த வீடுகளை கட்டிக் கொடுப்பதற்கும், விவசாயச் செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குநஷ்டஈடுவழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத் துவ சேவைகள் பிரதியமைச்சர் துலிப் விஜயசேகர தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கியுள்ள மக்களை கடந்த சனிக்கிழமை நேரில்சென்று பார்வையிட்ட பின்னரே அவர் இதனைக் கூறினார்.

படகு மூலம் வவுணதீவுக்கு பயணம் மேற்கொண்ட அவர் கரையாக்கன்தீவுப் பாடசாலையில் தங்கியுள்ள இடம்பெயர் மக்களைப் பார்வையிட்டார். அத்துடன் அங்குள்ள சிறுவர்களுக்கு பால்மா, நுளம்புவலை ஆகிய உதவிப் பொருள்களையும் வழங் கினார்.

இவருடன் மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர், மட்டக்களப்பு அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் கே.விமலநாதன் ஆகியோரும் சென்றிருந்தனர்.

அத்துடன் சுகாதார அமைச்சருடன் வைத்தியர் குழுவினரும் சென்றிருந்ததால் இடம்பெயர் மக்களுக்கு வைத்திய சேவையும் வழங்கப்பட்டது.

அங்குள்ள மக்கள் மத்தியில் பிரதியமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், '30 வருடங்களுக்குப் பின்னர் மட்டக்களப்பில் ஏற்பட்ட பாரிய வெள்ளம் இதுவாகும். மழை வெள்ளத்தால் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில் விவசாயச் செய்கைகளும் வீடு களும் சேதமடைந்துள்ளன. உங்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களின் விவரங்களை அரச அதிபர் கையளித்துள்ளார். இங்கு ஏற்பட்டுள்ளநிலைமையைஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்று சேதமடைந்த வீடுகளை கட்டிக்கொடுப்பதற்கும், விவசாயச் செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கும்நடவடிக்கை எடுக்கப்படும்''.எனத் தெரிவித்தார். இந்த இடம்பெயர் மக்களுக்கு சமைத்த உணவை ஒழுங்காக வழங்குமாறு அதிகாரிகளுக்குப் பிரதியமைச்சர் துலிப் விஜய சேகர உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மழை, வெள்ளப்பெருக்கு காரணமாக பாரியளவில் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2,700க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ளி)

## தொற்றுநோய் பரவலைத் தடுக்க நடவடிக்கை

வெள்ளத்தினால் இடம்பெயர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு தொற்றுநோய் பரவாமல் தடுப்பது தொடர்பில் கூடிய கவனம் செலுத்துமாறு சுகாதார அதிகாரிகளுக்குத் தாம் ஆலோசனை வழங்கினார் எனக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்த கடும் மழையின் காரணமாக வெள்ளத்தினால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பொது மக்கள் சுகாதார நலன் குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோரின் கண்காணிப்புடன் இருந்து வருகின்றனர். தொற்றுநோய்கள் பரவாமல் இருப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கு மாறும் கிழக்கு மாகாணத்திலுள்ள சகல சுகாதார அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார் எனவும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் சுபைர் மேலும் தெரிவித்தார். (ளி)

## கல்வி நிலையங்கள் 14 ஆம் திகதி வரை முடக்கம்

காத்தான்குடி பிரதேசத்திலுள்ள சகல பிரத்தியேக கல்வி நிலையங்களையும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை மூடிவிடுமாறு காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது. வெள்ளம் காரணமாக தொற்று நோய்கள் பரவும் அபாயமுள்ளதால் அதை தடுப்பதற்காகவே காத்தான்குடி பள்ளிவாசல் சம்மேளனம் இது தொடர்பான தீர்மானத்தை எடுத்துள்ளது என சம்மேளனத்தின் செயலாளர் ஏ.எல்.எம்.சபீல் தெரிவித்தார்.

### மழையின் பாதிப்பு.....



பயணம்: மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் தரைவழிப் பாதைகள் பாதிக்கப்பட்ட நிலையில் கடற்படையின் உதவியுடன் இயந்திரப்படகுச்சேவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ளி)

# மண்முனை தென் எருவிலில் 89 குடும்பங்கள் இடம்பெயர்வு

மட்டக்களப்பு மாவட்டத் தில் பெய்துவரும் அடைமழை யால் மண்முனைத் தென் எரு வில்ப் பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பல குடியிருப் புகள் நீரில் மூழ்கியுள்ளன.

இடம்பெயர்ந்துள்ள 89குடும் பங்களைச் சேர்ந்த 349 நபர்கள் பொது இடங்களில் தங்க வைக் கப்பட்டுள்ளனர். 58 குடியிருப்புக்கள் பகுதி அளவிலும், சில முற்றாகவும் சேதமடைந்துள்ளன. மண்முனைத் தென் எருவில்ப் பற்று பிரதேச செயலகப் பிரிவில் மொத்தமாக 14,532 பேர் இன்று வரை பாதிக்கப்பட்டுள்ளனர் என மண்முனை தென் எருவில்ப் பற்று பிரதேச செயலாளர் எஸ். அருள்ராசா தெரிவித்தார்.




குறிப்பாக சூரையடி, மகழூர், துறைநீலாவணை, எருவில், குருமண்வெளி, கல்லாறு, ஓந்தாச்சி மடம் ஆகியவை உட்பட இன் னும் பல கிராமங்கள் வெள்ளத் தால் பாதிக்கப்பட்டுள்ளன. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவரசம் மரமே புத்திகொடு




(தொடர்ச்சி)

''குருவே! மோசம் போனோம்!'' என்று அலறினான் மட்டி.

''ஏதோ மாய வேலை நடந்து விட்டது!'' என்று அழுதான் மடையன்.

''குருவே! பாதாள உலகத்தில் இருப்பவர்கள்தான் எல்லாவற்றையும் அடியிலிருந்தே திருடிக்கொண்டு போய் விட்டார்கள்!'' என்றான் முட்டாள்.

''இத்தனை நாள்கள் கஷ்டப்பட்டு உழைத்தோம்; எல்லாம் பாழாகி விட்டதே!'' என்று வருத்தப்பட்டார் பரமார்த்தர்.

''குருதேவா! அடுத்த முறை பயிர் செய்யும் போது மேலே இருப்பதை நாம் எடுத்துக் கொள்வோம். நாம் ஏமாந்தது போல அவனும் ஏமாற வேண்டும்!'' என்றான் மூடன்.

அடுத்தமுறை பயிர் செய்யும் காலம் வந்தது. இந்தத் தடவை மண்ணுக்கு மேலே இருப்பது எல்லாம் எங்களுக்கு!'' என்று கூறிவிட்டனர் குருவும் சீடர்களும்.

மறுபடியும் ஏமாற்ற நினைத்த கூட்டாளி, இந்தத் தடவை வேர்க் கடலையும் மரவள்ளிக் கிழங்கும் பயிர் வைத்தான்.

குருவும் சீடர்களும் கடுமையாக உழைத்தார்கள். ''குருவே! செடிகள் வளமாக வளர்கின்றன. கொள்ளை இலாபம் கிடைக்கப் போகிறது!'' என்றான் மண்டு. அறுவடை நேரம் வந்தது. ''சீக்கிரம் மேலே இருப்பதை எல்லாம் கொண்டு போங்கள். நான் மண்ணைத் தோண்ட வேண்டும்'' என்றான் ஏமாற்றுக்காரன்.

செடியில் ஒன்றுமே காய்க்காததைக் கண்ட சீடர்கள், வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டனர்.

''குருதேவா! இந்தத் தடவையும் மோசம் போய் விட்டோம்!'' என்று கண்ணீர் விட்டான் மட்டி.

''இரவு பகலாகக் காவல் காத்தும் பயனில்லாமல் போச்சே!'' என்று புலம்பினான் மடையன். ''இது ஏதோ சாத்தான் வேலையாகத்தான் இருக்கும்!'' என்றான் முட்டாள்.

பரமார்த்தர் தனிமையில சிந்தனை செய்து ஒரு முடிவுக்கு வந்தார். ''சீடர்களே! இது சாத்தான் வேலையுமல்ல; சனீஸ்வரன் வேலையுமல்ல! எல்லாம் நான் செய்த தவறுதான்!'' என்றார்.


''என்ன! நீங்கள் செய்த தவறா? என்ன அது?'' என்று சீடர்கள் வியப்போடு கேட்டனர்.

''மரத்தடியில் படுத்துத் தூங்கியபோது புத்தி வந்ததாகக் கூறினேன்; அது தவறு. அந்த மரம் பூவரசம் மரம் இல்லை என்பது நேற்றுத்தான் தெரிந்தது. வேறு ஏதோ ஒரு மரத்தடியில் மாறிப் போய்த் தவறுதலாகத் தூங்கி விட்டேன்! வாருங்கள் உண்மையாக பூவரசம் மரத்தடிக்குப் போவோம்!'' என்றார்.

சீடர்களும், ''பூவரசம் மரமே! புத்தி கொடு!'' என்று மீண்டும் தவம் செய்யத் தொடங்கினார்கள்.

(முற்றும்)

# இரத்தம் பற்றிய சில தகவல்கள்



*** தலசீமியா என்பது தொற்றுநோயா?**

இது ஒரு தொற்று நோய் அல்ல. தந்தைக்கோ அல்லது தாய்க்கோ தலசீமியா நோய் இருந்தால் குழந்தைக்குப் பிறவியிலேயே இந்நோய் ஏற்பட வாய்ப்பு உண்டு. குழந்தை பிறந்த பிறகு இந்நோய் வரவாய்ப்பில்லை.

*** மூளையின் செல்களுக்கு இரத்தம் செல்லாவிட்டால் விளைவு என்ன?**

மூளையின் செல்களுக்கு ஒட்சிசனை எடுத்துச் செல்லுவது இரத்தம்தான். தொடர்ந்து மூன்று நிமிடங்களுக்கு ஒட்சிசன் செல்லாவிட்டால் மூளையின் செல்கள் உயிரிழந்துவிடும். உடலின் இயக்கத்துக்கு ஆணையிடும் மூளையில் கோளாறு ஏற்பட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படும்.

*** இரத்தம் உறைவதற்கு எது அவசியம்?**

இரத்தத்தில் மொத்தம் உள்ள 13 காரணிகளில் முதல் காரணியில் ஃபப்ரினோஜன் என்ற வேதிப்பொருள்தான் இரத்தத்தை உறைய வைக்கிறது. இரத்தத்தில் உள்ள பிளாஸ்மாவில் இது இல்லாவிட்டால் இரத்தம் உறையாது. ஒரு லிற்றர் பிளாஸ்மாவுக்கு 2.5 - 4 கிராம் என்ற விகிதத்தில் ஃபப்ரினோஜன் உள்ளது.

*** இரத்தத்தில் எத்தனை பிரிவுகள் உள்ளன?**

இரத்தத்தில் நான்கு பிரிவுகள் உள்ளன. ஏ, பி, ஏபி, ஒ என நான்கு பிரிவுகள் உள்ளன. இது நான்கைத் தவிர ஏ1, ஏ2 என்ற உப பிரிவுகளும் இரத்தத்தில் உண்டு. ஒ பிரிவு இரத்தம் அனைவருக்கும் சேரும் என்பதால்தான் ஒ பிரிவு இரத்தம் உள்ளவர்களுக்கு யுனிவர்சல் டோனர், என்று பெயர் உண்டு.

# பொது அறிவு

* இலங்கையில் அதிகமழை பெறும் இடம் எது?
வட்டவளை

* கிராம மட்டத்தில் குழந்தைகளின் போசாக்கின்மைக்கு அரசினால் வழங்கப்படும் போஷாக்கு உணவு யாது?
திரிபோசா

* சுக்கிரன் என அழைக்கப்படும் கோள் எது?
வெள்ளி

* நத்தை முட்டையின் நிறம் யாது?
மஞ்சள்

* பௌத்தர்களின் புனித நூல் எது?
திரிபீடகம்

டிலக்ஷன்,
யா/கோண்டாவில்
கு.மா.வித்தியாலயம்.

# சிந்தனைக்குச் சில......

* நாடு எனக்கு என்ன செய்தது என்பதனைவிட நாட்டுக்கு நான் என்ன செய்தேன் எனச் சிந்திக்க வேண்டும்.

* சிரித்து வாழவேண்டும் - பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே.

* என்னைத் துதிபாடுகிறவர்களை விட என்னைக் கடுமையாக விமர்சிப்பவர்களால் தான் நான் அதிகம் நன்மை பெற்றுள்ளேன்.

சிலையூர்தனம்.

# பள்ளிக்கூடம்



பள்ளிக் கூடம் போகலாமே
சின்னப் பாப்பா -நிறைய
பிள்ளைகளோட பழகலாமே
சின்னப் பாப்பா!

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
சின்னப் பாப்பா -கல்வித்
தோட்டம் அந்தப் பள்ளிக் கூடம்
சின்னப் பாப்பா!

பள்ளிக் கூடம் திறந்தாச்சு
சின்னப் பாப்பா -உனக்கு
நல்ல நேரம் பிறந்தாச்சு
சின்னப் பாப்பா!

வீட்டுச் செய்தி கதைகள் பேசி
பொழுது போக்கலாம் -அட
ஏட்டுக் கல்விப் பாடம் கூட
எழுதிப் பார்க்கலாம்!

உடலும் மனமும் வளர்வதற்கு
சின்னப் பாப்பா -ஏற்ற
இடமே இந்தப் பள்ளிக் கூடம்
சின்னப் பாப்பா!

ம.ஜெஸ்ஸி,
யா/திருக்குடும்பக்
கன்னியர் மடம்.

# நாய்

வீட்டைக் காப்பேன் பூட்டல்ல
வேட்டை செல்வேன் ராஜாவோ?
ஆட்டு மந்தை என் பார்வை
ஆனால் மேய்ப்பன் நானல்ல

திருடர் அஞ்சித் திரிவாரே
தெருவில் கண்டால் ஒளிவாரே

சிறுவர் நட்புக் கொள்வாரே
தோ தோ என்றே அழைப்பாரே

உறவும் பகையும் உணர்வேனே
திறமும் அறிவும் தெரிவேனே
இரவும் பகலும் உழைப்பேனே
என்னை யாரென அறிவீரோ?

தே.ஜீகன்,
யா/மத்திய கல்லூரி.



# நாடுகளின் சின்னங்கள்

* இந்தியா-வங்காளப்புலி
* கனடா-மேபிள் இலை
* கொலம்பியா-ஓர்க்கிட்
* ஐக்கிய அமெரிக்கா-கழுகு
* ரஷ்யா-பழுப்புக் கரடி
* டென்மார்க்-பீர்ச் மரம்
* கிரீஸ்-ஒலிவ் மரக்கிளை
* சீனா-டிரக்கன்
* இங்கிலாந்து-ரோஜா
* ஸ்பெயின்-சிகப்புக் கார்னேசன்

ஜீசா.

# விடுகதைகள்

* கூவி அழைப்பான் கூடி உண்ணுவான் அவன் யார்?
* வாழ்நாள் முழுக்க வாயை மூடாதவன் அவன் யார்?
* போட்டதை எடுக்க முடியாது
என்றாலும் பூமிக்கு அழகாச்சு அது என்ன?
* இருந்த இடத்தில் இருந்தபடி
காலம் காட்டுவாள் அவள் யார்?
* வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ அது என்ன?

விடைகள்:
★காகம்
★தபாற்பெட்டி / கிணறு
★கோலம்
★கடிகாரம்
★சிரிப்பு

ச.பிரணவன்

# வார்த்தை தவறிவிட்டால்

உன் வாயைத் தைக்க வேண்டும் என்று அதிகம் பேசுவர்களைப் கூறுவதுண்டு. இது உண்மைதான். இந்த வாய் இருக்கிறதே அது அணுசக்தியைப் போன்றது. அணுசக்தி நல்ல காரியத்திற்கும் அழிவுகளுக்கும் பயன்படும். வாயும் அப்படித்தான். என்ன மாதிரித் தேனொழுகப் பேசிக் காரியத்தைச் சாதித்து விட்டான் என்று சிலர் புலம்புவதைக் காண்கின்றோம். ''தவளையும் தன் வாயலே கெடும்'' என்ற முதுமொழியையும் நாம் நன்கு அறிவோம்.

திறமை இருந்தும் ஒருவரால் முன்னேற முடிய வில்லையென்றால் அதற்குக் காரணம் வாய்தான் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். வாழவைப்பதும் காலைவாரி விடுவதும் இதுதான். அதுமட்டுமல்லாமல் அவசரப்பட்டு வார்த்தையைக் கொட்டி விடுவதென்பது நம் முகத்தில் நாமே காறி உமிழ்வதற்குச் சமனாகும்.

சிலர் கேலியாகத் தம் மனதில் உள்ளவற்றைக் கொட்டி விடுவார்கள். ஆனால் அது எல்லா நேரத்திலும் சிரிப்பை உண்டாக்குவதில்லை. கேலிப்பேச்சென்பது இருவர் சேர்ந்திருக்கும் போது பிறப்பதில்லை; பலர் கூடி இருக்கும் சூழலில் தான் உருவாகின்றது. எனவே பயனுள்ளவற்றை மட்டுமே பேசுவதோடு வாயில் இருந்து வரும் வார்த்தைகளை அவதானத்துடன் வெளிவிட்டு அதைக் காக்க முயல்வோம்.

ச. பகீரன்
யா/சன்மார்க மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலியாவில் வரலாறு காணாத வெள்ளம்

## 22 நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின



மெல்போர்ன், ஜன.4

ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாணத்தில், வரலாறு காணாத அளவில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கிப் பெண் ஒருவர் பலியானார். அவுஸ்திரேலியாவில் குயின்ஸ்லாந்து மாகாணத்தில், கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால், அங்குள்ள ஆறுகளில் வரலாறு காணாத வகையில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஆறுகளின் கரைகளில் உள்ள நகரங்களையும், தாழ்வான பகுதிகளிலும் வெள்ளம் புகுந்துள்ளது. அங்குள்ள 22 நகரங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இரண்டு லட்சத்திற்கும் அதிமான மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். வீடுகளில் வெள்ளம் புகுந்ததால், மக்கள் மொட்டைமாடி உள்ளிட்ட உயரமான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணிகளில் பொலிஸாரும், இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர். வீடுகளை இழந்தவர்கள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாகாணம் முழுவதும் வெள்ளக்காடாக காட்சியளிப்பதால், குயின்ஸ்லாந்து, நாட்டின் மற்ற பகுதிகளில் இருந்து முழுமையாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. மாகாண தலைநகர் பரிஸ்பேணையும் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

ராக்ஹாம்டன் நகர் மக்கள், வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்நகரில் வசிக்கும் மக்கள் 77 ஆயிரம் பேர், படகு மூலம் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர். அந்நகரில் உள்ள விமான நிலையம் மூடப்பட்டுள்ளது.

ரயில் போக்குவரத்து முற்றிலுமாக முடங்கியுள்ளது. அந்த நகரில் இருந்த மக்கள் முற்றிலுமாக வெளியேற்றப்பட்டுவிட்டனர்.

கடந்த நாற்பது ஆண்டுகளில், முதன் முறையாக வரலாறு காணாத அளவில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆறுகளில் வெள்ளப்பெருக்கு நீடிப்பதால், அங்கு 30 அடி உயரத்திற்கு வெள்ளம் ஓடிக்கொண்டிருப்பதாகவும், இது மேலும், அதிகரிக்கக்கூடும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, இந்த வெள்ளத்தில் சிக்கி ஒரு பெண் உயிரிழந்தார். நேற்று முன்தினம் இரவு, காரில் சென்ற அவர் வீடு திரும்பவில்லை. உறவினர்கள் அவரைத் தேடி வந்தனர்.

நேற்று அவரது உடலை பொலிஸார் கண்டெடுத்தனர். மேலும், இரண்டு பேர் காணாமற் போயுள்ளனர். அவர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

இதனிடையே, வெள்ளத்தால், மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி உள்ளதால், இதைப் பயன்படுத்தி, சமூக விரோதிகள் சூறையாடல் சம்பவங் களில் ஈடுபட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குயின்ஸ்லாந்துப் பிராந்தியத்தில் பெய்து வரும் அதிக மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருள்களை வழங்குவதற்கு, இராணுவ வானூர்திகள் பயன்படுத்தப் படுகின்றன.

(த)

# சிலியில் பெரும் பூமியதிர்ச்சி

சிலியின் மத்திய பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பெரும் பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளதால், மின்சாரம் மற்றும் தொலைபேசித் தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இப்பூமியதிர்ச்சி ரிச்டர் அளவுகோலில் 7.1ஆக பதிவாகியுள்ளது. டெமுகோவின் வடமேற்கு பகுதியிலிருந்து 70 கிலோமீற்றர் தொலைவிலேயே இந்த பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், சுனாமி ஏற்படுமென்று அச்சமடைந்த கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

சுனாமி ஏற்படுவதற்கான அபாயம் எதுவும் இல்லையெனத் தெரிவித்த சிலியின் தேசிய அவசர முகவர் நிலையம், இப்பூமியதிர்ச்சியில் ஏற்பட்ட சேதவிபரங்கள் மற்றும் காயமடைந்தவர்கள் தொடர்பில் தமக்கு தகவல் எதுவும் கிடைக்கவில்லையென குறிப்பிட்டது.

இந்நிலையில், தொலைபேசித் தொடர்புகளும் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் சிலியின் தேசிய அவசர முகவர் நிலையம் தெரிவித்தது.

சுனாமி அபாய எச்சரிக்கை இல்லாத நிலையில், வீடுகளிலிருந்து வெளியேறிய மக்களை மீண்டும் அவர்களது வீடுகளுக்கு திரும்பச்செல்லுமாறு தாம் கூறியுள்ளதாக சிலியின் தேசிய அவசர முகவர் நிலையத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதே பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் ஏற்பட்டிருந்த பாரியளவிலான பூமியதிர்ச்சியில் 400 பொதுமக்கள் பலியாகியிருந்ததுடன், இப்பூமியதிர்ச்சி ரிச்டர் அளவுகோலில் 8.8 ஆக பதிவாகியிருந்தது.

# மெக்ஸிக்கோ எல்லையில் தொடரும் மர்மக் கொலைகள்

மெக்சிகோசிற்றி,ஜன.4

மெக்ஸிக்கோ எல்லைகளில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மர்மக் கொலைகளால் பொதுமக்கள் பெரிதும் அச்சத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

அந்நாட்டின் காட்டுப் பகுதிகளில் சீட்டா எனப்படும் கடத்தல்காரர்கள் நீண்டகாலமாகக் குழுவாக இயங்கிவருகின்றனர். எல்லைப்பகுதிகளில் நடமாடுவோரைக் கொலை செய்வதும், கொள்ளையிடுவதுமாக இவர்களின் குற்றச்செயல் கள் அதிகரித்து வருவதாக வெளிநாட்டுச் செய்திச்சேவைகள் தெரிவிக்கின்றன.

கொலைசெய்யப்படுவோரின் முதுகில் q வடிவத்தில் கத்தியால் கீறிக் காயப்படுத்திச் செல்லும் முறையை இவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்களில் மேலும் பல குழுவினர் இருப்பதாக அந்நாட்டுப் பாதுகாப்புத் தரப்பினர் கருத்து தெரிவித்துள்ளனர். அண்மையில் 14 வயதுக்குக் குறைவான சிறுவர்கள் பலர் கடத்தலில் பலவந்தமாக ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக ஆதாரத்துடன் செய்தி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெரும்பான்மைப் பலத்தை இழந்தது பாகிஸ்தான் அரசு

பாகிஸ்தான் ஆளும் கூட்டணி அரசாங்கத்திலிருந்து முத்தாஹிதா குவாமி இயக்கம் (எம்.கியூ.எம்.) எனும் கட்சி விலகியுள்ளது. இதனால் பிரதமர் யூஸுப் ரஸா கிலானி தலைமையிலான அரசாங்கத்தின் நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலத்தை இழந்துள்ளது.

பெற்றோல் விலை உயர்வு போன்றவை எம்.கியூ.எம். கட்சியின் இந்த வியப்புக்குரிய தீர்மானத்திற்கு காரணங்களாகும். கடந்தவாரம் அக்கட்சி தனது அமைச்சர்கள் இருவரை வாபஸ் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் 342 ஆசனங்கள் உள்ளன. ஆளும்கூட்டணிக்கு எம்.கியூ.எம்.மின் 25 ஆசனங்கள் உட்பட 181 ஆசனங்கள் இருந்தன.

தற்போது எம்.கியூ.எம். விலகியுள்ளதால் அரசாங்கத்தை தக்கவைத்துக் கொள்வதற்குத் தேவையான 172 ஆசன பெரும்பான்மைப் பலத்தை ஆளும் கூட்டணி இழந்துள்ளது.

நாடாளுமன்றத்தில் புதிய கூட்டணியொன்றை ஏற்படுத்தத் தவறினால் தேர்தலொன்றை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.



மியன்மாரின் தேசிய ஜனநாயக லீக் கட்சியின் 63 ஆவது ஆண்டு தினத்தையொட்டி, யோங்கோனில் நடந்த விழாவில் அந்நாட்டு முக்கிய எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சான் சூகி கலந்து கொண்டார்.

# ஸ்பெயினில் புகைபிடித்தலுக்கு கடுமையான சட்டங்கள் அமுல்

ஸ்பெயினில் புகைப்பிடித்தலுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மதுபான சாலைகள், விடுதிகள், பாடசாலைகள், மருத்துவமனைகள் உள்ளிட்ட பல இடங்களில் புகைப்பிடித்தல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

ஐரோப்பிய பிராந்தியத்தில் புகைப் பிடித்தல் தொடர்பில் அமுல்படுத்தப்பட்டுள்ள மிகக் கடுமையான சட்டங்களில் ஒன்றாக ஸ்பெயினின் புதிய சட்டம் கருதப்படுகின்றது. புகைப்பிடித்தலுக்கு எதிராக 2006 ஆம் ஆண்டு அமுல் படுத்தப்பட்ட சட்டதிட்டங்கள் மேலும் கடுமையாக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், புகைப் பிடித்தல் தொடர்பான புதிய சட்டங்களினால் விடுதிகள், ஹோட்டல்கள் மற்றும் மதுபான சாலைகளுக்குப் பாதிப்பு ஏற்படும் என உரிமையாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

புதிய சட்ட விதிகளினால் பத்து வீதமான வியாபாரம் வீழ்ச்சியடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. புகைப்பிடித்தலினால் ஏற்படக் கூடிய உபாதைகளினால் நாள்தோறும் 160 பேர் ஸ்பெயினில் உயிரிழப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆர்ப்பாட்டத்தில் எகிப்திய கிறிஸ்தவர்கள்

எகிப்திய கிறிஸ்தவர்களின் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் தொடர்ந்து இரண்டாவது நாளாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எகிப்தின் இரண்டாவது நகரான எலக்ஸான்ட்ரியாவில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் வைத்து, நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் குண்டுத் தாக்குதலை அடுத்து இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த குண்டுத்தாக்குதலில் 21 பேர் வரையில் கொல்லப்பட்டனர். 40 பேருக்கும் அதிகமானவர்கள் காயமடைந்ததாக பதிவானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மொபைல் போனை'ப் பாதுகாத்து பாவனைக் காலத்தை நீடிக்க வழி

'மொபைல் போன்'களுக்குள் தண்ணீர், தேநீர், மென்பானம் போன்ற திரவங்கள் செல்வது வெகு எளிது. இதனைத் தடுக்க வேண்டும். ஈரப் பதத்தினால் 'போன்' கெட்டுப் போனால் அதனைச் சரி செய்வது கடினம். அப்படிக் கெட்டுப் போனால் 'போனை' விற்பனை செய்தவர் 'போன்', உத்தரவாதத்துடன் இருந்தாலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

திரையில் உள்ள திரவ கிறிஸ்ரல் டிஸ்பிளே (LCD) மீது அழுத்தத்தைப் பிரயோகித்தால் திரை கெட்டு விட வாய்ப்பு உள்ளது. 'போனை' வைத்திருக்கையில் பிளாஸ்டிக் சுவர்கள் பாதுகாப்புத் தரலாம்.

சூரிய ஒளியில் மொபைல் போன்களை அதிகம் வெளிக் காட்டக் கூடாது. இதன் மூலம் 'போனின்' பளபளப்பு மற்றும் வண்ணம் மாறும் ஆபத்து உண்டு.

மொபைலை வாங்கி இயக்கத் தொடங்கியவுடன் *#06# என்ற எண்ணை அழுத்தி அதன் தனி அடையாள எண்ணை (International Mobile Equipment Identity) தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மொபைல் போனுக்கான உத்தரவாதம் இதனைச் சார்ந்ததாகும். மேலும் உங்கள் மொபைல் தொலைந்து போனால்



இந்த எண்ணைக் கொண்டு தேடிக் கண்டுபிடிக்கலாம்.

எலக்ட்ரானிக் சாதனங்கள் அனைத்துமே தூசியினால் கெட்டுப் போகக் கூடியவை. எனவே, நல்ல கவர் போட்டு மூடிய வாறே பயன்படுத்துவது நல்லது.

உங்கள் மொபைல் போனில் ஏதேனும் ஒரு அன்டி வைரஸ் சாப்ட்வேர் தொகுப்பைப் பதிந்து வைப்பது நல்லது.

விரலால் கீ போட்டினை இயக்கவும் விரல் நகங்கள் மற்றும் கூர்மையான சாதனங்கள் கீ போட்டிற்குத் தீங்கு விளைவிக்கும்.

நீண்ட காலத்திற்கு மொபைலைப் பயன்படுத்தப்போவது இல்லை என்றால் பற்றியைக் கழற்றி வைக்கவும்.

மொபைல் போனுடன் எந்த துணைச் சாதனத்தை அல்லது பற்றியைப் பயன்படுத்துவதாக இருந்தாலும் மொபைலைத் தயாரித்த நிறுவனம் அங்கீரித்த சாதனங்களை மட்டுமே பயன்படுத்தவும்.

சிறிய மொபைல் போனில் அதிக வசதிகளைத் தருவதில் இன்றைய மொபைல் நிறுவனங்கள் முயற்சித்து வடிவமைத்து வருகின்றன. இதற்கேற்ற வகையிலே மொபைலில் பயன்படுத்தப்படும் 'சேர்கிற்' போர்டுகள் பல லேயர்களாக அமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சிறிய தளவரிசைகளாக நிற்க வைக்கப்பட்டுள்ளன. அதனால் சிறிய அதிர்ச்சி கூட இவற்றின் செயற்பாட்டினை முடக்கும். இவற்றைத் தடுப்பதிலும் சிறிய 'போன்' பைகள் அல்லது கவர்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. இத்தகைய வழிகளில் சேதம் ஏற்பட்டாலும் நிறுவனங்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

அடிக்கடி சார்ஜ் செய்யப்படும் மொபைல் பற்றிகள் விரைவில் வீணாகும் ஆபத்து உண்டு. எனவே பற்றி சார்ஜர்களை எடுத்துச் சென்று தேவைப்படும் போது மட்டும் பயன்படுத்தவும்.


'நோக்கியா போன்'கள் ரிசேவ் பற்றியுடனேயே வருகின்றன. எனவே, பற்றி சார்ஜ் தீருகையில் *3370# என்ற எண்ணைப் பயன்படுத்தவும். இந்த எண்ணை அழுத்தினால் ரிசேவ் செயற்படுத்தப்பட்டு மொபைலின் பற்றித் திறன் 50 சத வீதம் கூடுவதைக் காணலாம்.

மொபைல் போனுடன்வரும் மனுவல் என்னும் பயன் படுத்துவதற்கான குறிப்புப் புத்தகத்தினை படித்துத் தெரிந்து கொண்டு மொபைலைப் பயன்படுத்தவும். உங்கள் 'நெட்வொர்க்' கினைத் தாண்டி விட்டீர்களா? மொபைல் போனை நிறுத்தி வைப்பது நல்லது. இல்லையேல் பற்றி பவர் வீணாகும்.

பற்றியை மொபைல் போனில் இருந்து வெளியே எடுக்கப் போகிறீர்களா? முதலில் போனை நிறுத்திவிட்டுப் பின் எடுங்கள். தேவைப்படும்போது மட்டும் புளூடூத் வசதியை இயக்கவும். மற்ற நேரங்களில் அதனை நிறுத்தி வைப்பது பற்றி மற்றும் உங்கள் மொபைல் போனுக்கு நல்லது.




## புதுவருட அலங்காரத்துக்கு ஜப்பானில் மூன்று இராட்சத அரிசிக் கேக்குகள்



புது வருட அலங்காரத்தை முன்னிட்டு ஜப்பானில் பாரம்பரிய ஜப்பானிய வழக்கப்படி அரிசி மா கேக்குகள் கட்டட அலங்காரங்களுக்குப் பயன்படுத்தப்பட்டன.

ஜப்பானின் கீட்டாகியூஷு நகரில் உள்ள கொக்குறா மாளிகை மூன்று இராட்சத அரிசிக் கேக்குகள் கொண்டு அலங்கரிக்கப்பட்டன.

கேக்குகள் வட்ட வடிவமானவை. மொத்த எடை 300 கிலோ கிராம். ஆகப்பெரிய கேக்கின்உயரம் 20 சென்டிமீற்றர். விட்டம் 01 மீற்றர்.

அதிஷ்டப் பொருள்கள், மடிக்கக்கூடிய விசிறி, கைப்பந்து அளவிலான சிட்றஸ் பழம் முதலானவை கொண்டு கேக்குகள் அலங்காரம் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கேக்குகள் ஜனவரி 8ஆம் திகதி சனிக்கிழமை வரை காட்சிப் பொருள்களாக இருக்கும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மக்களுக்கு இலவசமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

## பலாலி, இரத்மலானை உட்பட ஆறு உள்ளூர் விமான நிலையங்கள் அபிவிருத்தி



உள்ளூர்விமானப் பயணத்தை ஊக்குவிப்பதற்காக அரசு பலாலி, இரத்மலானை உட்பட ஆறு உள்ளூர் விமான நிலையங்களை அபிவிருத்தி செய்யவுள்ளது.

பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்திய அரசு நிதி உதவி வழங்குகிறது.

பலாலி விமான நிலையம் இப்போது பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பில் இருக்கிறது. இராணுவ விமான நிலையமாகவே அது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கொழும்புக்கு அருகில் இரத்மலானை விமான நிலையம் இருக்கிறது. காலிக்கு அருகில் கொகலையிலும், ஹம்பாந்தோட்டையில் வீரவிலவிலும், அனுராதபுரத்திலும், நுவரெலியாவில் சீதாஎலியவிலும் விமான நிலையங்கள் உள்ளன. இவை எல்லாம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. சீதாஎலியவில் புது ஓடுபாதை அமைக்கப்படவுள்ளது.

ஹம்பாந்தோட்டை மத்தலவில் இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் நிறுவப்பட்டு வருகிறது.

அரசாங்கம் உள்ளூர் விமானப் பயணத்துக்காக ஆறு நடுத்தர அளவு MA60 பயணிகள் விமானங்களைக் கொள்வனவு செய்யவும் தீர்மானித்துள்ளது.

## 'மைக்ரோசொப்ற்'ரின் மாணவர் தொழில்நுட்பப் போட்டி Imagine Cup 2011 இந்த முறையும் நியூயோர்க்கில்

உலகின் முன்னோடி மாணவர் தொழில் நுட்பப் போட்டியான Imagine Cupஆனது "கடினமான பிரச்சினைகளைத் தொழில் நுட்பத்தின் துணையுடன் தீர்த்து வைக்கின்ற உலகினைக் கற்பனை செய்தல்" என்ற உலகளாவிய நோக்குடனான தொனிப்பொருளை முன்வைத்தவாறு 2011 இலும் மீண்டும் இடம்பெறவுள்ளது.

இந்த ஆண்டு உள்ளூர் மட்டப் போட்டியிலே வெற்றி பெறுபவர்கள் ஐக்கிய அமெரிக்காவின் இதயமாக விளங்குகின்ற நியூயோர்க்கில் இடம்பெறவுள்ள உலகளாவிய மட்டத்திலான இறுதிப் போட்டியிலே தமது தாய்நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்யவுள்ளனர்.

மாணவர்களுக்கான தொழில் நுட்பப் போட்டியான Imagine Cup 2003 ஆம் ஆண்டிலே மைக்ரோசொப்டினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இளம் பருவத்தினர் தமது தொழில்நுட்பவியல் எல்லைகளை விரிவுபடுத்தி, தங்களது புத்தாக்கங்களை வெளிக் கொணர்ந்து ஆற்றலை அறுவடை செய்து, தமது எண்ணங்களைச் செயற்படுத்தி, ஆக்கத்திறனை உலகிற்குப் படைத்து அதற்கான உரிய இனங்காணல் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளச் செய்வதே இந்த முன்னெடுப்பின் பிரதான குறிக்கோளாகும்.

"இலங்கையிலே ஏழாவது ஆண்டாக இப்போட்டி இம்முறை இடம்பெறுவதுடன், முன்னைய ஆண்டுகளிலே கிடைக்கப் பெற்ற வரவேற்பினை விட இந்த முறை அதிகமான வரவேற்பைப் பெற்றுள்ளது.

கடந்த சில ஆண்டு களாக இந்தப் போட்டியினது போட்டித்திறனும் அதிகரித்துச் செல்லும் நிலை காணப்படுகின்றது" என்று 'மைக்ரோசொப்ற்' ஸ்ரீலங்காவின் Developer Platform Evan gelism இனது பணிப்பாளரான வெலிங்டன் பெரேரா குறிப்பிட்டார்.

உலகின் மிகக் கடினமான பிரச்சினைகளைத் தொழில் நுட்பத்தின் உதவியுடன் தீர்த்து வைக்கின்ற ஒரு உலகைக் கற்பனை செய்தல் என்ற பிரதான தொனிப்பொருளிலே இந்தப் போட்டி இடம்பெறுகிறது.

போட்டியிடுவதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொள்கின்றவர்கள் ஐக்கிய நாடுகள் அமைப்பினாலே திட்டமிடப்பட்டுள்ள 2015ஆம் ஆண்டளவிலே எட்டு மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளுதல் என்ற அடிப்படையுடன் இணைந்த தாக தங்கள் சிந்தனைகளை முன்னெடுப்பதற்கு ஊக்குவிக்கப் படுகின்றனர்.

இன்று Imagine Cup உலகெங்கிலுமுள்ள இளம் தொழில் நுட்பவியல் திறமைசாலிகளுக்கான ஒரு பொதுவான அழைப்பாக மாறியுள்ளதுடன், அவர்களது ஆக்கத்திறனை வெளிக் கொணருவதற்கு ஊக்குவிக்கின்ற தனி முத்திரை பதித்துள்ள போட்டியாகவும் திகழ்கின்றது.

2003ஆம் ஆண்டில் இந்தப் போட்டி ஆரம்பிக்கப்பட்ட போது 25 நாடுகளிலிருந்து மொத்தமாக 1,000 போடியாளர்கள் பங்கு பற்றியிருந்ததுடன் ஒப்பிடுகையிலே 2010ஆம் ஆண்டிலே 100 இற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 3,25,000 போட்டியாளர்கள் பங்குபற்றியிருக்கும் அளவிற்கு மகத்தான வளர்ச்சியடைந்துள்ளது.

## அதிக தேங்காய்க்கு உரமானியம் கோரும் தெங்குச் செய்கையாளர்கள்



நாட்டிலே தேங்காய்த் தட்டுப்பாடு தொடர்கிறது. தேங்காய் விலை அதிகரித்த வண்ணம் இருக்கிறது. இந்த நிலையில் தெங்குச் செய்கையை அபிவிருத்தி செய்து கூடுதலான தேங்காயைப் பெற்றுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு உரமானியம் வழங்க வேண்டும் என்று பெருந்தோட்ட உரிமையாளர்களும் சிறுதெங்குச் செய்கையாளர்களும் கோருகிறார்கள்.

இப்போது தேங்காய் உற்பத்தி 15 சதவீதம் குறைந்துவிட்டது. இதை நிவர்த்தி செய்வதற் கான வழிவகைகளை ஆராய்வ தற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சமீபத்தில் தெங்குச் செய்கையாளர்களைக் கொழும்புக்கு அழைத்திருந்தார்.

ஆலோசனைக் கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. அப்போதே தெங்குச் செய்கையாளர்கள் உரமானியக் கோரிக்கையை முன்வைத்தார்கள். ஜனாதிபதியுடன் தாம் இதுபற்றிக் கலந்துபேசி நடவடிக்கை எடுப்பார் என்று அமைச்சர் உறுதியளித்தார்.

இந்த வருட ஆரம்பத்தில் நிலவிய கடும் வரட்சி மற்றும் நோய் காரணமாகவே தேங்காய் உற்பத்தி குறைந்துவிட்டது என்று தென்னை அபிவிருத்திச்சபை அதிகாரிகள் தெரிவித்தனர். தெங்கு அபிவிருத்திச்சபை அதிகாரிகளின் கணக்குப்படி இப்போது சுமார் 64 மில்லியன் தென்னைகள் நாட்டில் உள்ளன.

இவற்றிலிருந்து வருடாந்தம் 2.7 பில்லியன் தேங்காய்கள் கிடைக்கின்றன. இதை அடுத்த வருடம் 3. பில்லியன் ஆக்குவதற்குச் சபை முயற்சி செய்து வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி எப்போதும் போல் தொடரும்

## கருணாநிதியைச் சந்தித்த பின் மன்மோகன் சிங் தெரிவிப்பு

சென்னை, ஜன.04

காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி எப் போதும்போல் பலத்துடன் தொடரும் - என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரி வித்துள்ளார்.

சென்னை வந்த பிரதமர் மன்மோகன் சிங்கை முதல்வர் கருணாநிதி ஆளுநர் மாளிகையில் நேற்றுச் சந்தித்துப் பேசி னார்.

பின்னர் காங்கிரஸ் மற்றும் தி.மு.க. உறவு குறித்து பிரதமரிடம் செய்தியாளர் கள் கேட்டபோது, இரு கட்சிகளுக்கும் இடையேயான உறவு சிறப்பாக உள்ளது. கூட்டணி எப்போதும்போல் பலத்துடன் தொடரும் - என்று மன்மோகன் தெரி வித்தார்.

தமிழக வெள்ள நிலைமை, அடை யாறு பூங்காவுக்கு சுற்றுச்சூழல் அனுமதி மற்றும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி கட்சிகளுக்கிடையேயான உறவு குறித்து கருணாநிதியுடன் விவாதித்தார் எனவும் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

இதேநேரம், காங்கிரஸுடனான உறவு பலமாக உள்ளது என முதல்வர் கருணா நிதியும் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் காரணமாக மத்திய அமைச்சர் பதவியில் இருந்து ஆ. ராசா விலகிய பின்னர் பிரதமர் மன் மோகன் சிங்கும், முதல்வர் கருணாநிதி யும் முதன்முறையாக நேரில் சந்தித்துள் ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



சென்னை வந்த பிரதமர் மன்மோகன் சிங்கை முதல்வர் கருணாநிதி ஆளுநர் மாளிகையில் சந்தித்தபோது.....

இதேவேளை, சென்னை அருகே இந் திய அறிவியல் மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசிய பிரதமர் மன்மோகன் சிங், இந்தியாவின் அறிவியல் வளர்ச்சியில் தமிழகம் முக்கிய பங்கு வகிக்கிறது என வும், தமிழகம் பல அறிவியல் விஞ்ஞானி களைத் தந்துள்ளது என்று தெரிவித்தார்.

மாநாட்டில் மத்திய அமைச்சர் கபில் சிபில், துணை முதல்வர் ஸ்டாலின், விஞ்ஞானிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஜனவரி 7ஆம் திகதிவரை நடை பெறும் இம்மாநாட்டில் பல்வேறு நாடு களைச் சேர்ந்த சுமார் 7 ஆயிரம் விஞ் ஞானிகள் கலந்துகொள்கின்றனர். மாநாட்டு மலரை வெளியிட்ட பிரதமர், 27 விஞ்ஞானிகளுக்கு நினைவுப் பதக் கங்களை வழங்கினார்.

நோபல் பரிசு பெற்ற வெங்கட்ராமன் ராமகிருஷ்ணனுக்கு பரிசு வழங்கிய பின்னர் பிரதமர் மாநாட்டு உரையை புத்தாண்டு வாழ்த்துடன் ஆரம்பித்தார்.

அப்போது அவர் பேசியவை வருமாறு -

இந்தியாவின் அறிவியல் வளர்ச்சி யில் தமிழகம் முக்கிய பங்கு வகிக்கிறது. ராமானுஜம், சர்.சி.வி.ராமன் ஆகியோர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். இந்தியா வின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்புக்கு அறிவியல் வளர்ச்சி மிகவும் முக்கிய மானதாகும். இந்தியப் பல்கலைக்கழ கங்கள் தரமான கல்வியை வழங்க வேண்டும்.

வெளிநாட்டு விஞ்ஞானிகளுடன் இணைந்து அதிகளவில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டும். இந்திய அறி வியல் ஆராய்ச்சித் துறையில் இளைஞர் கள் அதிகளவில் பங்கேற்க வேண்டும். இந்தியப் பல்கலைகளில் ஆராய்ச்சி, வேளாண் மேம்பாடு ஆகிய துறைகளில் விஞ்ஞானிகள் பலருக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண் டும். பல்கலைகழகங்கள் அறிவியல் முன்னேற்றத்திற்கு பெரும் துணையாக உள்ளது. வரும் 2012 - 2013 ஆம் ஆண்டு அறிவியல் ஆண்டாக அனுஷ் டிக்கப்படும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# தி.மு.கவின் தவறுக்கு பலிக்கடா ஆவதா? மிக விரைவில் காங். நல்ல முடிவு எடுக்கும்

## இளங்கோவன் தெரிவிப்பு



சென்னை, ஜன. 04

தி.மு.க. செய்யும் தவறுகளுக் கெல்லாம் காங்கிரஸ் கட்சி பலிக் கடா ஆக வேண்டியுள்ளது. இத னால் தி.மு.க. அணியில் காங்கி ரஸ் கட்சி இருக்கக்கூடாது என்பதே பெரும்பாலான காங்கிரஸ்காரர் களின் விருப்பமாக உள்ளது. எனவே, காங்கிரஸ் கட்சி விரை வில் நல்ல முடிவை எடுக்கும்.

- இவ்வாறு அக்கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தெரிவித்தார்.

சென்னை, பெரம்பூரில் காங் கிரஸ் கட்சியின் 126 ஆம் ஆண்டு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற் றுக்கிழமை நடைபெற்றது.

அன்னை இந்திரா தேசியப் பேரவை சார்பில் நடைபெற்ற அந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

காங்கிரஸ் கட்சிக்கு எதிர் காலம் வேண்டும், மரியாதை வேண்டும், அங்கீகாரம் வேண் டும் என தமிழ்நாட்டில் உள்ள எல்லா காங்கிரஸாரும் கருதுகின் றனர். தி.மு.க. செய்யும் தவறுகளுக் கெல்லாம் காங்கிரஸ் கட்சி பலிக் கடா ஆக வேண்டியுள்ளது.


எனவே, தி.மு.க. அணியில் காங்கிரஸ் கட்சி இருக்கக் கூடாது என்பதே பெரும்பாலான காங் கிரஸ்காரர்களின் விருப்பமாக உள்ளது. தமிழகத்தில் உள்ள காங்கிரஸ்காரர்களின் இந்த உணர்வுகளை எல்லாம் நாங்கள் கட்சித் தலைவர் சோனியா காந்தியிடம் சொல்லியிருக் கிறோம்.

ஆகவே, காங்கிரஸ் கட்சி விரைவில் நல்ல முடிவை எடுக் கும். அதன் பிறகு தமிழகத்தில் எங்களது பிரசாரமே வேறு விதமாக இருக்கும்.

கடந்த மக்களவைத் தேர்த லில் நான், தங்கபாலு உட்பட காங்கிரஸ் கட்சியின் முன்னணி யினர் பலர் தோல்வியடைந்த தற்கு தி.மு.க.தான் காரணம். தி.மு.க.வுடன் மட்டும் கூட்டணி இல்லாமல் இருந்திருந்தால் காங்கிரஸ் கட்சி போட்டி யிட்ட அனைத்து இடங்களிலும் வெற்றி பெற்றிருக்கும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

## இந்தியச் செய்திகள்



குரு கோவிந்த் சிங் பிறந்தநாளை டில்லியில் சீக்கிய குழந் தைகள் சிறப்பாகக் கொண்டாடினர். சீக்கியரின் மதப் போரில் குரு கோவிந்த் சிங் தனது தந்தை, தாய், நான்கு மகன்களை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா. பாதுகாப்புச் சபை தலைவராகிறது இந்தியா

நியூயோர்க்,ஜன.4

ஐ.நா. பாதுகாப்புச் சபைத் தலைவராக ஒகஸ்ட் மாதம் இந்தியா செயற்படவுள்ளது. மேலும், அடுத்த ஆண்டு நவம் பர் மாதமும் பாதுகாப்புச் சபைக்கு இந்தியா தலைமை வகிக்கும். இதற்கான அறிவிப்பு நேற்று அதி காரபூர்வமாக வெளியிடப்பட்டது.

15பேர் கொண்ட ஐ.நா. பாது காப்புச் சபையில் மாதந்தோறும் ஒவ்வொரு நாடுகள் சுழற்சி முறையில் தலைமை வகிக்கும். அந்த வகையில் 2011 ஒகஸ்ட், 2012 நவம்பர் ஆகிய மாதங் களில் பாதுகாப்புச் சபை இந்தியா தலைமையில் செயற்படும்.

மொத்தமுள்ள 15 நாடுகளில், ஆங்கில அகர வரிசைப்படி மாதந்தோறும் ஒவ்வொரு நாடும் தலைமை வகிக்கும். அந்த வகையில், பொஸ்னியா இந்த மாதம் தலைமை வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழக காங். நிர்வாகிகளை மாற்ற முடிவு; விசாரித்து அறிக்கை தர சோனியா உத்தரவு

சென்னை,ஜன.4

அகில இந்திய காங்கிரஸ் மாநாடு முடிந்த கையோடு, தமிழகத்தில் உள்ள காங்கிரஸ் மூத்த நிர்வாகிகளுடன் சோனியா ஆலோசனை நடத்தினார். தமி ழகக் காங்கிரஸ் நிர்வாகிகளை மாற்றுவது தொடர்பாக உரிய விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி குலாம்நபி ஆசாத்துக்கு சோனியா உத்தர விட்டுள்ளார்.

இது தங்கபாலு போன்றவர் களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி மாநாடு டில்லியில் டிசெம் பர் 17, 18 மற்றும் 19 ஆகிய திகதி களில் நடந்தது. மாநாடு முடிந்த வுடன் தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் வாசன், சிதம்பரம், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, அகில இந்திய காங்கிரஸ் உறுப் பினர்கள் பிரபு, இளங்கோவன், என்.எஸ்.வி.சித்தன், டாக்டர் செல்லகுமார், சுதர்சன நாச்சி யப்பன், எஸ்.ஆர்.பாலசுப்பிர மணியம், மணிசங்கர் அய்யர், அகில இந்திய செய்தித் தொடர் பாளர் ஜெயந்தி நடராஜன், சட்டசபை கொறடா பீட்டர் அல் போன்ஸ், ஞானதேசிகன் எம்.பி. ஆகிய 13 பேர் சோனியாவை நேரில் சந்தித்துப் பேசினர்.

இதன்போது கட்சி அமைப்பு மற்றும் தமிழக சட்டசபைத் தேர்தல் கூட்டணி பற்றி பேசப் பட்டது. தமிழகக் காங்கிரஸ் நிர் வாகிகளை மாற்றினால் மாவட்ட நிர்வாகிகளையும் மாற்றலாம். இல்லாவிட்டால், மாவட்ட நிர்வா கிகளை மாற்றத் தேவையில்லை. வெற்றிடமாக உள்ள மாவட்டத் தலைவர்கள் பதவியிடத்தை மட்டும் நிரப்பலாம் என வாசன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவரது கருத்துக்கு ஆதர வாக, இளங்கோவன் உட்பட எட்டுக்கும் மேற்பட்டோர் தமி ழகக் காங்கிரஸ் கமிட்டியை மாற்ற வலியுறுத்தியுள்ளனர். அதற்கு தேர்தல் நேரத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட் டியை மாற்றுவது அவ்வளவு நல்லதல்ல. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாவட்டத் தலைவர்களை மட்டும் மாற்றி விடலாம் என்று உள்துறை அமைச் சர் சிதம்பரம் கூறியுள்ளார்.

இந்தக் கருத்தை ஏற்க மறுத்த சோனியா, பெரும்பாலான நிர் வாகிகள், தமிழகக் காங்கிஸ் கமிட்டியை மாற்றவேண்டும்என்று தான் விரும்புகின்றனர். குறிப்பாக, இளைஞர் காங்கிரஸ் நிர்வாகி கள் இதில் உறுதியாக இருக்கின் றனர் எனத் தெரிவித்துள்ளார்.

அதற்கு தங்கபாலு, என். எஸ்.வி.சித்தன், எஸ்.ஆர்.பால சுப்பிரமணியம் ஆகியோர் ஆத ரவு தெரிவிப்பதை வைத்து நீங் கள் பேசக் கூடாது. அவர்கள் எந்த அடிப்படையில் இங்கு வந்தனர் எனக் கேட்க, இளங்கோவன் ஆவேசமடைந்து, டாக்டர் செல்ல குமாரை எந்த அடிப்படையில் அழைத்து வந்தீர்கள் என எதிர்க் கேள்வி கேட்க, தங்கபாலு திகைத்துப் போய் விட்டார்.

அணி இல்லாத தலைவர், நான் மட்டும்தான். எனவே, எனக்கு தமிழகக் காங்கிரஸ் தலைவர் பதவியைத் தாருங் கள் என டாக்டர் செல்லகுமார் வெளிப்படையாகக் கேட்க தங்க பாலு வாயடைத்துப்போய்விட்டார்.

இதையடுத்து, 13பேர் கொண்ட குழுவிடம் மீண்டும் ஆலோசனை நடத்தி, தமிழகக் காங்கிரஸ் கமிட்டியை மாற்று வது தொடர்பாக அறிக்கை சமர்ப் பிக்கும்படி, குலாம்நபி ஆசாத் துக்கு சோனியா உத்தரவிட் டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண விளையாட்டுத் துறையை முன்னேற்றுவதற்கு ஆளுநர் நடவடிக்கை

வலி.வடக்கு, ஜன.4

வட மாகாணப் பாடசாலைகள், கழகங்களின் விளையாட்டுத் துறையை முன்னேற்றுவதில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி பல்வேறு செயல்திட்டங்களை கடந்தாண்டு மேற்கொண்டுள்ளார்.

2011ஆம் ஆண்டு வடமாகாணத்தின் விளையாட்டுத்துறை பல்வேறு முன்னேற்றங்களையும் கொண்ட ஆண்டாக அமைய வேண்டும் என்று யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், வட மாகாண விளையாட்டுத் திணைக்கள அலுவலர்கள் மற்றும் பாடசாலைகளில் கல்வி வலயங்களின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போது ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

2010ஆம் ஆண்டு நிறைவு பெற்றுள்ள நிலையில் குறிப்பாக 12 விளையாட்டுப் பயிற்றுநர்கள் மாவட்ட ரீதியா நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இதேபோன்று 17 விளையாட்டு அலுவர்கள் நியமனத்தை கடந்த முதலாம் திகதி முதல் ஏற்றுள்ளனர்.

கடந்த மாதம் என்றும் நடைபெறாத வகையில் 35 வீரர்கள், வீராங்கனைகள், 10 உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், 05 விளையாட்டு அலுவலர்கள் ஆகியோரை உள்ளடக்கி 50 பேருக்கு இரண்டு வார கால தடகளப் பயிற்சிகள் தேசிய மட்டப் பயிற்றுனர்களால் வழங்கப்பட்டதுடன் ஆங்கிலம், கணினி அறிவுகளும் வழங்கப்பட்டன. (த-86)

# சென்றலைட்ஸ், ஜொலிஸ்ரார் அணிகள் இறுதியாட்டத்தில் மோதுவதற்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கிடையே நடத்தி வந்த 2010ஆம் ஆண்டுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டங்களில் ஆண்கள் பிரிவில் சென்றலைட்ஸ் 'ஏ' அணி ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி ஆகியன வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

அரையிறுதி ஆட்டத்தில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் 'ஏ' அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் சென்றலைட்ஸ் 'ஏ' அணி தன்னை எதிர்த்து விளையாடிய கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணியை 88:39 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிகொண்டு இறுதியாட்டதுக்குத் தகுதி பெற்றது.

மற்றைய அரை இறுதி ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் 'ஏ' அணியை எதிர்த்துக் கோப்பாய் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய கோப்பாய் விளையாட்டுக் கழக அணியை 66:59 என்ற புள்ளி அடிப்படையில் வென்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

## வயது ஒரு தடையல்ல....



சாதிக்கலாம்: வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் கடந்த மாதம் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட ஸ்ரீபன் மகேந்திரனுக்கு இலங்கை மேசைப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் சந்தன பெரேரா சான்றிதழ் வழங்குகின்றார்.

# இறுதியாட்டங்கள் ஞாயிறன்று

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் ஆண், பெண் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் 9 ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளன.

ஆண்கள் பிரிவில் சென்றலைட்ஸ் 'ஏ' அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பெண்கள் பிரிவில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மூன்றாம் இடத்துக்கான ஆண்களுக்கான போட்டியில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துக் கோப்பாய் விளையாட்டுக் கழக அணியும், பெண்களுக்கான மூன்றாம் இடத்துக்கான போட்டியில் பட்டபிளை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இந்து மகளிர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளன. (த-23)

# கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி எதிர்வரும் வியாழன், வெள்ளிக் கிழமைகளில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

எதிர்வரும் வெள்ளி, சனிக் கிழமைகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதவுள்ளது. (த-23)

# மேசைப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன.4

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் கடந்த மாதம் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மேசைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

**8 வயதின் கீழ் ஆண்கள்**

முதலாமிடம்: உமாசங்கர் வரஜித் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), இரண்டாமிடம் : ஜீனுப் சதுசன் (யாழ். மத்திய கல்லூரி)

**8 வயதின் கீழ் பெண்கள்**

முதலாமிடம் : றொபேட் ஏஞ்சலின் (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் : நிலோஜினி பிரதாபன் (இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை)

**10 வயதின் கீழ் ஆண்கள்**

முதலாமிடம்: ஜீனுப் சதுசன் (யாழ்.மத்திய கல்லூரி), இரண்டாமிடம்: உமாசங்கர் வரஜித் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)

**10 வயதின் கீழ் பெண்கள்**

முதலாமிடம்: றொபேட் ஏஞ்சலின் (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம்: திபூஷா சுப்பிரமணியம் (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி)

**12 வயதின் கீழ் ஆண்கள்**

முதலாமிடம்: ஜோண்சன் ஸ்ரெலோன் (யாழ்.மத்திய கல்லூரி), இரண்டாமிடம் : எ.சன்சலன் (யாழ்.மத்திய கல்லூரி).

**12 வயதின் கீழ் பெண்கள்**

முதலாமிடம்: றொபேட் அன்றியா (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம்: அருள்சினி ஜெயாலின் (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி)

**15 வயதின் கீழ் ஆண்கள்**

முதலாமிடம் : மோகன் ஆகாஷன் (யாழ்.மத்திய கல்லூரி), இரண்டாமிடம்: சண்முகம் சாமுவேல் (யாழ்.மத்திய கல்லூரி)

**15 வயதின் கீழ் பெண்கள்**

முதலாமிடம் : சிறிபாஸ்கரன் சிந்துஜா (யூனியன் கல்லூரி), இரண்டாமிடம் : உதயகுமார் சரண்யா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

**18 வயதின் கீழ் ஆண்கள்**

முதலாமிடம்: மோகன் ஆகாஷன் (யாழ்.மத்திய கல்லூரி), இரண்டாமிடம் : எச்.ஆர்.ஜீஹான் (திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயம்)

**18 வயதின் கீழ் பெண்கள்**

முதலாமிடம்: கந்தஞானி பிரதூஷா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் : பவந்தினி கதிரேசபிள்ளை (யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

**வயதுக் கட்டுப்பாடற்றவர்களுக்கான போட்டியில் வெற்றி பெற்றவர்கள்:**

ஆண்கள் (ஒற்றையர் பிரிவு)

முதலாமிடம் : மோகன் ஆகாஷ் (யாழ்.மத்திய கல்லூரி), இரண்டாமிடம்: லோகநாதன் விஜிதன் (யாழ்.மத்திய கல்லூரி)

பெண்கள் (ஒற்றையர் பிரிவு)

முதலாமிடம் : கந்தஞானி பிரதூஷா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), இரண்டாமிடம்: சிறிபாஸ்கரன் சிந்துஜா (யூனியன் கல்லூரி)

ஆண்கள் (இரட்டையர் பிரிவு)

முதலாமிடம்: மோகன் ஆகாஷ் - ஜெகநாதன் மோகன்

இரண்டாமிடம்: பாலசுப்பிரமணியம் அஜந் - சண்முகம் சாமுவேல்

பெண்கள் (இரட்டையர் பிரிவு)

முதலாமிடம்: கந்தஞானி பிரதூஷா - தேவராஜா கீர்த்தனா, இரண்டாமிடம்: சிறிபாஸ்கரன் சிந்துஜா - பி.பிருந்தா

கலப்பு இரட்டையர்

முதலாமிடம்: மோகன் ஆகாஷ் - கந்தஞானி பிரதூஷா, இரண்டாமிடம்: எச்.ஆர்.ஜிஹான் - எச்.எ.பி.உமேஷா

**40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்**

முதலாமிடம்: ஸ்ரீவ் மகேந்திரன், இரண்டாமிடம்: காசிப்பிள்ளை பாஸ்கரன். (த-23)

# வென்றது பற்றிக்ஸ்

குருநகர், ஜன.4

13 வயதுப் பிரிவில் யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் அம்பாறை காமினி மகா வித்தியாலத்துக்கும் இடையே யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர்களின் அபார பந்து வீச்சினால் யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி அம்பாறை காமினி மகா வித்தியாலய அணியை 6 விக்கெட்டுகளால் வென்று இப்பிரிவின் அடுத்த போட்டியில் விளையாடுவதற்குத் தகுதி பெற்றது.

இப்போட்டி 50 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்டதாக அமைந்திருந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய அம்பாறை காமினி மகா வித்தியாலயம் 41 ஓட்டங்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பந்து வீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த ஜெறிக்சன் 3 விக்கெட்டுகளையும், கிரிசாந்தன் 3 விக்கெட்டுகளையும், சி.ஆர்.சிந்துஜன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 4 விக்கெட்டுகளை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இப்போட்டியில் வெற்றிபெற்றனர்.

எஸ்.அல்வின் தனது கல்லூரிக்காக 12 ஓட்டங்களைக் பெற்றுக் கொடுத்தார். (த-51)

# மன்செஸ்ரர் வெற்றி

இங்கிலிஷ் பிரிமியர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் மன்செஸ்ரர் யுனைற்ரெட் அணி வெற்றி பெற்றது.

பிரிமியர் லீக் உதைபந்தாட்ட லீக் போட்டிகள் லண்டனில் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் மன்செஸ்ரர் யுனைற்ரெட் அணி, வெஸ்ட் புரூம்வீச் அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. யுனைற்ரெட் அணி சார்பில் வெய்ன் ரூனி, ஹெர்ணான்டஸ், வெஸ்ட் அணி சார்பில் மாரிசன் ஆகியோர் கோல் அடித்தனர். மற்றொரு போட்டியில் மான்செஸ்டர் சிற்றி அணி, 1-0 என்ற கணக்கில் பிளக்பூல் அணியை வென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட்

# தொடரை நிர்ணயிக்கும் போட்டி: வெற்றிபெறுமா இந்திய அணி?

கேப்டவுனில் இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியின் 2ஆவது நாள் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. நேற்றைய போட்டியிலும் கலிஸ் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 112.5 ஓவர்கள் முடிவில் 362 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அடுத்து இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்தது.

இந்தியா - தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கேப்டவுனில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. முதல் இரு டெஸ்டில் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றி பெற்றிருப்பதால் தொடரை நிர்ணயிக்கும் போட்டியாக இது அமைந்துள்ளது. இந்திய அணியில் ஒரே ஒரு மாற்றமாக விஜய்க்கு பதிலாக, காயத்தில் இருந்து குணமடைந்த கம்பீர் இடம்பெற்றார்.

இந்தச் சுற்றுப்பயணத்தில் முதல் முறையாக நாயணச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணியின் அணித்தலைவர் டோனி முதலில் பந்துவீசத் தீர்மானித்தார். மழை மேகம் திரண்டிருந்த வானிலையைக் கருத்தில் கொண்டு, அவர் இந்த முடிவை எடுத்தார்.

இதன்படி தென்னாபிரிக்கா முதலில் துடுப்பாட்டத்தைத் தொடங்கியது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரரும், அணித் தலைவருமான சுமித்தை, இந்திய பந்துவீச்சாளர்கள் நிலைத்து நிற்க விடவில்லை. சகீர்கானின் 'ஸ்விங்' தாக்குதலில் எப்போதும் தடுமாறக்கூடிய சுமித் (6 ஓட்டங்கள், 12 பந்துகள்) பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார். டெஸ்ட் போட்டிகளில் சுமித், சகீர்கானின் பந்து வீச்சில் ஆட்டமிழப்பது, இது 6ஆவது முறையாகும். அடுத்து ஹஷிம் ஆம்லா களம் இறங்கினார்.

சிறிது நேரத்தில் மழை குறுக்கிட்டது. அப்போது தென்னாபிரிக்கா 9 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 21 ஓட்டங்களை எடுத்திருந்தது. மழையால் சுமார் 2 மணி நேரம் ஆட்டம் பாதிக்கப்பட்டது. உணவு இடைவேளைக்கு பின்னர் தான் மீண்டும் ஆட்டம் ஆரம்பமாகியது. மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் அல்விரோ பீற்றர்ஸன் (21 ஓட்டங்கள், 47 பந்துகள், 3 பவுண்டரிகள்) இஷாந் ஷர்மாவின் வேகத்தில் வீழ்ந்தார்.



இதன் பின்னர் அம்லாவுடன், கலிஸ் ஜோடி சேர்ந்தார். இவர்கள் இருவரும் அணியைச் சரிவில் ஓரளவுக்கு மீட்டு நல்ல நிலையை நோக்கி நகர்த்திய சமயத்தில், அம்லா ஆட்டமிழந்தார். 59 ஓட்டங்கள் (80 பந்துகள், 9 பவுண்டரிகள், ஒரு சிக்சர்) விளாசிய அம்லாவின் விக்கெட்டை ஸ்ரீசாந்த் சாய்த்தார். இதைத் தொடர்ந்து 4ஆவது விக்கெட்டுக்கு இறங்கி நிதானம் காட்டிய டிவில்லியர்ஸ் (26 ஓட்டங்கள், 72 பந்துகள், 3 பவுண்டரிகள்) அணியின் ஓட்ட எண்ணிக்கை 164 ஓட்டங்களை எட்டியபோது, ஸ்ரீசாந்த் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் டோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதனால் தென்னாபிரிக்காவுக்கு மீண்டும் நெருக்கடி ஏற்பட்டது.

இருப்பினும் மறுமுனையில் கலிஸ் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவருடன் 5ஆவது விக்கெட்டுக்கு பிரின்ஸ் கைகோர்த்தார்.

முதல் நாள் ஆட்டநேர முடிவில் தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 74 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 232 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. 39ஆவது சதத்தை நோக்கி முன்னேறி வரும் கலிஸ் 81 ஓட்டங்களுடனும் (169 பந்துகள், 6 பவுண்டரிகள்), பிரின்ஸ் 28 ஓட்டங்களுடனும் (69 பந்துகள், 3 பவுண்டரிகள்) ஆட்டமிழக்காமல் உள்ளனர். இந்திய பந்துவீச்சாளர்களான ஸ்ரீசாந்த் 2 விக்கெட்டுகளும், இஷாந்த் ஷர்மா, ஜாகீர்கான் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாம் நாள் ஆட்டமான நேற்று தென்னாபிரிக்கா தனது முதல் இன்னிங்ஸைத் தொடர்ந்தது. 28 ஓட்டங்களுடன் களத்திலிருந்த பிரின்ஸ் 47 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்தடுத்துக் களமிறங்கிய பௌச்சர், ஸ்ரெயின் ஆகியோர் ஓட்டம் எதையும் பெறாமல் வெளியேறி ஏமாற்றம் அளித்தனர்.

இவர்களைத் தொடர்ந்து வந்த வீரர்களும் நிலைத்து நின்று ஆடவில்லை. குறுகிய ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய கலிஸ் 161 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 112.5 ஓவர்கள் முடிவில் 362 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தனது முதலாவது இனிங்சை ஆரம்பித்த இந்தியா அணி 2 விக்கெட் இழப்புக்களுக்கு 142 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஷேவாக் - கம்பீர் ஆகியோர் ஆரம்ப வீரர்களாகக் களம் புகுந்தனர். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஷேவாக் 13 ஓட்டங்களுடன் வெளியேறி, பெரிய ஏமாற்றத்தை அளித்தார்.

அடுத்து இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் டிராவிட் களம் புகுந்த சிறிது நேரத்திலேயே 5 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ரண்-அவுட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் 49 ஓட்டங்களுடனும் கம்பீர் 65 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர்.

மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## உலகக் கிண்ண டிக்கெட்களை வாங்க அலைமோதும் பங்களாதேஷ் ரசிகர்கள்



டாக்கா, ஜன.4

பங்களாதேஷில் உலகக் கிண்ணப் போட்டிக்கான டிக்கெட் விற்பனை அமோகமாக நடந்தது. ரசிகர்கள் 2 கிலோ மீற்றர் தூரம் வரிசையில் நின்று டிக்கெட்களை வாங்கிச்சென்றனர்.

10ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி முதல் ஏப்ரல் 2ஆம் திகதிவரை இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெறுகிறது. இதில் பங்களாதேஷில் 2 கால்இறுதி உள்பட 8 ஆட்டங்கள் நடக்கின்றன. பங்களாதேஷில் முதல்முறையாக உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நடப்பதால் அங்குள்ள ரசிகர்கள் போட்டியைக் காண மிகுந்த ஆர்வமுடன் உள்ளனர்.

பங்களாதேஷில் நடக்கும் போட்டிக்கான டிக்கெட் விற்பனை அங்குள்ள 2 முன்னணி வங்கியின் 80 கிளைகளில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. இதையொட்டி ஒரு நாள் முன்னதாகவே ரசிகர்கள் வங்கியின் முன் குவியத் தொடங்கினார்கள். ஆயிரக் கணக்கான ரசிகர்கள் விடிய விடிய அங்கேயே காத்திருந்தனர். கடுமையான குளிரையும், அதிகமான டிக்கெட் விலையையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. டாக்காவில் வங்கியின் வெளிப்புறம் 2 கிலோமீற்றர் தூரத்திற்கு மேல் வரிசையாக நின்று கொண்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை டிக்கெட் விற்பனை தொடங்கியதும் முண்டியடித்துக் கொண்டு ஆர்வமாக டிக்கெட்களை வாங்கினர். இருப்பினும் பலருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இந்தியா - பங்களாதேஷ் இடையே ஆரம்ப ஆட்டம் உள்பட 6 ஆட்டங்கள் நடக்கும் டாக்கா ஷெர்-இ-பங்க்ளா மைதானத்தின் இருக்கை வசதி 25 ஆயிரத்து 167 ஆகும். இதில் ஒவ்வொரு ஆட்டத்திற்கும் 15,167 டிக்கெட்டுகள் மட்டுமே உள்ளூர் ரசிகர்களுக்கு விற்கப்படுகிறது. மற்ற டிக்கெட்டுகள் ஐ.சி.சி., வெளிநாட்டு ரசிகர்கள், விளம்பரதாரர்கள் உள்ளிட்டோருக்கு வழங்க வேண்டியதாகும்.

பங்களாதேஷ் அணி மோதும் 2 லீக் ஆட்டங்கள் நடக்கும் மைதானத்திலும் இதே நிலைமை தான். இங்கு மொத்தமுள்ள 17,800 டிக்கெட்டுகளில் உள்ளூர் ரசிகர்களுக்கு 12,521 டிக்கெட்டுகளே ஒதுக்கப்பட்டது. அலைமோதிய ரசிகர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் மிகவும் சிரமப்பட்டனர். சில இடங்களில் ரசிகர்கள் - பொலிஸார் இடையே மோதல் ஏற்பட்டு தடியடியில் முடிந்தது.

## ஆஷஸ் டெஸ்ட்

# தொடரைச் சமநிலைப்படுத்த போராடுகிறது ஆஸ்திரேலியா

சிட்னி, ஜன. 04

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா அணிகள் மோதும் ஆஷஸ் டெஸ்ட் தொடரின் 5ஆவது போட்டியின் முதல்நாள் ஆட்டம் நேற்று சிட்னியில் ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வுசெய்தது. இதன்படி ஆரம்பவீரர்களாக வட்ஸன் - கியூஸ் களம்புகுந்தனர். பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்த ஜோடி நீண்ட நேரம் நிலைக்கவில்லை. வட்ஸன் 45 ஓட்டங்களுடன் பிரஸ்னன் வீசிய பந்துக்கு ஸ்டிராஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். கியூஸ் 31 ஓட்டங்களை எடுத்த நிலையில், றம்லட் வீசிய பந்துக்கு கொலிங்வூட்டிடம் பிடிகொடுத்து ஆட்மிழந்தார்.

அடுத்தடுத்துக் களம்புகுந்த கவாஜா 37 ஓட்டங்களை எடுத்து சுவான் வீசிய பந்துக்கு ட்ரொட்டிடம் பிடிகொடுத்து வெளியேறினார். மைக் கிளாக் 4 ஓட்டங்களை எடுத்து பிரஸ்னன் வீசிய பந்துக்கு அன்டர்ஸனிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அடுத்துக் களம்புகுந்த மைக் ஹஸி 12 ஓட்டங்களை எடுத்திருந்தபோது நேற்றைய ஆட்டம முடிவுக்கு வந்தது. உதிரி ஓட்டமாக அணிக்கு 5 ஓட்டங்கள் கிடைத்தன.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சாளர்களான ரம்லட் - 1, சுவான் - 1 ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் பிரஸ்னன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

நேற்றைய முதலாம் நாள் ஆட்டம முடிவின்போது ஆஸ்திரேலிய அணி 59 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களை எடுத்திருந்தது.

சொந்த மண்ணில் 24 ஆண்டுகளுக்கு பின் ஆஷஸ் தொடரை இழந்த சோகத்தில்



இருக்கும் ஆஸ்திரேலிய அணி, தோல்வியைத் தவிர்ப்பதற்காக இந்தப் போட்டியில் எழுச்சிகாண வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இந்தப் போட்டியில் வெற்றி பெற்றால் இத்தொடர் சமநிலையில் முடியும்.'

காயம் காரணமாக பொண்டிங் விலகிய நிலையில், அணித் தலைமைப் பொறுப்பை மைக்கேல் கிளார்க் ஏற்கிறார். பாகிஸ்தானில் பிறந்த உஸ்மான் கவாஜா அறிமுக வீரராக களமிறங்க உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VISA - வீசா
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA,
NEW ZEALAND, SWITZERLAND,
FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family
Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 734, Hospital Road, Jaffna.


## யாழ். மாவட்ட ஆபரணத் தொழிலாளர்களுக்கான அறிவித்தல்

இலங்கைத் கைத்தொழில் அபிவிருத்திச் சபை, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு, தேசிய வடிவமைப்பு நிலையம் என்பன இணைந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நவீன கைத்தொழில் பொருள்கள் கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தை ஜனவரி 10, 11, 12 திகதிகளில் நடைபெற உள்ளதால் எமது தொழிலாளர்களும் தங்களது நகை வடிவமைப்புகளான வெள்ளி, பவுண், கற்கள் பதித்த ஆபரணங்கள் இங்கு தயாரித்த தங்கமுலாம் பூசிய பொருள்கள் அனைத்தையும் காட்சிப்படுத்தவோ, சந்தைப்படுத்தவோ வாய்ப்புக் கிட்டியுள்ளது. எனவே தொழிலாளர்கள் தங்களின் கைவண்ணத்தில் அமைத்த பொருள்களை காட்சிப்படுத்த விரும்புபவர்கள் எதிர்வரும் 07.01.2011 திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.

தற்காலிக முகவரிக்கு
957, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்,
தொ.பே.: 0777166492

## ஓராண்டு நினைவலைகள்

### பொன்னர் யேசுதாஸன் சின்னத்துரை (மெக்கானிக்)



பிறப்பு: 19 - 09 - 1934
இறப்பு: 04 - 01 - 2010

'என்னை நேசித்தவர்கள் மரணத்திலும் மறவாதீர்கள்'

ஓராண்டு காலம் ஓடித்தான்
சென்றதோ அப்பா.....
உங்கள் புகழுடன் பூவுலகில் மறைந்து
ஓராண்டுதான் சென்றதோ அப்பா
எம்மை விம்மித் தவிக்கவிட்டு விரைந்
தீரே விண்ணுலகு .....



அன்புக்குரிய தந்தையின் ஆத்மா சாந்திபெற இன்று (04.01.2011) செவ்வாய்க்கிழமை யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் (O.L.R) காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அனைவரும் கலந்துகொண்டு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

64/1, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(108429)

S.அன்ரன் (மகன்)
(உரிமையாளர் மது மாதா எக்ஸ்பிரஸ்)
தொ.பே.: 0774726770, 0776184360

## மரண அறிவித்தல்

### திருமதி ஐயம்பிள்ளை மீனாட்சி

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை மீனாட்சி நேற்று முன்தினம் (02.01.2011) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்- வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு- தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் , ஐயம்பிள்ளை (தம்பிராசா) அவர்களின் பாசமிகு மனைவியும், இராசலெட்சுமி(கனடா), ஆனந்தராசா, இரஞ்சிதமலர், சிவானந்தராசா (ஜேர்மனி), சிவமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் சுந்தரெலட்சுமி, மகாசிங்கம், ரோகினி (ஜேர்மனி), சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் சூரியகலா, சந்திரகலா(கனடா), புஸ்பகலா (கனடா), ஜெயகலா (கனடா), சிவரூபன்(கனடா), நிதர்சன், நிவேதிகா, லஜீபன், அனோஜா, திவாகர், ஹிந்துஷா, சஞ்செயன், ஜானுஷா (ஜேர்மனி), அனோஜன்(ஜேர்மனி), சதுர்ஷா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், டர்மினி, சோபிகா, பபிஷா, ராதிகா, நதீசன்(கனடா), கிருஸ்ணவேணி (கனடா), டினோஜன் (கனடா), டிலக்ஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துவாரகை வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(108443)

தகவல்:
குடும்பத்தினர்.

## மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.4

உயரழுத்த மின் மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் காரணமாக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களிலும் -

நாளை மறுதினம் வியாழக்கிழமை கரந்தன், நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி ஆகிய இடங்களிலும் காலை 8 மணியில் இருந்து மாலை 5 மணி வரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மின் மார்க்க வேலைகள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக முடிவுற்றால் மின்விநியோகம் முன்னதாக வழங்கப்படும் என்று யாழ். பிரதேச மின்சார சபை அறிவித்துள்ளது. (ஓ-311)

## ஒரே நாளில் 280 பேருக்கு வாகன அனுமதிப் பத்திரம்

யாழ்ப்பாணம், ஜன.4

கோப்பாய் பிரதேச செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை மட்டும் 280 பேருக்கு வாகன வரி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் மேலதிக ஆளணியை சேவைக்கு அமர்த்தி மிக விரைவான சேவையை வழங்கியிருந்தார்.

(201- 313- 121)

## மத்திய வங்கி ஆளுநரின் உரை

கொழும்பு, ஜன.4

இலங்கை மத்திய வங்கியின் 2011 ஆம் ஆண்டுக்கும் அதற்கு அப்பாலுமான நிதி மற்றும் நிதித்துறை கொள்கைகள் தொடர்பான விளக்க உரை ஒன்றை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் கப்ரால் நிகழ்த்தவிருக்கிறார்.

இன்று முற்பகல் பத்து மணிக்கு கொழும்பு ஜனாதிபதி மாவத்தையிலுள்ள மத்திய வங்கியின் ஜோன் எக்ஸ்ரர் சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெறும்.


### பிரத்தியேக வகுப்பு

5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கான வகுப்புகள் மற்றும் 6 -11ஆம் தரம் வரையான கணித வகுப்புகள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொ.பே.இல: 0776992709

### வாடகைக்கு

கொக்குவில் கிழக்கில் சகல வளங்களுடன் CD கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0776366108

### பணிப்பெண் தேவை

வீட்டிலிருந்து பிள்ளையையும் தாயையும் பராமரிக்கக் கூடிய பணிப்பெண் உடனடியாகத் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0212222594

### தவறிவிட்டது

மந்துவில் வடக்கைச் சேர்ந்த சி.கனகம்மா என்பவரது தேசிய அ. அட்டை (427042545V) யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சி.கனகம்மா, மந்துவில் வடக்கு எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

### Personal Class

தரம் 3-A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class மற்றும் Spoken English with Grammar கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு:-பலாலி வீதி, திருநெல்வேலி. T.P - 0772764708

### German Swiss மொழிகள்

German Swiss மொழி வகுப்புகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றது. CD மற்றும் புத்தக விளக்கத்துடன் Germanyல் இருந்து வந்த ஆசிரியரால் நடை பெறுகிறது.
10, Palaly Road, Jaffna. T.P. 0771604823.

### கணினி விற்பனைக்கு

P-IV, 2.4GHZ முழுமையான கணினி ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு. விலை 18,750/= மற்றும் கணினி சம்பந்தமான Printer, UPS, Dongle, Pendrive, I-3 LapTop, I-3 Desktop, Dualcore கணினிகள் என்பனவும் மலிவு விலையில் 3 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: Sky Computer System
162, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(டேவிட் பீரிஸ் முன்பாக) 021 222 1417.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சோமசுந்தரம் இராஜலட்சுமி



யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, நீராவியடியைப் பிறப்பிடமாவும் வண்ணார் பண்ணை ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா, பூந்தோட்டத்தில் வசித்தவருமான திருமதி சோமசுந்தரம் இராஜலட்சுமி 02.01.2011 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் (ராஜன் அரிவு மில்) அவர்களின் அன்பு மனைவியும் கனகராஜா (பவா), நளினி, கோகிலதாஸ், குகதாஸ், றஜனி, தயாளினி, கமலதாஸ், குமரதாஸ், சர்மினி ஆகியோரின் அன்புத் தாயாரும் அகிலா, குகதாஸன், றஜிதா, சிவநேசன், ஜெயக்குமார், சங்கீதா, தர்சினி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.01.2011) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியார்குளம்,
பூந்தோட்டம்,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.

### சுப்பிரமணியம் சண்முகராசா (சண்முகம்)



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகராசா நேற்று (03.01.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை.
T.P-0213008693,
0778215288

தகவல்:
குடும்பத்தினர்-
சு.தெய்வேந்திரம்(சகோதரன்)
சுப்பிரா உணவகம், சங்கானை

(108430)

### கந்தர் ஜெயபாலசிங்கம்

(முன்னாள் அதிபர், கரணவாய் விநாயகர் வித்தியாலயம், கரவெட்டி.)



கரவெட்டி, துன்னாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் ஜெயபாலசிங்கம் 02.01.2011 ஞாயிற்றுக்கிழமை காலை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிதம்பரநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் இளைப்பாறிய ஆசிரியை அரியநாயகத்தின் (கட்டைவேலி மெ.மி.த.க. பாடசாலை) அன்புத் துணைவரும், காலஞ்சென்ற ஜெயக்குமார் (பொறியியலாளர்) மற்றும் ஜெயதேவன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), ஜெயந்திமாலா (U.K), ஜெயஸ்ரீ (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.01.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும், பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரூண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காந்தி வீதி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

தகவல்: மனைவி
திருமதி அரியநாயகம் ஜெயபாலசிங்கம்.

### செல்வி ரட்ணசிங்கம் யசோதா



ஆலங்குழாய், சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ரட்ணசிங்கம் யசோதா 02.01.2011 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ரட்ணசிங்கம்- ஞானமலர் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், சுபத்திரா, கந்தகுமார்(ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், க.மோதுவர்தனி(மாணவி, யாழ். மகாஜனக் கல்லூரி) க.நிஷாந்தினி (மாணவி, யா/மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.01.2011) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.
தொ.பே.: 0728954801

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மேம்படுத்த இந்தியாவிடம் அதிகம் எதிர்பார்க்கிறது இலங்கை

கொழும்பு, ஜன. 4

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட - தமிழர்கள் செறிந்து வாழும் - பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவிடமிருந்து அதிகம் எதிர்பார்ப்பதாக அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார்.

''தமிழர் பகுதிகளின் அபிவிருத்திக்காக இந்த நாடு இந்தியாவிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கிறது. தமிழ்நாட்டு முதல்வர் கருணாநிதிக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் சுமூகமான உறவு நிலவிவருகிறது. தமிழர்கள் மீண்டும் தங்களை வளர்த்துக்கொள்வதோடு பிரதான அரசியல் நீரோட்டத்தில் இணைந்துகொள்ள வேண்டும்'' என்றார் அமைச்சர் பௌசி.

மேற்கு மாகாண சபையின் ஆளுநர் சைத் அலவி மௌலானவினது உறவினர் ஒருவர் திருமண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இந்தக் கருத்தினை முன்வைத்தார்.

''எந்தவொரு நாட்டினது தூண்டுதலின் அடிப்படையிலும் இலங்கை ஒருபோதும் இந்தியாவிற்கு எதிராகச் செயற்படாது. இலங்கையில் உறுதியான அமைதி நிலவுவதனாலேயே தமிழர்களுக்காக 50,000 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு இந்தியா முடிவெடுத்திருக்கிறது'' என அவர் தொடர்ந்து தெரிவித்தார்.

மேற்கு மாகாண ஆளுநர் மௌலானா உரையாற்றுகையில், இலங்கை அரசும் தமிழர்களும் கடந்த காலத்தில் இடம்பெற்றவைகளை மறந்துவிட்டு எதிர்கால வாய்ப்புக்கள் தொடர்பாகவே ஆராய்ந்துவருகிறார்கள் என்றார்.

''கடந்த காலம் கடந்தது தான். எதிர்காலத்தில் இடம்பெற விருப்பவை எவையோ அவற்றை சிறந்ததாக்குவோம்'' என்றார் அவர்.

தமிழர்களது நல்வாழ்வுக்காகவும் அவர்களது புனர்வாழ்வுக்காகவும் ஜனாதிபதி ராஜபக்ஷ வேறுபட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதால் மஹிந்தவிற்கும் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் இடையிலான புரிந்துணர்வு சிறப்பாக உள்ளது என்றார் அவர்.

இலங்கை - இந்திய நாடுகளுக்கு இடையில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கும் கப்பல் போக்குவரவானது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவினை மேலும் வலுப்படுத்தும் என்றார் அவர். (உ)

## ஸ்ரீதுர்க்கா சனசமூக நிலையம் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜன.4

கடந்த இருபது வருடங்களாக இயங்காது இருந்த புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்கா சனசமூக நிலையத் திறப்பு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இப்பகுதியில் மக்களை மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டதை அடுத்தே புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்று நிலையம் இயங்க ஆரம்பித்துள்ளது.

தலைவராக செ.வசீகரன், செயலாளராக இ.கெங்காதரன், பொருளாளராக ந.செல்வரத்தினம், உப தலைவராக த.நவராஜன், உப செயலாளராக கு.சந்திரதாஸ் ஆகியோரும் 17பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. தரிவித்துள்ளார்.

(ற)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று இந்திய அறிஞர்கள் கருத்துரை

யாழ்ப்பாணம், ஜன.4

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்கில் தமிழ்நாடு பாண்டிச்சேரி பல்கலைக்கழகப் பீடாதிபதி பேராசிரியர் சம்பந்தன் மற்றும் அப் பல்கலைக்கழக காந்திக் கல்வி நிறுவன இயக்குநர் பேராசிரியர் மூர்த்தி ஆகியோர் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியல்துறை விரிவுரை மண்டபத்தில் கருத்துரை வழங்கவுள்ளனர்.

பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி. சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த கருத்தரங்கில் பேராசிரியர் சம்பந்தன் ''உலகலாவிய நிதி நெருக்கடிகளின் விளைவுகளும், அமெரிக்க சீன நாடுகளுக்கிடையிலான நாணயப் போர்கள்'' என்ற தலைப்பிலும் பேராசிரியர் மூர்த்தி '' உலகலாவிய சமாதான வாய்ப்புக்களும் 21ஆம் நூற்றாண்டுக்கான சவால்களும்'' என்ற தலைப்பிலும் உரையாற்றவுள்ளனர். இக் கருத்தரங்கில் ஆர்வலர்கள் கலந்து பயன் பெறுமாறு பொருளியல் துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இக் கருத்துரை நேற்று இடம் பெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதும் அது நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ( ஒ-86)

## கண்டனப் பேரணி நடத்த அனுமதிக்குக!

யாழ்ப்பாணம்,ஜன.4

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துள்ள கொலைகள், கொள்ளை, ஆள்கடத்தல் போன்ற சம்பவங்களைத் தடுத்து நிறுத்தக் கோரி கண்டனப் பேரணி ஒன்றை நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு யாழ். அரசஅதிபருக்கு 'மக்கள் சக்தி' என்னும் அமைப்பு கடிதம் அனுப்பியுள்ளது.

மக்கள் சக்தி அமைப்பின் முக்கியஸ்தர் எம்.குமாரவேலு இது தொடர்பான கடிதத்தை அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் ''குடாநாட்டில் அதிகரித்துள்ள கொலைகள், கொள்ளை, ஆள் கடத்தல் சம்பவங்களால் மக்கள் மத்தியில் பெரும் பீதி நிலவுகின்றது.

இவ்வாறான நிலைமையை வெளியுலகுக்குத் தெரிவிக்கும் வகையில் கண்டனப் பேரணியை நடத்த அனுமதிக்க வேண்டும்'' என்று அதில் கேட்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்துக்கு பதிலளித்துள்ள அரச அதிபர்; ''குற்றச் செயல்களை தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் உள்ளது. எனவே இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளின் உயர் மட்டங்களுடன் கலந்துரையாடியுள்ளேன். குற்றச் செயல் விடயங்களுக்கு நான் பொறுப்பாளியல்ல'' எனத் தெரிவித்துள்ளார். (ஒ-10-14)

## கித்துள் உற்பத்திப் பொருள்களை அமெரிக்காவுக்கு அனுப்ப ஏற்பாடு

கொழும்பு, ஜன.4

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு முயற்சிகள் அமைச்சு கித்துள் உற்பத் திகளை அமெரிக்காவுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்துள்ளது என அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சீனிக்கு பிரதியீடாகப் பயன்படுத்தக் கூடிய கித்துள் பாணி, சர்க்கரை என்ப வற்றுக்கு நல்ல சந்தை வாய்ப்பு உள்ளது என அமைச்சின் செயலாளர் சிவஞானஜோதி தெரிவித்தார்.இந்த உற்பத்திகளுக்கான ஸ்ரீலங்கா நியமங்கள் நிறுவனத்தின் தர உத்தரவாதத்தை பெறும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதே வேளை கித்துள் பாணியில் சீனி கலப்படம் செய்வது அதிகம் நடைபெறுகின்றது என்றும் செயலாளர் குறிப்பிட்டார்.

இதுவரை இந்த ஏற்றுமதி வாய்ப்புகள் பயன்படுத்தப்படவில்லை. கித்துள் உற்பத் திகளுக்கு உலகளவில் நல்ல விலை கிடைக்கும். இலங்கையில் உள்ள பல லட்சம் கித்துள் மரங்களில் குறைந்தளவான மரங்களிலிருந்தே பயன்கள் பெறப்படுகின்றன. கித்துள் மரங்களை உச்ச பயன் பாட்டுக்கு கொண்டுவரின் ஏற்றுமதி தடங்கலின்றி நடைபெறும் இவ்வாறு அமைச் சின் செயலாளர் தெரிவித்தார்.

## வீதி புனரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.4

நல்லூர்ப் பிரதேச சபையின் வீதிகள் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேற்படி பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

பிரதேச சபையின் பதினொரு வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதாகவும் இதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டு நில அளவை வேலைகள் தற்சமயம் இடம் பெற்று வருகின்றன. வீதிப் புனரமைப்பு வேலைகளை யூரோவில் நிறுவனம் மேற்கொள்ளும் எனவும் பிரதேச சபைச் செயலாளர் மே.சாந்தசீலன் தெரிவித்துள்ளார். (201-7)

## குடாநாட்டை அச்சுறுத்தும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

''தேசிய அளவில் முக்கியத்துவம் மிக்க இந்தப் பிரச்சினை தொடர்பில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றுவதற்கான சந்தர்ப்பத்தைத் தருமாறு சபாநாயகரிடம் கோரியுள்ளோம். இதற்கான பதிலையும் சம்பந்தப்பட்டவர்கள் உடன் தரவேண்டும் என்றும் கேட்டுள்ளோம்'' - என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

கூட்டமைப்பின் அறிக்கைக்கான பதிலை பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியே வழங்க வேண்டும். எனினும் அவர் நாடாளுமன்றுக்கு வருகை தர மாட்டார் என்பதால், அவர் சார்பில் பிரதமரே வழங்க வேண்டும். ''அவர் பதிலளிப்பதற்கு ஏற்றவாறு அறிக்கையைச் சிங்களத்தில் மொழி பெயர்ப்பதற்கு கால அவகாசம் தேவை என்பதால் ஒரு நாள் கழித்து நாளையே கவனயீர்ப்புப் பிரேரணை நாடாளுமன்றுக்கு வரும்'' என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்தார்.

''முன்வைக்கப்படுகிற கவனயீர்ப்புப் பிரேரணையின்போது யாழ். குடாநாட்டு நிலைமை தொடர்பில் எழுப்பப்படும் கேள்விகளுக்குப் பதிலளிக்கக் கூடிய கடப்பாடு சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு உள்ளது. எனவே, பிரேரணைக்கு முன்னதாகவே அது தொடர்பிலான அறிக்கைகளை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன'' - என்றார் அவர்.

கடந்த இரண்டு மாதங்களாக யாழ். குடாநாட்டில் என்ன நடந்தது? நடந்து வருகின்றது? கொலைகளையும் கொள்ளைகளையும் ஆள் கடத்தல்களையும் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது; எடுக்கப் போகிறது என்ற விவரங்கள் பிரதமரின் பதிலில் இடம் பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ)

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிய தேவை இப்போது இல்லை. இதனால் இந்தச் சட்டமூலத்தைப் பிற்போடுமாறு நாம் அரசைக் கேட்கின்றோம்.

இதை நிறுத்தி விட்டு காலத்தின் தேவைக்கேற்ற விடயங்களை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவர வேண்டும். நாட்டில் வெள்ளப் பிரச்சினை உட்பட பல பிரச்சினைகள் உள்ளன. அவைபற்றி இப்போது விவாதிப்பது நல்லது.

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலைப் பொறுத்தவரை எமது கட்சியினர் பக்கம் வெற்றி வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எமது கட்சி யாப்பு மறுசீரமைக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அரசின் செயற்பாட்டால் அதிருப்தியடைந்திருக்கும் இந்நாட்டு மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிபீடமேற்றக் காத்திருக்கின்றனர். வெற்றியை நோக்கியே எமது செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

- இவ்வாறு ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

## தேங்காய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடவடிக்கையை அரசு எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

தேங்காய்க்கு நாட்டில் ஏற்பட்ட கடும் தட்டுப்பாட்டை அடுத்து அதனைக் கேரளாவில் இருந்து இறக்குமதி செய்ய வர்த்தக அமைச்சு முடிவு செய்தது. ஆனால் அவ்வாறு செய்வது சட்டவிரோதமானது என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி. சில்வா தெரிவித்தார்.

''இலங்கையின் செடிப் பாதுகாப்புச் சட்டத்தின்படி அத்தகைய இறக்குமதிகளை அரசு மேற்கொள்ள முடியாது. அதனால் பல்வேறு நோய்கள் இங்கு பரவக் கூடும்'' என்றார் அவர்.

கேரளாவில் பொதுவாகவே தென்னைகள் 'கேரளவில்ற்' என்ற நோயினால் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய எதிர்ப்புக்களை அடுத்து தேங்காய் இறக்குமதித் திட்டத்தை அரசு ஒத்தி வைத்திருப்பதாகத் தகவல் அறிந்த [illegible] தெரிவித்தன. ([illegible])

## ஐ.தே.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு மக்கள் மத்தியில் புது எதிர்பார்ப்பொன்று தோன்றியுள்ளது. அடுத்த அரசு ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு தான் என்று மக்கள் நம்பியிருக்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிபீடமேற்ற அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

புதுவருடப் பிறப்புடன் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய ஐந்து நிர்வாகிகளை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். இந்த மாதம் கூடும் கட்சியின் செயற்குழு, நிர்வாகிகளை நியமிப்பது உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பா அல்லது பின்பா என்று முடிவெடுக்கும்.

செவ்வாய்க்கிழமை காலை தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நாடாளுமன்றக் குழு அறையில் எம்.பிக்களுடனான கலந்தாலோசனை ஒன்று இடம்பெறும். அக்கலந்தாலோசனையின்போது செயற்குழுவை எப்போது கூட்டுவதென்று முடிவெடுக்கப்படும்.

- இவ்வாறு கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரத் பொன்சேகா போட்டியிட்டமை தெரிந்ததே.

யுத்தத்தை வெற்றிகொண்ட முன்னாள் இராணுவத் தளபதியை அரசியல் கைதியாக ஜனாதிபதி சிறையில் வைத்திருப்பதற்கு ஜனநாயக ரீதியில் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே அனோமா பொன் சேகாவை தேர்தலில் நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாசார சீரழிவுகள் மட்டுமன்றி தமிழர் பண் பாட்டை அசிங்கப்படுத்தும் செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.

எனவே மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் பொலிஸார் உடனடியாக கடும்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாறும் சம் பந்தப்பட்டவர்களை கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளேன் -என்றார் யாழ். அரச அதிபர். (ஒ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.


யாழ் மக்களுக்காக! online யாழ் - கொழும்பு Bus Booking

bus.onlinejaffna இணையத்தினூடாக அருகிலுள்ள NET CAFE களில் தேவையான ஆசனங்களை எதுவித சிரமமின்றி உடனே பதிவு செய்து கொள்ளலாம்.

Web : bus.onlinejaffna.com www.Onlinejaffna.com

**பிரத்தியேக வகுப்புக்கள்**

**O/L 2011,**
தரம் 10, 9 மாணவர்கட்கு கணிதம் Aக்கு
✱ சங்கர் ஆசிரியரினால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்
தொடர்பு:
T.P: 0776597370

**அனுசரணை**
Director
New Science Hall
Kannathidy, Jaffna.

**சாவகச்சேரிஓ.பி.டி. இரவு 8 மணி வரை**
சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் நேற்றுத் தொடக்கம் இரவு 8 மணிவரை வெளிநோயாளர் பிரிவு இயங்குகிறது. (ஓ-207)

**A/L 2003**
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஜனவரி - 08
காலை - 08.00
**DMI**

**OXFORD EDUCATION CENTER**
நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி.
01- தொடக்கம் அனைத்து வகுப்புக்களுக்கும்
ஆங்கில வகுப்புக்கள் மட்டும்
ஆரம்பம்:- 05.01.2011
புதன் மாலை: 5.00 மணி

**றோயல் அக்கடமி**
நாவலர் வீதி, நல்லூர்.
தரம் 6 முதல் O/L வரை
English Medium
தமிழ் மொழி மூலம்
புதிய அனுமதிகள் வழங்கப்படுகிறது.

**UK இல் கல்வி பயில ஓர் அரிய சந்தர்ப்பம் Jan/Feb**
Study in UK
✱ இரண்டு வழி முறைகள்
I வாரத்துக்கு 20 hrs வேலைவாய்ப்புடன்
II வாரத்துக்கு 10 hrs வேலைவாய்ப்புடன்
அரச அங்கீகாரம் பெற்ற London City Lout of City உள்ள பிரதான கல்லூரிகள், பல்கலைக்கழகங் களில் IELTS அவசியமற்ற நடைமுறையில், நம்பிக்கைமிக்க தெரிவான வழிநடத்தலுடன் உள்ள நிறுவனம்.
✱ வீசாக்களைப் பெற்றுக்கொள்ளும் முன்னரே வீசா நிராகரிக்கப்பட்டோருக்கான இலவச சேவை
தொடர்புகளுக்கு :- European College of higher studies, 315 ½, Parameaswara Junction, Palaly Road, Jaffna.
Tel :- 0776327623, 0750488405, 0213734747
E-mail :- asmy-echs@yahoo.com

**A/L 2013**
கலை, வர்த்தக, கணித விஞ்ஞானம்
05.01.2011
புதன் மாலை 4.30
**SUBRA**
சித்தன்கேணி - வட்டுக்கோட்டை

**வேலையாள்கள் தேவை**
1) மேசன் வேலையாளர்கள்
2) கூலி வேலையாளர்கள்
உடன் தேவை, நேரில் வரவும்
**TILKO JAFFNA CITY HOTEL**
*(Pvt) Ltd*
*70/6, K.K.S. ROAD,*
*JAFFNA.*

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**AAT** (Sri Lanka)
Fundation, Intermediate & Final
Medium :- English & தமிழ்
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 08.01.2011 சனிக்கிழமை 8.00 A.m
★ க.பொ.த (உ/த) பரீட்சையில் 6 சித்திகளுடன் உங்கள் பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளவும்.

**Certificate Course in English**
Five Batches have Successfully completed the Course. 6th Batch will be Commenced on 08.01.2011
*Day Classes : Monday & Friday*
*Weekend Classes : Saturday & Sunday*

**External Degree** (Jaffna University)
G.A.Q., B.A. 1 & B.A. Final
1st in Com, B.com (I&II), Final
ஆரம்பம் : 08.01.2011 (Saturday) 9.00 A.M.

**சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சை**
✱ 35 வயதுக்குட்பட்டவர்கள்
✱ G.C.E. (O/L) ஆங்கிலம், தமிழ் "C" சித்திகள்.
✱ A/L பரீட்சையில் சித்தி
ஆரம்பம் : 08.01.2011 (Saturday) 11.00 A.M.

JAFFNA COLLEGE · 1823 · CEYLON · 1872
Further Details :
Director,
**Jaffna College Undergraduate Dept.,**
464, Hospital Road, Jaffna. (சி/574311)

**கணிதம் கடினமானதல்ல**
A/L இணைந்த கணிதம்
P.விமலநாதன் B.Sc (Spl. Maths)
2013 - அடிப்படைக் கணிதம் 8am
2012 - இருபடிச் சமன்பாடு 9am
2011 வட்டம் 11.30am
வரிசை மாற்றம், சேர்மானம் 7am
2012 - Eng. medium 9 am
ஆரம்பம் 08.01.2011 சனி
N.E.W ஆனைப்பந்தி

| மின்னியல் | 2011 A/L | காந்தப்புலம் |
|---|---|---|
| I. Tue, Thu 6AM | | Wed, Fri 6AM |
| II. Sat, Sun 6 AM | | Sat, Sun 10AM |
| III. Tue, Thu 3PM | | Wed, Fri 5PM |

By:- M.கருணாநிதி (B.Sc (Spl)

**திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டமாணி கற்கைநெறி நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டி**
தொகுப்பு:- த. தவரேசுர்
★ பிரபல புத்தக நிலையங்களிலும், வகுப்பிலும் ரூபா 150ற்குப் பெற்றுக்கொள்ளலாம்.
★ வழிகாட்டல் வகுப்புகள் யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் நடைபெறுகின்றன.

**திருநெல்வேலியில் மேல்மாடி வீடு வாடகைக்கு**
பலாலி வீதியில் நவீன முறையில் அமைக்கப்பட்ட நான்கு அறைகள் கொண்ட மாபிள் பதிக்கப்பட்ட HALL, சமையல் அறை, குளியல் அறை சகல வசதிகளும் கொண்ட மேல்மாடி வீடு மட்டும் வாடகைக்கு விடப்படும். அலுவலக உபயோகத்துக்கு விரும்பத்தக்கது.
தொடர்பு :- K.யோகராஜா 0213210423

**Canada Migration**
✱ நிரந்தர விதிவிடவாளராக சட்டரீதியாக அனைத்து ஆவணங்களும் பூர்த்தி செய்து தரப்படும்.
✱ Canada விற்கான Student VISA
✱ Canada விற்கான Worked Permit
✱ Canada விற்கான அனைத்து Refuees ஆவணங்களும் சட்டவல்லுநர்களால் பூர்த்தி செய்யப்பட்டு வீசா பெற்றுத் தரப்படும்.
✱ எமது சேவை தலைநகரிலும் யாழிலும்
தொடர்புகளுக்கு :- European College of higher studies, 315 ½, Parameaswara Junction, Palaly Road, Jaffna.
Tel :- 0776327623, 0750488405, 0213734747
E-mail :- asmy-echs@yahoo.com

# NEW SCIENCE HALL
KANNATHIDDY JAFFNA
**2013 A/L**
**கணித, உயிரியல் பிரிவு**
தமிழ்மொழி மூலம் ENGLISH MEDIUM

**PHYSICS**
✱MR. S. SOTHILINGAM
✱MR. R .KUMARAN
✱MR. R .KUGAN

**CHEMISTRY**
✱MR.N. MAHESWARAN
✱MR.K. SIVATHIRAN

**BIOLOGY**
✱MR. T. THAMBIRAJAH
✱MR. T. GENGATHARAN
✱MR.M. ALPHONS
✱ வழமையான ஆசிரியர்

**COM. MATHS**
✱MR.S. SENTHILRAJ
✱MR.P. SENTHILNANTHAN

**ஆரம்பம்:- 05.01.2011 - TIME: 8.30 a.m**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.